கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

172

வைகாசி 2022

சிறப்பிதழ்

100/-

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

## சீமான் பத்திநாதன் பர்ணாந்து சிறப்பிதழ்

16 AUG 2022

அருட்திரு தமிழ்நேசன் அடிகளார்
துறையூரான் எம் சிவானந்தன்
சீமான் பத்திநாதன் பர்ணாந்து
எஸ்.கே.விக்னேஸ்வரன்
சூசைதாசன்
பத்திநாதன்
புலோலியூர் வேல் நந்தகுமார்
த.அஜந்தகுமார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

கலை இலக்கிய மாத சஞ்சிகை

2022 - வைகாசி - சிறப்பிதழ்

# பொருளடக்கம்

## கட்டுரைகள்

**கலைஞர் பத்திநாதன் பர்ணாந்து அவர்களின் வாழ்வும், வரலாறும், படைப்புகளும் ஒரு வெட்டுமுகப் பார்வை**

அருட்திரு தமிழ்நேசன் அடிகளார்......... 03

**சீமான் பத்திநாதன் அவர்களின் நாவல்கள் ஓர் அசைபோடும் அலசல்**

துரையூரான்.......................................... 09

**குஞ்சரமூர்ந்தோர்: ஒரு மிகச்சிறந்த நாவல் மட்டுமல்ல; மக்களது வாழ்வியலின் பண்பாட்டு ஆவணமும் கூட**

எஸ்.கே.விக்னேஸ்வரன்............................ 19

**மக்களை எழுதிய கலைஞன் பத்திநாதன் பர்ணாந்து**

சூசைதாசன்.............................................. 24

**சீமான் பத்திநாதன் எழுதி வெளியிட்ட "64 டிசம்பர் 22"**

பத்திநாதன்........................................... 27

**எண்பதுகளின் இனப் பொர்ப் பின்னணியில் மன்னார் பிரதேச கடலோர மக்களின் அகப்பற வாழ்வியல் தரிசனமாய் விரியும் திசையாப் பயணங்கள் நாவல் குறித்த ஒரு பார்வை**

புலோலியூர் வேல் நந்தகுமார்.......... 28

**வாழ்க்கையெனும் கூத்தினை எழுதிய கதை: பத்திநான் பர்ணாந்துவின் "கூத்துப்பபடிச்ச கதை"**

த.அஜந்தகுமார்........................................ 37



**சிறுகதை**

சீமான் பத்திநாதன் பர்ணாந்து - 14




**நேர்காணல்**

சீமான் பத்திநாதன் பர்ணாந்து -30



**கவிதை**

சீமான் பத்திநாதன் பர்ணாந்து - 36

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜீவநதி

**2022 வைகாசி இதழ் - 172**

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் குழு:**
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து
ஆக்கங்களின் கருத்துக்களுக்கும்
அவற்றை எழுதிய ஆசிரியர்களே
பொறுப்புடையவர்கள்.



## ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 1500/=
வெளிநாடு - $ 60U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில்
மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY



# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-


## ஒளிர்ந்து கொண்டிருக்கும் நாவலாசிரியர் சீமான் பத்திநாதன் பர்ணாந்து

மன்னார் பிரதேசத்தை சேர்ந்த சீமான் பத்திநாதன் பர்ணாந்து அவர்கள் ஈழத்து இலக்கிய வரலாற்றி குறிப்பிட்டுக் கூறக்கூடிய நாவலாசிரியராக திகழ்கிறார். அண்மைக்காலத்தில் தான் இலக்கியத்துறைக்குள் காலடி எடுத்து வைத்த போதிலும் மிக அருமையான நாவல்களை இலக்கிய உலகிற்கு தந்து பெரும் புகழையும் பாராட்டையும் பெற்றுக் கொண்டுள்ளார். கடலையே நம்பி வாழும் மக்களது இடர் நிறைந்த வாழ்வியல் கோலங்களை தன் நாவல்கள் ஊடாக வெளியுலகிற்கு கொண்டு வந்துள்ளார். மன்னார் மண்ணின் பண்பாட்டை, பழக்கவழக்கங்களை, பாரம்பரியங்களை இவரது எழுத்துக்கள் மூலம் தரிசிக்க முடிகின்றது. அதிக விபரிப்புகள், அலட்டல்கள் இல்லாத கட்டிறுக்கமான படைப்புகளாக இவரது படைப்புகள் விளங்குகின்றன.

கூத்து நடிகராகவும், அண்ணாவியாராகவும் 40 ஆண்டுகளுக்கு மேலாக செயற்பட்டு வருகின்றார். கூத்து அனுபவங்களே இவரை தலைசிறந்த ஒரு நாவலாசிரியராக மாற்றியுள்ளது எனக்கூட கூறிக் கொள்ளலாம். நல்லதொரு கூத்துக்கலைஞன் நாவலாசிரியராக மாற்றம் காணும் போது அவரது எழுத்தின் வீச்சின் சுவை சிறப்பாக அமையும். இதை நாம் சீமான் பத்திநாதன் பர்ணாந்து அவர்களது எழுத்தில் காண்கின்றோம்.

சீமான் பத்திநாதன் பர்ணாந்து அவர்கள் கூத்துக்களுக்காக பல்வேறு விருதுகளைப் பெற்றுள்ளார். மன்னார் பிரதேசத்தில் கூத்துக்களை அழிய விடாது பாதுகாத்து வருபவர்களில் முதன்மையானவராக திகழ்கின்றார். நாகரிக மோகத்தால் எமது பண்பாட்டு அம்சங்கள் அழிந்து வருகின்ற சமயத்தில் இன்னமும் கூத்துக்காக தன் வாழ்நாளை அர்ப்பணித்து செயற்பட்டு வருகின்றார். இலக்கியத்திற்கான கலாபூஷணம் விருது, முதலமைச்சர் விருது, மற்றும் நாவல்களுக்கான பல விருதுகள் என்பவற்றை பெற்று மன்னார் பிரதேசத்துக்கு பெருமை சேர்த்துள்ள கொண்டாட்டத்துக்குரிய படைப்பாளியாக திகழ்கின்றார். பழகுபவர்களுடன் மிக இனிமையாகவும் எளிமையாகவும் பழகக் கூடிய நல்லதொரு மனிதராக விளங்குகின்றார். அன்னாரது சிறப்பிதழை வெளியிடுவதையிட்டு ஜீவநதி பெரும் உவகை அடைகின்றது.

- க.பரணீதரன்


**ஆண்டுக்கு 24 ஜீவநதி இதழ்கள் வெளியாகவுள்ளதால்**
**ஓராண்டுக்கான சந்தா 24 இதழ்கள் - 3000.00(12 சிறப்பிதழ்கள்)**
**அரையாண்டு சந்தா 12 இதழ்கள் - 1500.00( 6 சிறப்பிதழ்கள்)**

ஜீவநதி கிடைக்கும் இடங்கள்/ விற்பனையில் உதவுவோர்
1. புத்தகக்கூடம் - திருநெல்வேலி
2. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், கொழும்பு செட்டித்தெரு
3. பரணி புத்தகக் கூடம் - நெல்லியடி
5. பண்டாரவன்னியன் புத்தகசாலை - வவுனியா
4. அ.யேசுராசா
5. புத்தகப்பண்பாட்டுப் பேரவை
6. மு.யாழவன்- திருகோணமலை,
7. கந்தர்மடம் அ.அஜந்தன்
8. சி.ரமேஷ்
9. நா.நவராஜ்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

■ அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார்

# கலைஞர் பத்திநாதன் பர்ணாந்து அவர்களின் வாழ்வும் வரலாறும் படைப்புக்களும் ஒரு வெட்டுமுகப் பார்வை

**முன்னுரை**

திரு. பத்திநாதன் பெர்னாண்டோ அவர்கள் கலைத்துறையிலும் இலக்கியத்துறையிலும் கால்பதித்த ஒரு கலை இலக்கிய ஆளுமை. ஆரம்பத்தில் நாடகங்களை எழுதுவதில் ஆர்வம் காட்டிய இவர் பின்னாளில் புனைகதை இலக்கியம் படைப்பதில் தீவிர கவனம் செலுத்தினார். இவருடைய வாழ்வையும் வரலாற்றையும் படைப்புக்களையும் ஒரு வெட்டுமுகப்பார்வையில் நோக்குவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.



**வாழ்க்கை வரலாறு**

கலைஞர் சீமான் பத்திநாதன் பர்னாந்து அவர்கள் மன்னார் மாவட்டம் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள வங்காலைக் கிராமத்தைச் சேர்ந்தவர். கிறிஸ்தவர். இவர் 1950ஆம் ஆண்டு வைகாசி மாதம் 31ஆம் திகதி பிறந்தார். தந்தை ஆரோக்கியம் சீமான் பர்னாந்து. தாய் சுவக்கீன் சந்தாள் மிராண்டா. மனைவி அமல உற்பவி லெம்பேட். இவருக்கு ஏழு பிள்ளைகள். மூன்று ஆண்கள். நான்கு பெண்கள்.

இவர் வங்காலை மகாவித்தியாலயத்தில் தன் ஆரம்பக் கல்வியையும் இடைநிலைக் கல்வியையும் கற்றார். பின்னர் எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரியில் தனது உயர்தரக் கல்வியைக் கற்றார். பாரம்பரியக் கத்தோலிக்க கிராமத்தில் பிறந்து வளர்ந்த திரு. பத்திநாதன் அவர்கள் சில அகமுரண்பாடுகள் காரணமாக எண்பதுகளின் இறுதிப்பகுதியில் இலங்கை பெந்தகோஸ்து திருச்சபையில் சேர்ந்தார்.

இவர் தனது 17ஆவது வயதிலேயே கலைத்துறையில் ஈடுபாடு காட்டத்தொடங்கினார். இவர் எழுதிய முதல் கலைப்படைப்பு "சவுலும் பவுலும்" என்ற கூத்து நாடகம் ஆகும். இது 1976ஆம் ஆண்டு எழுதப்பட்டது.

வங்காலையைச் சேர்ந்த அமரர் ஆசிரியர் பிரான்சிஸ் சவேரியான் லெம்பேட், அமரர் ஆசிரியர் தொபியாஸ் மக்சிமஸ் லெம்பேட், அமரர் ஜெரோம் ஜெயசீலன் டலிமா, அமரர் ஆரோக்கியம் சீமான் பர்னாந்து ஆகியோர் இவருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைத்துறை ஈடுபாட்டுக்கு காரணமாக இருந்துள்ளனர்.

அமரர் பிரான்சிஸ் சவிரியான் லெம்பேட் அவர்கள் உருவாக்கிய "வங்காலை கலை கலாச்சார மன்றத்தின்" உறுப்பினராக இவர் இருந்தார். இவருடைய முதல் நாட்டுக்கூத்தில் இருந்து அனேகமாக இவருடைய எல்லா நாடகங்களும் இந்த மன்றத்தின் ஊடாகவே மேடையேற்றப்பட்டன. ஒரு கட்டத்தில் திரு. சவேரியான் லெம்பேட் அவர்கள் வயோதிபத்தினால் தளர்வடைந்துபோக, அவரால் நாடகங்கள் மேடையேற்ற முடியாத நிலை ஏற்பட்ட போது இவருடைய நாடகங்களே கலை கலாசார மன்றத்தின் மூலம் மேடையேற்றப்பட்டமை குறிப்பிடத் தக்கது.

அமரர் பிரான்சிஸ் சவிரியான் லெம்பேட் அவர் களின் இறப்பிற்குப் பிறகு இம்மன்றத்தின் போசகராக இவர் இருந்துவருகின்றார். "வங்காலை கலைஞர் வட்டம்" என்ற அமைப்பிலும் அங்கம் வகித்தவர். பிறப்பு, இறப்பு விவாகப் பதிவாளராக இன்றுவரை பணியாற்று கின்றார். இவர் பல்துறைக் கலைஞராகவும் இலக்கிய வாதியாகவும் திகழ்கின்றார்.

நாடகங்களை எழுதிக்கொண்டிருந்த திரு. பத்திநாதன் எப்படி திடீரென நாவல் இலக்கியத்தில் கால்பதித்தார் என்ற கேள்வி எழுகின்றது. 2014 - 2016 காலப்பகுதியில் இவர் மிகவும் நோய்வாய்ப்பட்டிருந்தார். இவருக்கு மூளையில் கட்டி வளர்ந்து மூளையை அழுத்திக்கொண்டு இருந்த சூழ்நிலையில் ஒரு கையும் காலும் இயங்காமல்போய்விட்டது. எந்தவிதமான நடமாட்டமும் இல்லாத நிலையில் வீட்டில் முடங்கிப் போய் இருந்தார். இக்காலத்தில் பிள்ளைகள் கொடுத்த ஊக்கம் காரணமாகவே இவர் தனது முதலாவது நாவலான "கூத்துப் படிச்ச கதை" என்ற நாவலை எழுத ஆரம்பித்தார். எதிர்பாராதவிதமாக அந்த நாவல் வெற்றிபெறவே தொடர்ந்து ஏனைய நாவல்களை எழுதினார். பிள்ளைகளின் உதவியோடு அவற்றை வெளியிட்டார்.

### படைப்புக்கள்

நாட்டுக்கூத்து நாடகங்கள் (குறுங்கூத்துக் கள்), சமய நாடகங்கள். வரலாற்று நாடகங்கள், இலக்கிய நாடகங்கள், சமூக நாடகங்கள், வானொலி நாடகங்கள், திருப்பாடுகளின் காட்சி ஆகிய கலைப் படைப்புக்களைத் தந்துள்ளார். இவற்றைவிட ஒரு கவிதை நூலையும் ஐந்து நாவல்களையும் தந்துள்ளார்.

### குறுங்கூத்துக்கள் :

**சவுலும் பவுலும் - 1976**

இது ஒரு மணித்தியாலக்கூத்து. திருவிவிலி யத்தின் திருத்தூதர் பணி நூலில் உள்ள பவுல் அடியாரின் வாழ்க்கை வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்டது. இக்கூத்து நாடகம் வங்காலை கலை கலாசார மன்றத்தின் ஊடாக முதன் முதலில் 1976ஆம் ஆண்டு வங்காலையில் மேடையேற்றப் பட்டது. இந்நாடகம் வேறு அயற்கிராமங்களிலும் மேடையேற்றப்பட்டது.

**தரித்திரக் குழந்தை - 1978**

இது ஒரு மணித்தியாலக்கூத்து. திருவிவிலி யத்தில் உள்ள இயேசுவின் பிறப்பு நிகழ்ச்சியை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டது. இயேசுவின் பிறப்பை ஒட்டி ஏரோது அரசனால் யூதேயாவில் கொலை செய்யப்பட்ட குழந்தைகளின் கதை. 1978ஆம் ஆண்டு வங்காலைக் கிராமத்தில் அரங்கேற்றப்பட்டது.

**உதித்தது விண்மீன் - 1988**

இது ஒரு மணித்தியாலக்கூத்து. திருவிவிலி யத்தில் மூவரசர்கள் குழந்தை இயேசுவை தேடிய பயணம் பற்றிய கதையை அடிப்படையாகக்கொண்டது. 1988ஆம் ஆண்டு வங்காலைக் கிராமத்தில் அரங்கேற்றம் செய்யப்பட்டது.

**செஞ்சோற்றுக்கடன் - 1988**

இது ஒரு மணித்தியாலக்கூத்து. கம்பராமாயண காவியத்தை அடிப்படையாக வைத்து படைக்கப்பட்டது. இராம - இராவண யுத்தத்தில் இராவணன் தம்பி கும்பகர்ணனின் பங்கு பற்றிய படைப்பு.

இக்கூத்து நாடகம் 1988இல் வங்காலை, நானாட்டான், மாந்தை ஆகிய இடங்களில் மேடை யேற்றப்பட்டது. 1998ஆம் ஆண்டு வடக்குக் கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை அமைச்சின் ஏற்பாட்டில் திருகோணமலையில் இடம்பெற்ற இலக்கிய விழாவில் மேடையேற்றப்பட்டு முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. 1999ஆம் ஆண்டு கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் பேராசிரியர் சு. வித்தியானந்தன் நினைவுதின போட்டியில் இந்நாடகம் பங்கெடுத்து பரிசு பெற்றது. இந்நாடகத் தைப் பாராட்டி ச. அருளானந்தம் என்பவர் எழுதிய சிறிய கட்டுரை 1998 ஐப்பசி 11ஆம் திகதி ஞாயிறு தினக்குரல் பத்திரிகையில் வெளிவந்தது.

### சமய நாடகங்கள் :

**குருதியில் நனைந்த கோயில் - 1976**

இது ஒன்றரை மணித்தியால நாடகம். கத்தோலிக்க ஆயர் தோமஸ் பெக்சிற் என்பவரின் வரலாற்றை அடிப்படையாகக்கொண்டது. இந்நாடகம் 1976ஆம் ஆண்டு வங்காலையில் மேடையேற்றப்பட்டது.

**விடுதலை - 1980**

இது ஒரு மணித்தியால நாடகம். பரபாஸ் என்ற கள்வனின் கதை. திருவிவிலியத்தில் இருந்தும் பிற வரலாற்றுக் குறிப்புகளில் இருந்தும் தகவல்கள் எடுக்கப் பட்டு இந்நாடம் உருவாக்கப்பட்டது. வங்காலை, மன்னார் ஆகிய இடங்களில் இந்நாடகம் மேடையேற்றப்பட்டது.

**முப்பது வெள்ளிகள் - 1982**

இது ஒரு மணித்தியால நாடகம். இயேசுவைக் காட்டிக்கொடுத்த சீடன் யூதாசின் கதை. திருவிவிலி யத்தில் இருந்து இக்கதைக்கான கரு எடுக்கப்பட்டது. இந்நாடகம் 1998ஆம் ஆண்டு வங்காலையில் மேடையேற்றப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்று நாடகங்கள்

**வேட்டை - 1978**

இது ஒரு மணித்தியால நாடகம். கண்டி மன்னன் இராஜசிங்கனை விமலதர்ம சூரியன் (கோளப்பு பண்டாரம்) தோற்கடித்து கண்டியை கைப்பற்றிய வரலாறு. அருட்திரு. எஸ். ஜே. பெரேராவின் போர்த்துக் கேயர்கால இலங்கைச் சரிதத்தை ஆதாரமாகக் கொண்ட படைப்பு.

இந்நாடகம் கொழும்பு தேசிய நாடக விழாவில் அகில இலங்கை ரீதியாக போட்டிக்கு தெரிவுசெய்யப் பட்டு கொழும்பு ஜோண் டி சில்வா அரங்கில் மேடை யேற்றப்பட்டு சிறந்த நடிகருக்கான பரிசையும் பெற்றது.

இந்நாடகம் வடபிரதேச நாடக விழாவில் அரங்கேற்றம் செய்யப்பட்டது. அத்துடன் 1978ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தேசிய நாடக விழா சிறப்பு மலரில் இந்நாடகம் பற்றிய விபரம் இடம்பெற்றுள்ளது. இந்நாடகம் வங்காலை, மன்னார், அடம்பன், நானாட் டான் ஆகிய இடங்களிலும் மேடையேற்றப்பட்டது.

**பொக்கிஷம் - 1979**

இது ஒரு மணித்தியால நாடகம். இது இலங்கைச் சரித்திரத்தின் அடிப்படையில் படைக்கப் பட்டது. விமலதர்ம சூரிய மன்னனின் அரண்மனைப் பொக்கிஷம் கொள்ளையடிக்கப்பட்ட வரலாறு. இந்நாடகம் தேசிய பேரவைக்கு தெரிவுசெய்யப்பட்டது. இது வங்காலையில் மேடையேற்றப்பட்டது.

இலக்கிய நாடகங்கள் :

**காலதேவன் கட்டளை - 1976**

இது ஒரு மணித்தியாலக் கதை. மகாபாரதத்தில் ஏகலைவன் என்னும் வேடன் பற்றிய கதை. இந்நாடகம் வங்காலை, மன்னார் ஆகிய இடங்களில் மேடை யேற்றப்பட்டது. தேசிய கலாசாரப் பேரவையினால் இந்த நாடகப் பிரதி தெரிவுசெய்யப்பட்டது. ஜே.வி.பி.




கலவரம் காரணமாக கொழும்பில் இதை மேடை யேற்றம் செய்வதில் தடங்கல் ஏற்பட்டது.



வானொலி நாடகம்

**மரணத்தின் பாதை - 1993**

இது அரை மணித்தியால வானொலி நாடகம். இந்நாடகத்திற்கான கதை திருவிவிலியத்தில் இருந்து எடுக்கப்பட்டது. இயேசுவின் மரணம் தொடர்பான சம்பவத்தில் இறுதிப் பகுதி. இந்நாடகம் 1993ஆம் ஆண்டு இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் தேசிய வானொலியின் வன்னிச் சேவையில் ஒலிபரப்பப் பட்டது.

சமூக நாடகங்கள்

**வெடிகுண்டு - 1978**

இது ஒரு மணித்தியால நாடகம். மூன்றே மூன்று கதாபாத்திரங்களுடன் “பேராசை பெருநட்டம்” என்பதை நிறுவிக்காட்டிய சமூக நீதி நாடகம். இது 1983ஆம் ஆண்டு தேசிய இளைஞர் சேவை மன்ற விழாவில் மேடையேற்றப்பட்டது

**மனக்கோலம்**

இது அரைமணித்தியால நாடகம். இது ஒரு காதல் கதை. வங்காலையில் மேடையேற்றப்பட்டது.

**மண்ணின் மைந்தர்கள்**

இது அரைமணித்தியால நாடகம். ஊர்ப் பிரச்சினையை அடிப்படையாக வைத்து எழுதப்பட்டது. வங்காலையில் மேடையேற்றப்பட்டது.

**திருப்பாடுகளின் காட்சி 'கள்வரின் நடுவே கடவுள்' - 1998**

இவர் எழுதிய “கள்வரின் நடுவே கடவுள்” என்ற இயேசுவின் திருப்பாடுகளின் காட்சி ஐந்தரை மணித்தி யாலங்கள் கொண்ட ஓர் அரங்காற்றுகை ஆகும். இயேசுவின் பாடுகள், மரணம் ஆகியற்றை சித்தரிக்கும் இந்தத் திருப்பாடுகளின் காட்சி திருவிவிலிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதாரங்களையும், திருச்சபையின் சரித்திரக் குறிப்பு களையும், பிற வரலாற்றுச் சான்றுகளையும் ஆதார மாகக்கொண்டு எழுதப்பட்ட ஒரு பிரமாண்டமான கலைப்படைப்பு ஆகும். இது 1998ஆம் ஆண்டு வங்காலை புனித ஆனாள் ஆலய முன்றலில் பிரமாண்ட மான மேடையில் ஆற்றுகை செய்யப்பட்டது. வங்காலையில் அப்போது உதவிப் பங்குத்தந்தையாக இருந்த இக்கட்டுரை ஆசிரியர் இந்த அரங்க ஆற்றுகை யின் போது உதவி இயக்குனர்களில் ஒருவராகச் செயற் பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்திருப்பாடுகளின் காட்சிபற்றி அன்றைய பத்திரிகையில் வெளிவந்த செய்தி இவ்வாறு அமைந் துள்ளது: "கடந்த 21 ஆண்டுகளுக்குப்பின் மீளக் குடிய மர்த்தப்பட்ட இக்கிறிஸ்தவக் கிராமத்தில் (வங்காலை யில்) முதன் முறையாக இப்பிரமாண்டமான கிறிஸ்து வின் திருப்பாடுகளின் வரலாறு 27.03.1998 அன்று வெள்ளி மாலையன்று ஐந்தரை மணித்தியாலங்கள் சலிப்பின்றி, களைப்பின்றி திரைப்படம்போல் ஓடியது பலரையும் கவர்ந்துள்ளது. இத்திருக்காட்சியினைக் கண்டுகளிக்க தலைமன்னார் தொடக்கம் சிலாபத்துறை வரையுள்ள பங்குகளிலிருந்தும் இராணுவக் கட்டுப் பாடற்ற பெரு நிலப்பரப்பிலிருந்தும் பெருந்தொகையான சனத்திரள் - பதினையாயிரம் மக்கள் - பல பயணக் கஸ்ரங்களையும் மேற்கொண்டு வந்திருந்தார்கள். கிறிஸ்துவின் நற்செய்தியையும், பாரம்பரியத்தையும் பின்னிப் பிணைந்து இழையோடச்செய்த கதை வசனங்களை ஆக்கித்தந்த திரு. எஸ். பத்திநாதன் பெர்ணாண்டோ அவர்களையும், நெறிப்படுத்திப் பயிற்றுவித்த திரு. வின்சென்ற் லெம்பேட் இயக்குனர் அவர்களையும்பாராட்டுகின்றோம்..."

### ஆக்க இலக்கியப் படைப்புக்கள்

நாடகம் தவிர்ந்த ஆக்க இலக்கியப் படைப்புக் களாக இவர் ஒரு கவிதைத் தொகுதியையும் ஐந்து நாவல்களையும் வெளிக்கொணர்ந்துள்ளார்.

**பாடம் - கவிதைத்தொகுதி - 2016**

"இக்கவிதைத்தொகுப்பில் இருபத்தைந்து சிந்தனைகள்! இத்தனை காலமாக தனது உள்ளத்தில் புதைந்துகிடந்த இரகசியங்கள், புரட்சிகர சிந்தனைகள், வேணவாக்கள், இலட்சியங்கள் இப்படி பல விடயங் களை இனிய தமிழில் எவரும் விளங்கக்கூடியவாறு கவிதை வடிவில் பிழிந்து தந்திருக்கிறார்".
(கவிதைத் தொகுப்பின் வாழ்த்துச்செய்தியில் இருந்து)

**'கூத்துப் படிச்ச கதை' - நாவல் - 2016**

"இந்நாவல் வாழ்க்கை அனுபவத்தை அடிப் படையாகக்கொண்டே படைக்கப்பட்டுள்ளது. கிராமிய மணம் கமழும் ஒரு கதையாக இந்நாவல் அமைந் துள்ளது. கடற்றொழில், கள்ளுக்கொட்டில், கூத்து நாடகப் பயிற்சி போன்ற சூழ்நிலைகளைச் சுற்றிக் கதை பின்னப்பட்டுள்ளது. கிராமத்துப் பேச்சு வழக்கு சிறப் பாகக் கையாளப்பட்டுள்ளது".
(நாவலின் அணிந்துரை யில் இருந்து)

**'தோற்றுப்போனவர்கள்' - நாவல் - 2017**

"இந்த நாவல் ஒரு மீனவக் களம் சார்ந்த ஒரு நாவலாகும். மீனவர்கள் அன்றாட வாழ்வில் எதிர் கொள்ளும் பல்வேறு பிரச்சினைகளையும் அவற்றுக் கான பின்புலங்களையும் அவற்றின் வேரோடும் வேரடி மண்ணோடும் இந்நாவலாசிரியர் சித்தரித்துள்ளார்" (நாவலின் முன்னுரையில் இருந்து)

**'64 டிசம்பர் 22' நாவல் - 2018**

"1964 மார்கழியில் ஏற்பாட்ட கடற்சீற்றத்தை அடிப்படையாக வைத்து புனையப்பட்ட நாவல் இது. கடலோர மக்களின் வாழ்வியற் கோலங்களும் கற்பனைப் புனைவுகளும் கலந்து படைக்கப்பட்ட நாவல்" (நாவலின் அணிந்துரையில் இருந்து)

**"குஞ்சம் ஊர்ந்தோர்' நாவல் - 2019**

"விளிம்புநிலை மாந்தர்களின் வாழ்வியலை இலக்கியமாக வடிக்கும் முயற்சியில் விளைந்தது "குஞ்சரம் ஊர்ந்தோர்" நாவல். முத்துக்குளிப்பு அற்றுப் போனபின்னர் கடலோர மாந்தர்களான பரதவர்களின் வாழ்வில் பொருளியல் எவ்வாறு பரிணாம வளர்ச்சி பெற்று வளர்ந்தது என்பதை இந்நாவல் வெளிப்படுத்தி நிற்கின்றது. இப்படிமுறை வளர்ச்சி ஏற்படுங்காலை நடந்த ஒருசில சம்பவங்கள் கோர்த்தெடுக்கப்பட்டு அது நாவலாக பரிணமித்திருக்கிறது". (நாவலின் "என்னுரை" யில் இருந்து)

**திசையறியாப் பயணங்கள் - நாவல் - 2020**

"வழக்கம்போலவே இக்கதையின் களமும் கதாசிரியரின் சொந்தக் களமே ஆகும். எண்பதுகளின் தொடக்கத்தில் சமூகச்சூழலும் அதனோடிணைந்த பல்வேறு அக, புறக் காரணிகளின் தாக்கமும் சேர்ந்தவையாகக் கதையின் பின்புலம் அமைந்துள்ளது. எண்பதுகளில் இளைஞர்களாக இருந்த வாசகர்கள் அனைவரும் இக்கதையின் ஏதோ ஒரு அம்சத்துடன் தங்களைத் தொடர்புபடுத்திப் பார்க்காமல் இருக்க முடியாது. போராட்டம், அதன் விளைவாக வறுமை, வன்முறைச் சம்பவங்கள், இடப்பெயர்வு, அபாயகர மான கடற்பயணம் என இயல்புக்கு மாறான பல சம்பவங்கள் அடுத்தடுத்து நிகழும்போது மனிதக் கலாசாரப் பண் பாட்டு விடயங்களிலும் நம்பிக்கை களிலும் மாற்றங்கள் நிகழுவது தவிர்க்க முடியாததாகிப் போகிறது" (நாவலின் அணிந்துரையில் இருந்து).

### விருதுகள், கௌரவங்கள்

1. 1998ஆம் ஆண்டு வடகிழக்கு மாகாண சபையின் தமிழ்ப் பண்பாட்டு கலாசார விழாவில் மன்னார்ப்பாங்கு கூத்திற்கான முதற்பரிசை இவருடைய "செஞ்சோற்றுக் கடன்" நாடகம் பெற்றுக்கொண்டது.

2. 1999இல் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் பேராசிரியர் சு வித்தியானந்தன் நினைவு தின போட்டியில் இவருடைய "செஞ்சோற்றுக்கடன்" நாட்டுக்கூத்து பரிசு பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



3. 2015ஆம் ஆண்டு நானாட்டான் பிரதேச கலா சாரப் பேரவையால் ஏற்பாடு செய்யப்பட்ட கலை இலக்கிய விழாவின்போது இவருக்கு "செழுங்கலை வித்தகர்" என்ற விருது வழங்கப்பட்டது.

4. 2017ஆம் ஆண்டு நடைபெற்ற மன்னார் மாவட்ட கலை இலக்கியப் பெருவிழாவின்போது மன்னார் மாவட்ட கலாசாரப் பேரவையால் இவருக்கு "மன் கலைச்சுரபி" விருது வழங்கப்பட்டது.

5. 2017ஆம் ஆண்டு வடக்கு மாகாணப் பண்பாட்ட லுவல்கள் திணைக்களத்தினால் இவருக்கு நாடகத் துறைக்கான "முதலமைச்சர் விருது" வழங்கப்பட்டது.

6. 2018ஆம் ஆண்டு "பெயர்வே" (FAIRWAY) என்னும் நிறுவனத்தினால் "தோற்றுப்போனவர்கள்" என்னும் நாவலுக்காக "வெற்றியாளர்" என்னும் தேசிய இலக்கிய விருது வழங்கப்பட்டது.

7. 2018ஆம் ஆண்டு "பெயர்வே"(FAIRWAY) என்னும் நிறுவனத்தினால் "தோற்றுப்போனவர்கள்" என்னும் நாவலுக்காக "சிறந்த நூற்பிரசுரிப்பாளர்" என்னும் தேசிய இலக்கிய விருது வழங்கப்பட்டது.

8. 2019ஆம் ஆண்டு அரச இலக்கிய விழாவின் போது இவருடைய "64 டிசெம்பர் 22" என்ற நாவலானது அரச இலக்கிய விருதுக்காக விதந்துரைக்கப்பட்டமைக் கான சான்றிதழ் வழங்கப்பட்டது.

9. 2019ஆம் ஆண்டு மன்னாரில் நடைபெற்ற திருக்குறள் பெருவிழாவின்போது தமிழிலக்கிய பணி களுக்கு ஆற்றிய சேவைக்காக இவர் கௌரவிக்கப் பட்டார்.

10. 2019ஆம் ஆண்டு மன்னார் மாவட்ட கலை பண்பாட்டுப் பெருவிழாவின்போது இவருடைய கலைச்சேவையைக் கௌரவித்து பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

11. 2019 2020 காலப்பகுதியில் "குஞ்சரம் ஊர்ந்தோர்" நாவலுக்கு அவுஸ்ரேலியா தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தினால் சிறந்த நாவலுக்கான முதற் பரிசு வழங்கப்பட்டது.

12. 2020ஆம் ஆண்டு இவருடைய "குஞ்சரம் ஊர்ந்தோர்" நாவல் வடக்கு மாகாணத்தின் சிறந்த நூலாகத் தேர்வுசெய்யப்பட்டமைக்காக வடக்கு மாகாணப் பண்பாட்டுப் பெருவிழாவின்போது இவருக்கு சான்றிதழ் வழங்கப்பட்டது.

13. 2020ஆம் ஆண்டு கலைஞர்களுக்கான உயர் விருதான "கலாபூசண விருது" இவருக்கு வழங்கப்பட்டது.

14. 2021இல் இவருடைய "திசையறியாப் பயணங்கள்" என்ற நாவல் அரச இலக்கிய விருதுக்காகப் பரிந்துரைக் கப்பட்டது.

15. 2021இல் ஞானம் சஞ்சிகை நடத்திய மாபெரும் இலக்கியப் போட்டியில் "குஞ்சரம் ஊர்ந்தோர்" என்ற இவருடைய நாவல் முதலாம் இடத்தைப் பெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல்கள்

வகைமாதிரிக்காக இவருடைய பாடல்கள் மற்றும் கவிதைகள் சில இங்கே தரப்படுகின்றன :

1.
செஞ்சோற்றுக்கடன் நாட்டுக்கூத்தின் காப்பு வெண்பா :

வெண்டா மலரென தனையொரு பதியென
கொண்டானைத் தீர்க்கத் தண்டஞ் செய்தே - இருப்புலக்கை
தண்டான் தன் காதைகூறக் களங்கண்டேன் கவிநடையால் பாட
உண்டாம் கமலபதி காப்பு

2.
செஞ்சோற்றுக்கடன் நாட்டுக்கூத்தில்
கும்பகர்ணன் துயிலெழுந்த சிந்து :

ஆரெனும் எதிர்த்து வந்தாரோ அண்ணலென்னை இன்றெழுப்ப
ஆரெனும் எதிர்த்து வந்தாரோ

ஆரடா எதிர்த்து வந்தார் ஆவிபோக்க ஆசையாச்சோ
பாரடா இரும்புலக்கைத் தண்டிதன் வலிமை தன்னை
(தரு ஆரெனும்....)

ஆழிசூழ்ந்த லங்கை அண்ணல் ஆட்சிக்கேதும் சூழ்ச்சியாமோ
ஏழிசை உணர்ந்த அண்ணல் வாளினுக்கோர் ஊறுண்டாமோ

வேழங்கள் பொருத மார்பன் தானினுக்கும் வீழ்ச்சியாமோ
பாரடா இருப்புலக்கைத் தண்டதன் வலிமைதன்னை

*2016ஆம் ஆண்டு இவர் வெளியிட்ட கவிதை நூலில் இருந்து இவருடைய இரண்டு கவிதைகள் கீழே தரப்படுகின்றன.*

1.
இதயமற்றவன்

மெல்லத் தலை கவிழ்ந்து கள்ளவிழிப் பார்வையினால்
கண்ணால் பேசுவது புரிகிறது
கண்ணே எனக்குப் புரிகிறது

உள்ளத்து உணர்வுகளை வெள்ளைமுகத் திரையில்
படம் காட்ட பரிதவிப்பது புரிகிறது பெண்ணே புரிகிறது.

துள்ளல் நடையுடனே உள்ளக் கிடக்கைகளை
உணர்த்த நீ முயல்வதுகூட புரிகிறது
பெண்ணே புரிகிறது.

இடுப்பை ஒடித்துக்கொண்டு துடுப்பாய் நொடிப்பதுகூட
ஏனென்று எனக்குப் புரிகிறது பெண்ணே புரிகிறது.

ஏற்க முடியாது பெண்ணே என்னை விட்டுவிடு
இதயமில்லாத அரக்கன் நான்
என்றோ தொலைத்து விட்டேன்
இன்னொருத்தியிடம் ...

2.
சீதனம்

உழைத்து உண்பதற்கு உன்னால் முடியாதென்றா
உன்னை விற்றுவிட்டு பெண்ணைப் பெற்றுக்கொண்டாய்?

அடிமைச் சாசனத்தை அழகாய் எழுதிவிட்டா
படியை வாங்கிக்கொண்டு நொடியில் ஒடுங்கிவிட்டாய்?

மாமன் மனைதனிலே ஆமா எனத்தலையை
தானாய் ஆட்டுதற்கா தோதாய் வாங்கிவிட்டாய்?

மனைவி சொல் தட்டாத மணாளனாய் இருப்பதற்கா
கனமாய் பணம் பெற்று தனவான் ஆகிவிட்டாய்?

நிறைவுரை

திரு. பத்திநாதன் பெனாண்டோ அவர்கள் ஓர் உண்மைக் கலைஞர். ஆடம்பரமற்றவர், எளிமையானவர். தான் பிறந்த மண்ணோடும் மக்களோடும் நன்கு ஐக்கியமானவர்.

இதனால் தனது சமுதாயம் சார்ந்த பழக்க வழக்கங்களை, சம்பிரதாயங்களை நன்கு அறிந்த வராக இருக்கின்றார். தனது நாவல்களில் இவற்றை அவர் விலாவாரியாக வெளிக்கொணர்ந்துள்ளார்.

"பெரிய நாடகம்" என்று அழைக்கப்படுகின்ற வங்காலை மரியஸ்தாள் நாடகப்பாடல்களை இராக தாளத்தோடு பாடக்கூடிய ஒருசிலரில் இவரும் ஒருவர்.

"சேர்ந்தே இருப்பது வறுமையும் புலமையும்" என்பதைப்போல இவரும் வறுமையில் வாழ்ந்தவர். ஆயினும் தனது பிள்ளைகளுக்கு நல்ல கல்விச் செல்வத்தைக்கொடுத்து அவர்களை உருவாக்கி ஆளாக்கி விட்டுள்ளார்.

இவருடைய நாட்டுக்கூத்துப் பிரதிகள் எதுவும் தற்போது இவரிடம் இல்லை. இவர் பெந்தகோஸ்து சபைக்கு சென்றவேளையில் யார் யாரெல்லாம் இவருடைய நாடகக்கொப்பிகளைக் கேட்டார்களோ அவர்களுக்கு அவற்றைக் கொடுத்து விட்டார். அவர்கள் அவற்றைத் திருப்பிக்கொடுக்கவில்லை.

மேலே உள்ள இரண்டு கூத்து நாடகப் பாடல்களும் அவர் மனப்பாடமாக தெரிந்து வைத்ததில் இருந்து அவர் எழுதி அனுப்பியவையே. 2016இல் வெளிவந்த இவருடைய முதல் நாவலான "கூத்துப் படிச்ச கதை" நாவலுக்கு இக்கட்டுரை ஆசிரியரே அணிந்துரை எழுதியிருந்தார். இந்த நாவலுக்கான விமர்சனப் பார்வையை இக்கட்டுரை ஆசிரியர் ஜீவநதியில் எழுதியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாடகக்கலைஞராகத் திகழ்ந்த திரு. பத்திநாதன் அவர்கள் நாவல்துறையிலும் கால்வைத்து முத்திரை பதித்துள்ளார்.

அவருடைய பல்துறைசார்ந்த திறமைகளால் கலை இலக்கிய உலகு வளம் பெற்றுள்ளது. அவருடைய கலைப்படைப்புக்கள், நாவல்கள் ஒவ்வொன்றும் தனித்தனி ஆய்வுக்குரியவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

... நூலகம்
யாழ்ப்பாணம்

# சீமான் பத்திநாதன் அவர்களின் நாவல்கள் ஓர் அசைபோடும் அலசல்

துறையூரான் எம். சிவானந்தன்

புதினம் அல்லது புனை கதை இலக்கியம் என அழைக்கப் படுகின்ற நாவல் இலக்கியமானது உலக அளவில் மிகவும் புகழ்பெற்ற ஓர் இலக்கிய வடிவம் ஆகும். எடுத்துக்கொண்ட விடயத்தை மிக இலகுவாகவும் எளிமை யாகவும் வாசகரைச் சென்றடையச் செய்கின்றதொரு எழுத்து வடிவம். எழுத்தாளருக் குத் தாராளமான சுதந்திரத்தை வழங்குகின்ற ஒரு கலை வடிவ மாகவும் இது காணப்படுகின்றது. இந்தவகையில் அண்மைக் காலமாக மன்னார் வங்காலையில் இருந்து தொடர்ந்து இத்தகைய புதினங்களைப் படைத்துக் கொண்டிருப்பவர் திரு. சீமான் பத்திநாதன் பர்ணாந்து ஆவார். இதுவரை ஐந்து நாவல்களை அவர் எழுதியுள்ளார். அவை அனைத்துமே அவர் வாழ்கின்ற அவரது சொந்தச் சமூகச் சூழல்களைப் பிரதிபலிக்



கின்றதும் அவற்றைக் கதைக்களங்களாகக் கொண்டுள்ளனவாகவும் காணப்படுகின்ற அதேவேளை, ஒவ்வொரு கதையும் வெவ்வேறு கதைக் கருக்களைக் கொண்டமைந்தும் சிறப்புப் பெறுகின்றது. அந்த வகையில், அவரது நாவல்களின் பல்வேறு பரிமாணங்களையும் அவற்றினூடாக வெளிப்படுகின்ற பல்வேறு சமூக, வாழ்வியற் கூறுகளையும் அவை வெளிப்படுத்துகின்ற மனித எண்ணவோட்டங்களையும் அவற்றை வெளிக் கொணர்வதிலும் அவ் வெளிப்பாடுகள் சரியாக வாசகரைச் சென்றடையச் செய்வதிலும் வெற்றிபெறுவதற் காக எழுத்தாளர் கையாண்டுள்ள உத்திகளையும் ஆராய்வதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சமூகமும் புனைவும்**

ஒரு நாவல் என்பது சமூகத்தின் கண்ணாடியாகும். உருவம் எப்படி இருக்க வேண்டும் என்று கண்ணாடி வலிந்து எதையும் காட்டுவதில்லை. உள்ளதை உள்ளபடி பிரதிபலிப்பதே அதன் பணி. அவ்வாறே சமூகம் எவ்வாறு இயங்குகிறது என்பதை உள்ளவாறே படம் பிடித்துக் காட்டுவதே சமூக அக்கறை கொண்ட எழுத்தாளனின் பிரதான கடமையாக அமைகிறது. வலிந்து புகுத்தப்படுகின்ற எந்தவொரு விடயமும் கதையோட்டத்தைத் தடை செய்வதோடு, வாசகனையும் சோர்வடையச் செய்து விடும். வாசிப்பவரைச் சோர்வடையச் செய்யாமல் எடுத்துக்கொண்ட விடயத்தைச் சுவாரசியமாகச் சொல்லும் கலையை இயல்பாகவே பெற்றிருக்கிறார் சீமான் பத்திநாதன் அவர்கள். மிகச் சரளமாக நகர்ந்து செல்லுகின்ற கதையோட்டமும் அக்கதைக்குப் பொருத்தமான கதைக் களமும் பாத்திரப் படைப்புகளும் அப்பாத்திரங்கள் பேசுகின்ற பேச்சுவழக்கு மொழி உரையாடல்களும் வெகு சிறப்பாகவே வாசகரைக் கவர்ந்து விடு கின்றன.

இந்தியாவின் கேரள மாநிலத்தில் இருந்து வெளிவருகின்ற புதினங்கள், திரைப்படங்கள், குறும் படங்கள் என்பவை எவ்வித அலட்டல்களும் இல்லாமல் எடுத்துக்கொண்ட விடயத்தை மிக எளிமையாக வெளிப் படுத்துகின்ற, யதார்த்தத்தைப் பிரதிபலிக்கின்றவையாக அமைந்திருக்கும். இத்தகையதொரு தன்மை இலங்கைப் புதினங்களில் இவரது படைப்புகளிலேயே அதிகம் பிரதிபலிக்கின்றன. எடுத்துக்கொண்ட விடயத்தை உள்ளது உள்ளபடி வெளிக்கொணர்வதே ஒரு சிறந்த இலக்கியத்தின் சிறப்பாக அமையுமே தவிர அவை அதைச்சொல்ல எடுத்துக்கொண்ட நேரம் எவ்வளவு அல்லது எத்தனை பக்கங்களைக் கொண்டிருக்கின்றன என்பதில் அல்ல என்பதிலும் மேற்குறிப் பிட்ட ஒப்பீடுகள் பொருந்தும். ஆயிரம் பக்கங்களைக் கொண்டுள்ள அபத்தங்களும் உள்ளன. பத்துப் பக்கங்களே கொண்டமைந்த அற்புதங்களும் உள்ளன. தேவையற்ற விடயங்களைக் கொட்டி வைக்கும் குப்பைத்தொட்டிகளாக அல்லாமல் தேவையான வற்றை ஒழுங்காக அடுக்கி, உரிய முறையில் வைக்கும் பெட்டகங்களாக சீமான் பத்திநாதன் அவர்களின் ஆக்கங்கள் அமைந்து காணப்படுகின்றன. இந்த வகையில் அவரது நாவல்கள் வெளிப்படுத்தி நிற்கின்ற பல்வேறு சமூக, பண்பாட்டு, கலாசார, அரசியல், மத அம்சங்களைத் தனித்தனியாக நோக்குவோம்.

**பொருளாதாரம்**

திரு. சீமான் பத்திநாதன் அவர்களின் சொந்த ஊரான வங்காலை என்பது மூன்று பக்கங்கள் கடலாலும் ஒரு பக்கம் பிரதான நிலப்பரப்போடு இணைந்த வயல் நிலங்களாகவும் காணப்படுகின்றது. இதற்கேற்ப மீன்பிடியும் அதனோடு தொடர்புடைய தொழில்களும் பிரதான வருமானம் தரும் துறைகளாக அவரது கதைகளில் வரும் கதாபாத்திரங்களால் மேற்கொள்ளப்படுகின்றன. சிறிய அளவில் விவசாயம் சார்ந்த நெற்செய்கை, மரக்கறிச் செய்கை என்பன காணப்படுகின்றன. இத்தொழில்களிலும் தொழில் சார்ந்த, சாதி சார்ந்த ஏற்றத்தாழ்வுகளையும் பாத்திரங் கள் ஊடாக அவர் வெளிப்படுத்தத் தவறவில்லை. குறிப்பாக நேரடியாக மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள வர்கள், விவசாயம் செய்பவர்களின் கணிப்பில் தரங் குறைந்த, ஒரு சாதியினருக்குரிய தொழிலாகக் கருதப்படு கிறார்கள். எனினும் மீன்தொழிலில் கிடைக்கும் அபரிமிதமான வருவாய் காரணமாக அவர்களின் செல்வச் செழிப்பினைப்பார்த்துப் பொறாமைப்படு கிறவர்களாகவும் உள்ளனர். இதற்கு எடுத்துக்காட்டாக, கூத்து படிச்ச கதை நாவலில் வரும் விவசாயம் செய்யும் பாத்திரமான வேதநாயகம், கதையின் நாயகனான சவிரியானைக் குறித்து **"ஒரு பாட்டு மீனுக்கு நம்முடைய ஒரு போக விளைச்சலைவிட மதிப்பு அதிகம். இந்த மீன்பிடிகாறங் களுக்கு உள்ள வாழ்வு நமக்கில்லையே.." "இவங்களின்ட காசைக் கரைக்க என்ன வழி?"** என்ற சிந்தனையோட்ட வெளிப்பாடு காணப்படுகிறது.

இவை தவிர கள்ளு வியாபாரம், சட்டத்திற்குப் புறம்பான சாராய வியாபாரம், இந்தியாவில் இருந்து பொருட்களைக் கடத்தி வியாபாரம் செய்தல், தங்கம் கடத்துதல் போன்ற தொழில்களும் சிலரால் மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளன. குஞ்சரம் ஊர்ந்தோர் நாவலில் வரும் பாத்திரங்களான மோசஸ் முதலாளி, தனுஸ் தண்டல் என்போர் தங்கக் கடத்தலில் ஈடுபட்டு வருவதும் அவர்களுக்குத் தெரியாமல் இழுவறியம்மான் தங்கத்தைக் கைப்பற்றுவதும் மருமகனான ஆனாப் பிள்ளைக்கு இது தெரிய வரும்போது, இழுவறியம் மானோடு சேர்ந்து தங்கத்தை களவில் விற்று பணக் காரர்களாவதுமான சம்பவங்கள் இக்காலத்தைப் போலவே அப்போதும் கடத்தல் தொழில் இயல்பா கவே மேற்கொள்ளப்பட்டு வந்த பிரதேசங்களாக அடையாளப் படுத்தப்படுகின்றன.

நாட்டுப்புறங்களுக்கும் மீனவக் கிராமங் களுக்கும் இடையில் நடக்கும் பண்டமாற்றுக்கள், பணப்பரிமாற்றங்கள் தொடக்கம் கொழும்பு வரை யிலான மீன், கருவாடு வியாபாரமும் விரிவாக அறியக்கூடியதாக உள்ளதோடு, கரையில் இருந்து மீன் பிடித்தவர்கள், கட்டுமரம், வள்ளம், தோணி, பிளாஸ்டிக் போட், ரோலர் என தொழில் ரீதியான முன்னேற்றமும் தொழில்நுட்ப ரீதியான முன்னேற்றமும் பேசப்படுகிறது. அத்துடன் குடிசை வீடுகளில் வாழத்தொடங்கி, ஓட்டு வீடு, மாடிவீடு, சைக்கிள், மோட்டார் சைக்கிள், கார் என பொருளா தார ரீதியாக வசதி படைத்த மக்களாக மாறிக் கொண்டு வந்தமையும் அறியக்கூடிய வகையில் கதை நகர்வுகள் உள்ளன.

**கல்வி**

இலங்கைச் சமூக அமைப்பு இந்திய சாதி அமைப்பை மிகச் சரியாக உள்வாங்கியிருந்தமையை பல்வேறு சமூகப் பொருளாதாரக் காரணிகளிலும் மிக இலகுவாக இனங்கண்டு கொள்ளலாம். கல்வியும் இதற்கு விதிவிலக்கல்ல. மேட்டுக் குடியினருக்கு மட்டுமே கல்வி என்றிருந்த நிலை, ஆங்கிலேயர் வருகைக்குப் பின் மாற்றம் கண்டது. நாட்டின் சகல பகுதிகளிலும் நிறுவப்பட்டிருந்த பாடசாலைகள் போலவே, கதைச் சூழலில் வரும் ஊர்களிலும் சிறிய பாடசாலைகள் நிறுவப் பட்டிருந்தன. அங்கு சகலரும் கல்வி கற்கும் வாய்ப்பும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்பட்டிருந்தது. இவ்வாய்ப்பினை ஏராளமான குடும்பங்கள் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய அளவுக்கு அன்றைய பொருளாதார நிலை இருக்க வில்லை. ஆரம்பக் கல்வியைக் கூட முழுமையாகப் பூர்த்தி செய்யாத நிலையிலேயே அதிகமான பிள்ளை கள் இருந்துள்ளனர். எனினும் சிலர் அரசாங்க உத்தி யோகம் பார்க்குமளவுக்கு கல்வி பெற்றிருந்தமையை யும் காண முடிகிறது. விதானை, அரச அலுவலகங் களில் உதவியாளர்கள் எனவரும் பாத்திரங்கள் இதனைக் காட்டி நிற்கின்றன.

இத்தகைய வாய்ப்புக் கிடைக்கப் பெற்றமை யையிட்டு மேட்டுக்குடியினர் ஆங்கிலேயரை வெறுத்தனர் என்பதுவும் பதிவு செய்யப்பட்டுள்ளது. கூத்து படிச்ச கதை நாவலில் வரும் பின்வரும் கூற்று இதனைத் தெளிவாக வெளிப்படுத்தி நிற்கிறது. "வெள்ளக்கார சுவாமிமாரை அடிச்சுக் கொல்ல வேணும். கட்டக்கூடாத இடத்தில எல்லாம் பள்ளிக்கூடத்தக் கட்டிப் போட்டாங்கள்.." "ஒன்று வெள்ளக்கார சுவாமிய வெட்டிக் கொல்லனும். இரண்டு அவங்க கட்டின பள்ளிகளை யெல்லாம் டைனமைட் வைத்தாவது இடிக்கனும்"

இன்று இலங்கை தமிழர்களால் சைவத்தை யும் தமிழையும் காத்த பெருமான் எனப் போற்றப் படுகின்றவர். சாதியில் குறைந்த சிறுவனைத் தனது பள்ளியில் சேர்க்க மறுத்த வரலாறும் ஏனோ நினைவிற்கு வந்து விடுகிறது.

சாதி

மேல்சாதி, இடைச்சாதி, கடைச்சாதி எனும் இந்திய மரபு சாதிக்கொடுமை, தீண்டாமை போன்றன இலங்கையிலும் மிகவும் கறாராகப் பின்பற்றுக் கொண்டிருந்தமையை இவரது புனைவுகளில் உள்ள பாத்திரங்கள் ஊடாகப் பிரதிபலிக்கின்றன. இந்த எண்ணம் அனைத்து மக்களுக் கிடையிலும் இருந் திருக்கிறது. தன்னைவிடக் கீழானவர்களும் இருக் கிறார்கள் என்ற எண்ணம் தம்மை உயர்வானவர் களாகக் கருதிக் கொள்வதற்கு வசதியாகப் போய் விடுகிறது. தம்மைக் கீழ்சாதி என்று சொல்பவர்களைத் தவிர்த்துவிட்டு, தாம் பிறரைக் கீழ்சாதி என்று கூறுவதற்கு முன்னிற்கும் மனப்பாங்கானது எல்லோரி டத்திலும் இயல்பாக இருந்திருக்கிறது. இதற்கு எடுத்துக் காட்டாக, தோற்றுப் போனவர்கள் நாவலில் "ஏலே, இங்க பாருங்கலே... நாடாப்பயலக் கொண்டுவந்து...." என்ற கூற்றும் அதற்கு குறித்த நபர் "ஆரடா கீழ்சாதி? மவன இந்தா வாறன்.." என்று சண்டைக்குப் போவதுமான சந்தர்ப்பங்களும் சுட்டிக்காட்டத்தக்கன. மேலும் ஒரே சாதிக்குள்ளும் மதம் சார்ந்த ஆதிக்க எண்ணம் வலுப்பெற்றிருந்தமை யையும் காணலாம். கூத்துப் படிச்ச கதையில் "டேய் மாக்கு உன் அண்ணதானடா. அவன ஏன் நாடகம் படிக்க விடாம மறிக்கிறாய்?" என்றதற்கு " அவன் ஒரு சபைக்குப் போறான்" என்று கூறியதோடு "அடிச்சுத் துரத்து அவன. ஊரால விலக்கு" என்ற கோசங்களும் எழுகின்ற சந்தர்ப்பங்களைச் சுட்டிக்காட்டலாம்.

ஆத்திகம் / நாத்திகம்

கரையோரக் கிராமங்களைச் சுற்றியே சகல கதைகளும் நிகழ்ந்தாலும் கூட, கதை மாந்தர்கள் சிலர் வெவ்வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்களாகவும் உள்ளனர். பெரும்பாலும் கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர்களே கதை மாந்தர்கள். அங்கொன்றும் இங்கொன்றுமாக சைவம், இஸ்லாம், பௌத்தம், கத்தோலிக்கம் அல்லாத கிறிஸ்தவர்கள் என சில கதை மாந்தர்களும் வருகின்றனர். எனினும் பொதுவான கதையோட்டத்தில் கத்தோலிக்க ஆதிக்கம் நிறைந்த சமூகமாகவும் அவ்ஆதிக்கம் சாதாரண மக்களின் வாழ்க்கையில் மறையான தாக்கத்தை ஏற்படுத்தும்போது அதனை தட்டிக்கேட்கும் விதத்தில் ஆங்காங்கே ஒலிக்கும் நாத்திக கருத்துக்களையும் காணமுடிகிறது. எடுத்துக்காட்டாக கூத்து படிச்ச கதையில் "வர வர மீன்பாடு குறைஞ்சு கொண்டு போகுது.." "நாடகம் படிக்கிற துக்கு ஏடு அவுத்ததுல இருந்த இப்படித்தான் இருக்கு..." ஊரில் உள்ள பிரச்சினைகள் எல்லாம் தீர்வதற்காக என்றுதான் நாடகம் படிப்பார்கள். ஒழுங்காக நடந்து கொண்டிருந்த தொழில்கள் நாடகம் படிக்கத் தொடங்கிய பிறகுதான் கெட்டுப் போயின என்ற கூற்று எதிர்க்குரலாக ஒலிப்பதை அவதானிக்கலம். தோற்றுப்போனவர்கள் நாவலில் "ஆண்டவன் இருக்கிறத நீ நம்புறியா?" என்ற கேள்விக்கு, நம்புறன் என்று சொல்லுவதும் "எப்படி நிச்சயமாக சொல்லுற?" என்ற கேள்விக்கு, தனக்கு கெடுதி செய்த தன் சொந்த அண்ணன் அற்ப காரணத்துக்காக அண்மை யில் இறந்து போனதைச் சுட்டிக்காட்டி சிரிக்கும் கதாபாத்திரமான முத்து கதாபாத்திரத்தின் ஊடாக வெளிப்படுகிறது. தொடர்ந்து முத்து "ஆண்டவன் இருந்தா இருந்துவிட்டுப் போகட்டும். அதுல நமக்கு என்ன நட்டம்?" என்ற கூற்றும் கவனிக்கத் தக்கது.

தொபியாசு என்ற பாத்திரமும் தோற்றுப் போனவர்கள் நாவலில் நாத்திகராகவே வடிவமைக் கப்பட்டுள்ளார். எனினும் அவரை பெரும்பான்மைச் சமூகமாகிய கத்தோலிக்கர்கள் ஆலயம் உட்பட அனைத்து நடவடிக்கைகளிலும் அவரை விலத்தி வைத்துள்ளார்கள். எனினும் அவர் ஒரு சம்மாட்டி என்கிற முதலாளி ஆகையால், இதுபற்றி அவர் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை என்பதாகவும் சித்திரிக்கப் பட்டுள்ளார்.

தமிழர் - வேதக்காரர் என்கிற மதப் பிரிவினையும் இங்கு பேசப்படுகிறது. "இங்கன தமிழன் எல்லாம் கிடையாது: எல்லாம் வேதம் தான். எங்க ஊர் முழுக்க வேதக்காறர்தான்" என்ற கூற்று மொழியையும் மதத்தையும் குழப்பிக் கொண்டு மக்கள் பேசுவதைச் சுட்டிக்காட்டுகிறது. மேலே காட்டிய விடயத்தை நாவலிலேயே நையாண்டி செய்யும் விதமாக " சம்மாட்டி நல்லா பகடி விடுறாக. தமிழ்ல பேசிக்கிட்டே தமிழன் இல்ல என்கிறாக" என்ற கூற்று அமைகிறது.

இவை தவிர பைபிளை நம்பும் மக்கள் சூனியம், ஜோசியம் என்பவற்றை நம்பமாட்டார்கள் என்று பொதுவாகக் கூறப்பட்டாலும் அதில் அதிக நம்பிக்கை கொண்டவர்களாக இன்றளவும் அவர்கள் உள்ளனர். இதனை உணர்த்துவதாக மீன் பிடிப்பதற்காக சூனியம் செய்து, அதிகளவான மீன்களைப் பிடித்தல், கோயிலில் மந்திரித்த நீர் கொண்டு அபிசேகம் செய்து வள்ளத்தை, வலையை நீராட்டுதல் போன்றனவும், நேர்த்திக் கடன் செலுத்துவதற்காக ஊர்விட்டு, மாவட்டம் விட்டு வேறு கோயில்களுக்குச் செல்லுதல் எனப் பல்வேறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

மூட நம்பிக்கைகளுக்கும் பஞ்சமில்லை. குஞ்சரம் ஊர்ந்தோர் நாவலில் சுரூப சுற்றுப் பிரகாரத்துக்காக கொஸ்தான் சம்மாட்டியின் படகு தயார் செய்யப்பட்டிருந்த நாளில் அது பழுதாகி விட்டது. இது குறித்து சுவாமியும் ஆனாப்பிள்ளையும் பேசிக்கொள்ளும் உரையாடலில் **" கொஸ்தான் சம்மாட்டிட போட் ஏன் ஓடமாட்டன்டு சொல்லிச்சு தெரியுமா?" சூசையப்பருக்கு அந்த போட்டில் போக விருப்பம் இல்ல. கொஸ்தான் பெரிய பொம்பிளக்கள்ளன்"** என ஆனாப்பிள்ளை பங்குச் சுவாமியிடம் கூறுவதாக வருகிறது.

மற்றுமொரு சுவாரசியமான சம்பவம் கூத்துப் படிச்ச கதையில் வருகிறது. வெள்ளைக்கார சுவாமி தனது ஒரு கன்னத்தில் அடித்ததைப் பொறுக்க மாட்டாத பிபியானுசு எனும் பாத்திரம் உடனடியாக சுவாமியாரின் கன்னத்தில் ஓர் அறை விட்டுவிட்டு வருவதும் அதற்காக சுவாமி இரவில் ஒரு பூசை வைக்கிறார். அன்றிரவே பிபியாசுவிற்கு பாரிசவாதம் ஏற்பட்டுவிடுவதும் காலையில் சுவாமியிடம் சென்று மன்னிப்பு கேட்டுவிட்டு ஊரை விட்டே பிபியானுசு சென்றுவிடுவதுமான சம்பவத்தில் முத்தாய்ப்பாக, பக்கத்துக் கிராமங்களில் பிழைத்துவரும் பிபியானுசு ஒருநாள் தான் தங்கியுள்ள ஊரில் நடக்கும் நாடகம் ஒன்றில் மேளம் அடித்துவிட்டு, இருட்டில் யாரென்றே தெரி யாத ஒரு பெண்ணுடன் உடலுறவு கொள்கிறார். உடலுறவு முடிந்ததும் தனக்கு பாரிச வாதத்தால் ஏற்பட்ட வாய், கை கோணல்கள் சரியாகிவிட்டதை உணர்ந்து **"அல்லேலூயா"** என்பார். வாசிப்பவருக்கு சிரிப்பை அடக்க முடியாதிருக்கும்.

**கலாசாரம்**

கலாசாரம் என்பது பல்வேறு காரணி களைத் தன்னுள் அடக்கியதாக இருந்தாலும் இன்றளவும் கூட, ஆண், பெண் உடல்சார்ந்த நடத்தைகளே அதிகம் இந்தச் சொல்லால் அர்த்தம் பெறுகிறது. ஆடைகள் குறித்து அடிக்கடி பேசப்பட்டாலுங்கூட, திருமணத்திற்கு அப்பாலான உறவுகள், திருமணத்திற்கு முந்தியதான உடல் உறவுகள், ஒருவனுக்கு ஒருத்தி என்ற வரம்பை மீறுதல், தடுக்கப்பட்ட உறவு முறைகளுக்குள் திருமணம் செய்தல், உறவு வைத்தல் போன்ற ஆண், பெண் உறவுளே இங்கே கலாசார மீறல்களாகக் கருதப்படுகின்றன. இன்றளவும் இதனைக் காணக் கூடியதாக உள்ளது.

கூத்து படிச்ச கதையில் வரும் கதாநாயகன் சவிரியான் றோசம்மாவோடு சகோதரியாகப் பழக, உண்மைக்குப் புறம்பாகக் "வச்சிருக்கிறான்" என்று கதை கட்டி விடுவதும் அதை ஊர் நம்பினாலும் சவிரியானின் மனைவி நம்பாமல் ஊரை ஏசுவதும் என முற்போக்கான பல சம்பவங்கள் பதிவு செய்யப் பட்டுள்ளன. 64 டிசம்பர் 22இல் அடைக்கலத்தார், அவரது தம்பி அந்தனி முதலாளி, அடைக்கலத்தாரின் மகன் மைக்கல் ஆகிய மூவரும் மாட்டின் என்பவனின் மனைவி மேரி எனும் பெண்ணின் மேல் ஆசை கொள்வதுவும் அடைக்கலத்தாரைத் தவிர வேறு யாருக்கும் அவள் இசைய மறுத்தவுடன் மாறுவேட மிட்டும், கத்தியைக் காட்டி பயமுறுத்தியும் அவளை மற்ற இருவரும் அடைகிறார்கள். அக்காலச் சமூகச் சூழலில் பெண் என்பவள் வெறுமனே ஒரு போகப்பொருள், மனது என்று ஒன்றில்லாத உடல் என்ற ஆண் ஆதிக்க எண்ணத்தைக் கதாசிரியர் வெளிப் படுத்திக் காட்டுகிறார். எடுத்துக்காட்டாக, **"ஏழ எளியதுகள் கொஞ்சம் எடுப்பா பிறந்திரக் கூடாது. மீறிப் பிறந்திட்டா ஏலுமானவன் கையெல்லாம் ஏடாகூடம் பண்ணத்தான் பாக்குது"** என்ற கூற்று வலுச்சேர்க்கிறது. அதேவேளை, மாட்டின் என்ற பாத்திரம் **"பிள்ள எனக்குப் பிறந்தா என்ன, உனக்குப் பிறந்தா என்ன? இதுகள் மேரிட பிள்ளைகள், நல்ல பிள்ளைகளாத்தான் இருக்கும்"** என்ற கூற்று பெரியவர்களின் தகாத நடத்தைகளுக்கு பிள்ளைகள் பலியாகிவிடக் கூடாது என்ற நல்லெண்ணத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது.

குஞ்சரம் ஊர்ந்தோர் நாவலில் வரும் ஆனாப் பிள்ளையின் திருமணமான இரு புதல்விகளும் கார் டிரைவரான இஸ்லாமியர் அமீர்பாயோடு ஓடிச் சென்று விடுவது, தோற்றுப் போனவர்களில் முத்துத்தம்பியுடன் மரியானா, மேரிநோனா ஆகியோர் மனைவியர்களாக ஒன்றாக வாழ்வது, திசையறியாப் பயணங்களில் செல்லாச்சி மாமியோடு மருமகன் கருணாகரன் குடும்பம் நடத்துவது என மீறல்களும் அதற்கான நியாயங்களும் தொடர்ந்து பேசப்படுகின்றன.

அனைத்து நாவல்களிலும் கதை மாந்தர்கள் சாதாரண மனிதர்கள் என்பதால் அவர்கள் பேசுகிற பாணியிலேயே உரையாடல்கள் அமைந்து காணப்படு கின்றன. இதனால் அவர்கள் சரளமாக பேசுபவற்றுள் கெட்ட வார்த்தைகளும் அடங்கி விடுகின்றன. இது குறித்து வாசகர்கள் சிலர் விமர்சித்துள்ளமையும் அறியக்கூடியதாகவுள்ளது. எனினும், புனிதங்கள் எனப் போற்றப்படுகின்ற இலக்கியங்களில் விரவிக் கிடக்கின்ற ஆபாசங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் புனிதங் களைப் புறந்தள்ளிவிட்டு , மனிதங்களைப் பேசுகின்ற இவரது படைப்புக்களில் அவை வரையறைக்குட் பட்டவையாகவே அமைந்து காணப்படுகின்றன என்பதுவும் குறிப்பிடத்தக்கது. எனினும் தேவையற்ற விதத்தில் மீண்டும் மீண்டும் கூறியது கூறலாக வரும் சில கொச்சை மொழிகளைத் தவிர்த்திருக்கலாம். உதாரண மாக, திசையறியாப் பயணங்கள் நாவலில் செல்லாச்சி மாமியின் சிந்தனைக்குள் வரும் வாக்கியமாக "வேசை, தேவடியாள்" போன்ற சொற்கள் மறுபடி மறுபடி வருவது தேவையற்றது என்ற எண்ணம் தோன்றுவது தவிர்க்க முடியாததாகவுள்ளது. தவிரவும் இதற்கு எதிர்ப்பாற் சொற்களாக ஆண்களைக் குறிக்கும் சொற்கள் கூட, அன்று தொட்டு இன்றுவரை பாவனையில் இல்லை என்பதும் உறுத்தலாகவுள்ளது.

**நாடகம், கூத்து**


திரு. சீமான் பத்திநாதன் அவர்களின் நாவல்களில் கூத்து படிச்ச கதை தொடக்கம் எல்லாக் கதைகளிலும் நாடகம் மற்றும் நாட்டுக்கூத்து தொடர்பான ஏராளமான விடயங்களும் விளக்கங்களும் பரவிக்கிடக்கின்றன. அதிலும் கூத்து பழகும் நாட்களில் நடக்கும் கூத்துக்கள் ஏராளம். கள்ளு, சாராயம் எனப் பணச் செலவும், நேரச் செலவும் அதிகமாக இருக்கும். நாடகம் படிப்பது புனிதமான காரியம் என அதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்குபற்றும் அனைவரும் அடிக்கடி சொல்லிக் கொண்டே, அதனை அவர்களே அடிக்கடி மீறிக் கொண்டும் இருப்பதுவும் தனியான நகைச்சுவைக் கதைகள்தான். நாடகம் படிப்பவர்களே அதற்கான செலவையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனும் நியதி பல வறிய குடும்பங்களை மேலும் வறுமைக் குள்ளாக்குவதும் அதனால் எழுகின்ற அக, புற பிரச்சினைகளும் இங்கு அலசி ஆராயப்படுகின்றன. படித்தவர்களும் பாமரர்களும் இணைந்து, பழகி, ஒத்திகை பார்த்து அரங்கேற்றும் இந் நிகழ்வு மரபு ரீதியாக இன்றுவரை தொடர்ந்து கொண்டிருப்பதையும் நோக்க முடிகிறது.

எல்லா நாவல்களிலும் கள்ளு மற்றும் சாராயம் ஆகிய இரண்டும் இல்லாத ஏதாவது ஒரு சுவாரசியமான விடயமோ அல்லது தீவிரமான விடயமோ நிகழ்ந்து விட முடியாது எனக் கூறக்கூடியதாக அவற்றின் பாவனை பாத்திரங்களிடையே சாதாரணமாக நிகழ்கிறது. குறித்த சமூகத்துடன் இன்றுவரை பின்னிப்பிணைந்ததாக இவை காணப்படுகின்றன. உடல் உழைப்பு சார்ந்ததான தொழில்களை ஏராளமான மக்கள் செய்வதனால் உடல் களைப்புத் தீர அருந்துவது என்பதும் நகைச்சுவை உணர்வு அதிகம் கொண்ட மக்கள் என்பதால் மகிழ்ச்சியை அதிகப்படுத்திக்கொள்ள அருந்துவது என்பதுமாக காரணங்களை அறியக்கூடியதாக உள்ளது.




**தொகுத்து நோக்கும்போது...**

ஒரு சமூகத்தின் படிப்படியான வளர்ச்சி என்பது திடீரென ஏற்பட்டுவிடும் புரட்சி போன்றதல்ல. அறிவு வளர்ச்சிக்கும் காலத்தின் ஓட்டத்திற்கும் புவியியல் தட்ப வெப்ப சூழல்களுக்கும் தொழில்நுட்ப வளர்ச்சிக்கும் ஏற்ப மிக மிக நிதானமாக, ஆறுதலாக நிகழ்ந்து கொண்டிருக்கின்ற மாற்றமாகும். இது கண்ணுக்குத் தெரியாமலேயே நடந்துவிடுகின்ற மாற்றங்களாகும். இதில் வாழுகின்ற ஒருவர் தான் நடந்து வந்த பாதையையும் கடந்து வந்த அனுபவங்களையும் தனது சம காலத்திலும் அதற்கு முன்பாகவும் நடந்ததாக அறியப்படுபவற்றையும் ஒன்றாக்கி, கற்பனையை அளவோடு கலந்து அதனை புனைவாக அமைப்பது என்பது எல்லோருக்கும் முடியாதவொரு காரியமாகும்.

அதனை மிகச் சிறப்பாகச் செய்திருக்கிறார் சீமான் பத்திநாதன் அவர்கள். இவருக்கு முன் ஈழத்தில் கரையோர மக்களின் வாழ்க்கையைச் சொல்லும் புதினமாக, செங்கை ஆழியான் எழுதிய வாடைக்காற்று நாவல் மிகப் புகழ்பெற்றது. இங்குள்ள பரதவர்களின் மூதாதையர்கள் எனக் கருதப்படுகின்ற மக்கள் வாழ்ந்த தூத்துக்குடிப் பகுதியின் பரதவர் மற்றும் அவர்களோடு இணைந்த வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டியது ஆழிசூழ் உலகு, கொற்கை எனும் ஜோ.டி. குரூஸ் அவர்களின் நாவல்கள் ஆகும். மேலும் மன்னார் பிரதேசத்தில் எஸ்.ஏ. உதயன் எழுதிய லோமியா நாவலும் இச்சந்தர்ப்பத்தில் நினைவுகூரத்தக்கவை யாகும்.

நல்லவைகள், கெட்டவைகள் என எதையும் அடையாளம் இடாமல் ஒரு நீரோட்டம் போன்று சீமான் பத்திநாதன் அவர்களின் நாவல்கள் அமைந்து விடுகின்றன. எல்லா ஊர்களிலும் வாழும் ஒரு சாரார், எப்போதுமே தமது ஊர் என்பது பச்சைப் பசேலென, பாலும் தேனும் சொரிந்த வண்ணம் உள்ளதாகவும் எல்லா மாந்தர்களும் மிக மிக நல்லவர்களாகவும் பரிசுத்தர்களாகவும் ஒழுக்க சீலர்களாகவும் உள்ளனர் என்பதாகவும் பதிவு செய்யப்பட வேண்டும் என விரும்புகின்றனர். மிக நல்ல விருப்பம்தான். அவர்களின் எதிர்பார்ப்பும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுதான். கெடு வாய்ப்பாக, உண்மை அப்படி இருப்பதில்லையே... அப்படி இருக்க முடியாதே... சீமான் பத்திநாதர் என்ன செய்ய முடியும்? உள்ளதை உள்ளவாறு கூறுவது தானே உண்மை, பரிசுத்தம், ஒழுக்கம். எனவே அந்த ஒழுக்கத்தை அவர் சரியாகவே கடைப்பிடித்துள்ளார்.

அவரது கதைகளில் கதாசிரியரைக் கண்டு பிடிப்பது சிரமமாகவே உள்ளது. கதாபாத்திரங்களின் கைகளில் கதையை ஒப்படைத்து விடுவதால், தேவையற்ற வர்ணனைகள், கூட்டல்கள், குறைச்சல்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. தன்னை ஓர் உத்தமராக, உயரியவராக அடையாளம் காட்டும் தேவை இல்லாத தால் கதைகள் யதார்த்தமானவைகளாக அமைந்து விடுகின்றன. சிற்சில சம்பவங்கள் சினிமாப் பாணியில் அமைந்துள்ளதாக எண்ணத் தோன்றினாலும் தர்க்க ரீதியாக சில சம்பவங்கள் ஏற்றுக்கொள்ள முடியாததாக அமைந்திருந்தாலுங்கூட, அவரது நாவல்களை வாசிக்கத் தொடங்கும் எவரும், வாசித்து முடித்து விட்டுத்தான் புத்தகத்தைக் கீழே வைப்பார்கள் என்ற உறுதியைத் தரலாம். அந்தளவுக்கு எடுத்துக்கொண்ட கதையை அதன் கருப்பொருள் மாறிவிடாதவாறு மிக மிக சுவாரசியமாக நகர்த்திச் செல்லும் சூட்சுமம் தெரிந்தவர் திரு. சீமான் பத்திநான் பர்னாந்து அவர்கள். நாவல் இலக்கியத்தின் தவிர்க்க முடியாத ஒருவராக இவர் மாறியிருப்பதன் இரகசியமும் அதுதான் போலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குறுகுறுப்பு

சீமான் பத்திநாதன் பர்ணாந்து

“இந்த நாப்பத்தஞ்சு வயசிலயும் அப்பு நல்ல வாளிப்பா மாப்பிள்ள மாதிரி வடிவாத்தான் இருக்கிறார்” என்று வெற்றிநாதன் பெருமையுடன் நினைத்துக் கொண்டான். தானும் தம்பியுமாக காலை வேளையில் கடையடிக்கு வந்து கடைதிறந்து கழுவித்துடைத்து கூட்டிப்பெருக்கி ஒரு மயிர் மட்டை இல்லாமல் துப்புரவாக்கி ஓய்ந்த பிறகுதான் அப்பு வருகிறார். ஆனாலும் அவர் குளித்து முழுகி நன்றாய் பவுடர் கமகமக்க வருவதில்தான் வெற்றிக்கு கொஞ்சம் சந்தேகம். இந்தாள் இன்னமும் மினக்கெட்டு நேரத்தை வீணாக்கி தன்னை அதீதமாக ஏன் அலங்கரித்து அழகுப்படுத்திக் கொள்ளுகிறார்? இது வெற்றிநாதனின் மனதை சில நாட்களாக அரித்துக் கொண்டிருக்கும் ஒரு மகத்தான கேள்வி. இதற்கான பதில் அப்புவிடம் தான் இருக்கிறது. ஆனால் அதை அப்புவிடம் கேட்டுத் தெரிந்து கொள்ள வெற்றியால் முடியுமா? முடியாது அது ஒருநாளும் அவனால் முடியக்கூடிய காரியமில்லை. கடைக்கு வரும் காலைப்பத்திரிக்கையை அவதிப்பட்டு படபடவென்று விரித்து ஒரு பார்வை பார்த்து முடிப்பதற்குள் கடைக்குள் சனம் சேர்ந்து விடும். ஆனாலும் அப்பு வேலைக்கு முன் நிற்க மாட்டார். வெற்றியின் முகத்தையோ தம்பி மனுவேலின் முகத்தையோதான் பார்ப்பார் “வளர்த்த நாய் முகத்தைப் பார்த்த மாதிரி” என்பார்களே அது போல.

முன்பெல்லாம் தானே வேலைக்கு முன்னுக்கு நிற்பார். அப்போதெல்லாம் வெற்றிநாதனைப் பார்த்து அவன் காதுக்குள் “நல்லாப் பாத்துக்கோ என்ன என்ன கோணங்களில் எப்ப எப்ப எப்பிடி எப்பிடி நிக்கிறதெண்டு கண்வெட்டாம கவனிச்சுக்கோ” என்று கூறி விட்டுத்தான் வேலை தொடங்குவார். தான் வேலை செய்து கொண்டிருக்கும் நேரத்தில் கூட வெற்றி தன் வேலைப்பாடுகளை ஈடுபாடாய் பார்த்துக் கொள்கிறானா அல்லது பராக்குப் பார்க்கிறானா என்று இடையிடையே அவனைப் பார்த்து கண்காணித்துக் கொள்வார். அதெல்லாம் வெற்றிநாதன் வேலை பழகு மட்டுந்தான். அதன் பிறகு அதாவது அவன் செய்யும் வேலைத் திறத்தைப் பார்த்து திருப்தியடைந்த பிறகு அவர் அவனை கண்காணிப்பதேயில்லை. இதுபோக தம்பி மனுவேலும் தமையன் வெற்றியைப்பார்த்து வேலை பழகி விட்டான் அதில் அவருக்குப் பரம திருப்திதான். கண் கண்டதை கை செய்துவிடும் என்பதில் எப்போதும் அவருக்கு அசைக்க முடியாத நம்பிக்கை. இதெல்லாம் பரம்பரை ஞானம் அல்லவா?

வாலிப மிடுக்குடனும் அழகுடனும் அப்பு இருக்கிறார் என்று வெற்றிநாதன் தனக்குள் பெருமைப்பட்டுக் கொண்டாலும் கடந்த சில மாதங்களாக அப்புவுக்கு காலை வேளைகளில் லேசாக கை நடுங்குவதை கவனித்துப் பார்த்துத்தான் வருகிறான். அதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனுக்கு மிகுந்த ஆச்சரியம். இந்த இளம் வயதில் இவருக்கு நரம்புத்தளர்ச்சி வருவதற்கு எந்த சாத்தியக் கூறுகளும் இல்லை. அப்பு பெரிய மதுப்பிரியரும் இல்லை. காமினி அக்காவின் கள்ளச்சாராய விற்பனை நிறுவனத்தில் அப்புவும் ஒரு வாடிக்கையாளர்தான் என்றாலும் காலையில் ஒரு "கால்தான்". மிஞ்சிப் போனால் மேலும் கடனுக்கு இன்னுமொரு கால். அத்தோடு சரி. அப்புறம் கடை பூட்டி மேல் கழுவியபின் இன்னொரு கால். ஆகக்கூடி ஒரு நாளில் முக்கால் போத்தல்தான் எடுக்கிறார். இதையெல்லாம் ஒரு பெருங்குடியாக இங்கே யாரும் சொல்லிக் கொள்வதில்லை. வெற்றிநாதனுக்கும் தம்பி மனுவேலுக்கும் இதில் பெரியதாக ஆட்சேபிப்பதற்கு ஒன்றுமில்லை. " அவர் உளய்க்கிறத அவர் குடிச்சிட்டுப் போவட்டும் நம்ம மடிக்குள்ள அவர் கை பூந்துராம இருந்தாச் சரி"

இதோ வெற்றிநாதன் வேலை தொடங்கி விட்டான். " அப்பிடியே ஆடாம அசையாம இருங்க" என்று கட்டளை இட்டபடியே கத்திரியை கையாண்டு கொண்டிருந்தான். முடிதிருத்த வருபவர்கள் முகம் சுழித்து எரிச்சலடையாமலிருக்க அவர் வாயை இடைக்கிடையே கிண்டிப் பார்க்கும் வேலையையும் கூடவே சேர்த்து செய்து கொண்டிருந்தான். இதெல்லாம் ஒரு வியாபார உத்தி என்றும் வைத்துக் கொள்ளலாம். பாடசாலையில் ஆசிரியர் சொல்லைக் கேட்கிறார்களோ இல்லையோ வெற்றிநாதன் சொல்லை இங்கே வருபவர்கள் கேட்டேயாக வேண்டும் "இப்பிடித் திரும்பு" " கொஞ்சம் அண்ணாந்த மாதிரி முகத்தத் தூக்கிக்க" "அ..அ.. அறம்புறமா தூக்க வேணா" " அந்த மட்டில இருந்தாப் போதும்" என்ற இம்மாதிரியான ஆணைகளுக்கு அங்கே வேலைக்கு வரும் எல்லோரும் அடி பணிந்து தான் ஆகவேண்டும். அத்தோடு வெற்றிநாதனின் அவ்வப்போதைய குசல விசாரிப்புகளுக்குக் கூட அவர்கள் பதில் தந்துதான் ஆக வேண்டும். அல்லாது போனால் கதிரையில் இருப்பவரை தனது அடி வயிற்றால் எக்கி எக்கி இடித்துக்கொண்டு மறுபடி மறுபடி அந்தக் கேள்வியை திருப்பி திருப்பிக் கேட்டுக்கொண்டே இருப்பானே. இந்த எக்கி இடிக்கும் காரியம் சற்று விரசமாய் இருந்தாலும் கூட வேலைக்கு வந்தவர் அதை சட்டை பண்ணாது சகித்துத்தான் ஆகவேண்டும். இந்த வெட்டி விழுத்து கிற வேலையை நாமே செய்து கொள்ளலாம் என்றால் இதில்தான் நமக்கு பரிச்சயமே இல்லையே என்ற ஆதங்கத்தோடு அவர் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும். இதுபோக இன்றைய தொழில் நிலைபரம் அதன் நிறைகுறை, வரவுகள் செலவுகள், மீதி இலாபங்கள், பங்குபாகங்கள் இவை பற்றிய விலாவாரி யான விபரங்களையும் வெற்றிநாதன் கேட்டறிந்து கொள்வான். இந்த செய்திகள் எல்லாம் தனக்கு மட்டுமானது அல்ல எல்லாருக்கும் பொதுவானதுதான் என்ற கோதாவில் இங்கே கடைக்குள் காத்துக் கொண்டிருக்கும் கண்ணியம் மிக்க வாடிக்கையாளர் களையும் இந்த சம்பாஷணைக்குள் சட்டென்று இழுத்து விட்டு விடுவான்.

" எப்பிடிண்ணே இண்டைக்குப் பாடு?" என்று ஆரம்பித்து " இப்ப இந்த கணிசத்துக் கிள்ள பட்டுக் குடுக்கிற பாரய்க்கு இன்னும் கொழுப்புப் பத்தாது" என்ற தனது குறை விளம்பல்களையும் அதோடு சேர்த்து இணைத்துக் கொள்வான். இடை யிடையே தன் தம்பியின் பக்கம் திரும்பி அவனது மந்தகாசச் சிரிப்போடு சேர்ந்த தலையசைப்பையும் ஏற்றுக்கொண்டு அதை தனது உரையாடலுக்கான அங்கீகாரமாகவும் ஆக்கிக்கொள்வான்.

இவ்வளவு காரியங்களையும் கையாண்டு கொண்டிருக்கும் வெற்றிநாதனுக்கு கடந்த சில வாரங்களாக பெரிய இடைஞ்சலாக இருப்பது அப்புவின் கை நடுக்கந்தான். இந்த நடுக்க வியாதியோடு அவதிப்படும் இவரை தொடர்ந்து வேலை செய்ய அனுமதிப்பதா வேண்டாமா என்று திண்டாடிக் கொண்டிருக்கிறான். செய்கிற வேலையும் இப்படியான ஆபத்தான வேலையாக அல்லவா இருக்கிறது. கத்தியோ கத்திரியோ கைநடுக்கத்தால் கைதவறி அல்லது கட்டுப்பாட்டை இழந்து அங்கே இங்கே பட்டு விட்டால் ஏற்படும் விளைவுகளுக்கு யார் பொறுப்புச் சொல்லுவது?. " வியாதி இருக்குதெண்டு தெரிஞ்சப்புறவும் கத்தியக் கைல எடுக்கலாமா ஓய்" என்று கலவரந்தான் பண்ணுவார்கள்.

வெற்றிநாதன் வேலையைத் தொடர்வதோடு சேர்ந்து அவனது சிந்தனையும் தொடர்ந்து கொண்டு தான் இருந்தது. " கிடைக்கிற கூலி என்னவோ ஒரு ரூபாய் ஒண்ணரை ரூபாய்தான் இதற்காக உயிரைக் கையில் பிடித்துக்கொண்டுதான் வேலை செய்ய வேண்டி இருக்கிறது. எப்படியோ நம்மை கஷ்டப்பட்டு சரியான நிதானத்தில் வைத்துக்கொண்டு வேலையைச் செய்தாலும் மதியத்திற்குப் பின்னால் வருபவர்கள் மட்டில் வெகு எச்சரிக்கையாய் இருக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டு விடுகிறது. மதியக்கள்ளின் விளைவால் மதுபோதையோடு வருகிறவர்களால்தான் இந்த பிரச்சினையே ஆரம்பமாகிறது. கத்தி கழுத்துக்கு அண்மையாக இருக்கும் போது கூட அதைக் கவனியாமல் கண்ட கண்ட மேனிக்கு திரும்பி திரும்பி பக்கத்தில் இருப்பவனோடு கதைக்க ஆரம்பித்து விடுகிறார்கள். எல்லாம் கடற்கரை கதைதான். முதலாளி கேட்டால் தற்கொலை கூட செய்து கொள்வான். அந்தளவிற்கு அவரது தாய் தங்கைகளின் அந்தரங்க வாழ்க்கை பற்றிய மோசமான விமர்சனம்தான் அங்கே அரங்கேற்றப்படும். கத்தியானது எந்தக்கணத்திலும் அவர்கள் கழுத்தை பதம் பார்த்துவிடும் என்ற எண்ணமோ எச்சரிக்கைக் கணிப்போ எதுவும் இல்லாமல் இப்படி எழுந்தமானமாக நடந்து கொள்ளுகிறார்கள். இப்படி ஏறுக்கு மாறாய் அவர்கள் கதைக்கும் போது கத்தியை கையில் பிடித்துக்கொண்டு கண்கொட்டாமல் அவர்கள் பேசுவதையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதை தவிர வேறு வழி தோன்றுவதில்லை வெற்றிநாதனுக்கு. இப்போது கைநடுக்கத்துடன் கஷ்டப்பட்டு அவதிப்படும் அப்பு இப்படியான சந்தர்ப்பங்களை சமாளிக்க என்ன வழி செய்யப்போகிறார் என்ற கேள்வியும் வெற்றியின் மனதைக் குடைந்து அரித்துக் கொண்டுதான் இருக்கிறது.

இதற்குள் இன்னுமொரு கூத்தும் இங்கே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெறும் " இதோ இந்த மழிப்புடன் அப்புவுக்கான கால் போத்தலுக்கு காசு சேர்ந்து விடும்" என்று வெற்றி கணக்குப் போடும் போது முகச்சவரம் செய்தவன் சாவாதானமாக எழுந்து " கணக்கில வச்சிக்க வாற கிளம சேத்துக் குடுத்திருவன்" என்று சொல்லிவிட்டு சர்வசாதாரணமாய் நடையைக் கட்டிவிடுவான். எதிர்த்து கதைக்க ஏலாது. வேலையை முடித்துக் கொண்டு போகிறவனை இழுத்துப்பிடித்து வழித்த மயிரை எடுத்து மறுபடியும் ஒட்டியா அனுப்ப முடியும்? பத்தோடு பதினொன்றாக இதை விட்டு விட வேண்டியதுதான். இனி இந்தக்கூலிக் காசு கிடைக்கும் என்பதில் எந்தவிதமான நிச்சயமுமில்லை. இரக்கப்பட்டு அவனாக தந்தால் வாங்கிக்கொள்ள வேண்டியதுதான். வாய்விட்டுக் கேட்டு வசூலித்துக் கொள்ள முடியாது. அப்படியெல்லாம் ஒரு வழக்கத்தை வெற்றிநாதன் குடும்பம் இங்கே கையாண்டதாக சரித்திரம் இல்லை. அப்படி அவர்களை பழக்கி வைத்து வேலை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள் இந்தக்கிராமத்து மக்கள்.

இரண்டு மூன்று பேர் மட்டில்தான் வேலை முடித்து வெளியே போயிருந்தார்கள். அப்புவுக்கு கொடுப்பதற்கு இன்னும் ஆறேழு பேருக்காவது முடிவெட்டி முடிக்க வேண்டும். இதற்கு இடையே கடன் வேறு சொல்லுகிறார்கள். இதையெல்லாம் கழித்துதான் காசு சேர்க்க வேண்டும். அப்படி செய்து முடித்தால்தான் அப்புவுக்கு கால் போத்தலுக்காவது காசு தேறும். வெற்றி புறுபுறுத்துக் கொண்டான் தன் கண் முன்னாலயே இரண்டரை ரூபாவுக்கு விற்ற கால் போத்தல் சாராயம் இப்போது இருபது ரூபாயில் வந்து நிற்கிறது. இந்த தலைமுடியின் வளர்ச்சி வேகத்தை விட சாராயத்தின் விலை ஏற்றம் வலு வேகமாக வளர்ந்து விட்டது. இதற்கு யாரைக் குற்றம் சொல்வது. ஒருவேளை இந்தப் பெருங்குடி மக்கள் எல்லாரும் ஒத்து "இனிக்குடிப்பதில்லை" என்ற ஒரு தீர்மானத்திற்கு வந்தால் அதன் விலை வீழ்ச்சியடையலாமோ என்னவோ என்று எண்ணிக் கொண்ட வெற்றிநாதன் கடைக்கண்ணால் தம்பியையும் ஒரு பார்வை பார்த்துக் கொண்டான்.

தம்பி மனுவேலுக்கு இந்த கடைத்தொழில் செய்வதில் பெரிதாய் இஷ்டமில்லை என்று வெற்றிக்கு தெரியும். " இந்த மசிர் சிரய்க்கிற தொழில துலைச்சுப் போட்டு வேற வேல பாப்பம்" என்ற தீர்மானம் அவனுக்குள் முளைவிட்டுக் கொண்டிருப்பதால் கடைக்கு வருபவர்களின் காரியங்களில் பெரிய கரிசனை காட்டி செயற்படுவதில்லை. வெற்றியின் வேலை வேகம் போன்று ஈடுபாட்டுடன் வேலை செய்யும் மனப்பாங்கு அவனிடமில்லை. ஏனோ தானோ என்று ஆடிப்பாடித்தான் வேலை செய்கிறான். சில வேளை களில் இதைக்கண்டிக்கும் தோரணையில் வெற்றி பார்க்கும் பார்வைகளில் நெருப்பு தெறிப்பதால் அதற்கும் பயந்து கொண்டு வேலையில் கொஞ்சம் வேகமெடுப்பான். அவ்வளவுதான். கொஞ்சநேரம் கழிய " பழைய குருடி கதவ திறவடி" என்ற பாட்டுத்தான்.

"கைநடுக்கமண்டு நமக்கு கண்கட்டி விளையாட்டுக் காட்டிப்போட்டு காலைப் பாரோட ஒரு கால் போத்தலை இறக்குவதற்கான உத்தி" இது என்று தான் அவன் அப்புவின் கைநடுக்கத்தை குறித்து திண்ணமாய் நம்பிக்கொண்டிருக்கிறான். இதனால் அப்பு மீது அவனுக்கு அளவுக்கு மீறிய எரிச்சல். " எப்பிடியும் குடிக்கத்தான் போறாரு அத வாயால கேட்டு குடிச்சிட்டுப் போறது அதுக்கெல்லாம் ஏன் பொய்யாய் கைநடுங்குது கால் நடுங்குது என்று படம் காட்டி பாவ்லா பண்ணுகிறார்".

என்றாலும் அப்பு மீது தம்பி மனுவேலை விட வெற்றிக்கு பாசம் அதிகம்தான். இந்தக் கைநடுக்கத்தின் மருந்து காமினி அக்கா வீட்டுச் சாராயம் தான் என்பதை அவன் கண்டுபிடித்து விட்டான். காலியாய் கிடக்கும் காசுப் பேணியை வேகமாய் செய்யும் வேலையால் விரைவாய் நிறைத்து விட வேண்டும் என்ற எண்ணம் அவனை உந்தித்தள்ள மடமடவென்று வெட்டி மழிப்பதில் கவனம் செலுத்த ஆரம்பித்தான்.

காரியமே கண்ணாயிருந்தாலும் அப்புவின் கைநடுக்கத்தை கடைக்கண்ணால் அவதானித்துப் பார்த்துக் கொண்டே இருந்தான் வெற்றிநாதன். சனம் பெருத்த கிராமம் இது. எப்படியும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட சனத்தொகை. மாவட்டத்திலேயே இந்தக் கிராமம் பரப்பிலும் சனத்தொகையிலும் இரண்டாவது இடத்தில் இருப்பதாக பேசிக் கொண்டதை வெற்றி நாதன் தன் காதாலயே கேட்டிருக்கிறான். இது அதாவது கேள்விச் செல்வம் என்பது இயற்கை அவனுக்கு அளித்திருக்கும் விஷேசித்த ஒரு கொடை. கண்களை அந்தப்புறம் இந்தப்புறம் திருப்பி கதைக்க முடியாத ஒரு கஷ்ட நிலைக்குள் காதுகளையே கண்ணாக்கி கடமை புரிந்தாக வேண்டிய கட்டாயத்துக்குள் அவன் இருக்கிறான். அதையும் மீறி அடாவடித்தனமாக அங்கே இங்கே பார்த்து திரும்பிக் கதைத்தானென்றால் அவனது சேவை பெறுநரின் கழுத்திலோ முகத்திலோ ஒரு வெட்டு விழுந்து விடக்கூடும். கையில்தான் கத்தி இருக்கிறதே...சவரக்கத்தி.

அப்புவின் கைநடுக்கம் சற்று அதிகரித்திருப்பது போல வெற்றிக்குத் தென்பட்டது. கவலையுடன் காசுப் பேணியைப் பார்த்தான். இதுவும் கூட கெளிகண் பார்வைதான். வாடிக்கையாளரை திருப்திப் படுத்தினால் தான் மறுபடியும் அவர்கள் கடையை நாடுவார்கள். அப்படி திருப்திப்படுத்த முடியாத பட்சத்தில் அவர் களது வருகையும் வாடிக்கையும் இழக்கப்படுவதோடு வேண்டாத விமர்சனங்களுக்கும் வெற்றிநாதனின் கைப்பக்குவம் உட்படுத்தப்படக்கூடும். "மழிக்கிறதில ஒரு இதம்பதம் வேணாமா ஓய்! அங்கயும் இங்கயுமா ஒரே பிராக்குப்பாக்கிறதா வேல? இப்பிடி வேலயில பராக்குப் பாத்தா காயம் படாம மறுவா கருவாடா படும்?"

வந்த சனம் தத்தம் வேலை முடிந்து போனாலும் தொடர்ந்தும் ஒவ்வொருவராய் வந்து உட்கார்ந்து கொண்டுதான் இருந்தார்கள். வருபவர்கள் வேலை முடிந்து போகும் வரை உட்கார ஒரு நீளமான வாங்குப்பலகை எப்போதும் ஆயத்தமாய் இருக்கிறது. வேலை செய்யும் தகப்பனும் பிள்ளைகளும் ஆளுக்கொரு கதிரையயும் நீளக்கண்ணாடியையும் கையாளுகிறார்கள். வருபவர்களை ஆசுவாசமாக அமர்த்தி முடி திருத்தவும் முகம் மினுக்கவும் அவையும் ஆயத்தமாய் இருக்கன்றன.

அப்புவுக்கு பொறுக்க முடியாதபடி கை தந்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யடிக்கத் தொடங்கி இருந்தது. " கிடக்கிறத பொறுக் கிக்கின்டு போப்பு" என்று சொல்லலாமா வென்று வெற்றி யோசித்தான்" "வேண்டாம் வேண்டாம் அவள்ட அந்த நாத்த சாராயத்த குடிக்க நாமளே அனுப்பினதா இருக்கக்கூடாது…அவராகவே போனாப் போய்க்கட்டும்" திரும்பிப் பக்கத்தில் வேலை செய்து கொண்டிருக்கின்ற தம்பியைப் பார்த்தான் வெற்றி. ஒன்றுந்தெரியாத அப்பாவியைப்போல் அப்புவின் அந்தரத்தைப் புரிந்து கொள்ளாதவன் போல் கருமமே கண்ணாகி கடமையைச் செய்து கொண்டி ருந்தான் அந்தக் கடமை வீரன் மனுவேல். வெற்றி நாதனுக்கும் சிறு சந்தேகம். உண்மையாகவே இவன் அப்புவின் தந்தியடிக்கும் கைகளை காணவில்லையா? அல்லது கண்டும் காணாதவன் மாதிரி நடிக்கிறானா? ஆனாலும் அப்பு இன்னும் வெளிக்கிட மனமில்லாமல் தான் இருக்கிறார் என்று வெற்றிக்குப் பட்டது. அதற்கான அடையாள அறிவிப்புக்கள் இன்னும் வெளிப்படாமல் இருப்பதும் அதற்கான காரணமாக இருக்கலாம். எந்த சயிக்கினை காட்டப்பட்டாலும் காசுப்பேணியில் கணக்குக்குறைகிறதே.

கடைக்கு வெளியே எதிரில் இருந்த தகரப் படலை கிறீச்சிட்டு திறந்த சத்தம் கேட்டது. வழமையாக கேட்கும் சத்தம்தான். ஓ….அப்புவின் ஆட்டத்துக்கு முதலாம் மணி அடித்து விட்டது என்றும் இதை எடுத்துக்கொள்ளலாம். அந்தக் தகரப்படலல் கூட திறக்கப்படும் போது சில அர்த்தங்களை வெளிப்படுத்திக் கொண்டுதான் திறக்கும். அத்தோடு அதில் ஒருசில கேள்விகளும் அடங்கி இருக்கும். இந்தக் கேள்விகளும் அர்த்தங் களும் எல்லோருக்கும் எளிதில் விளங்காது. ஆனால் வெற்றிநாதனுக்கு மட்டும் தகரப்படல் திறப்பதிலுள்ள அந்த முக்கியமான காமினி அக்காவின் கேள்வி சட்டென்று விளங்கி விடும் "ஏன் இன்னும் தோமை வரவில்லை? ஏன் சுணங்குகிறான்?" என்பதுதான் அந்தக்கேள்வி. வெற்றிக்கு விளங்காத இன்னொரு விளக்கமும் அதிலிருந்தது " ஐயாத்துரை யாவாரத்துக் குப் போய்ட்டார்" என்பதுதான் அந்த விளக்கம். இந்த விளக்கம் தோமைக்கு மட்டுமே விளங்கும் விளக்கம்.

தகரப்படலையைத் திறந்து வைத்துக் கொண்டு ஒற்றைக்காலை சவட்டி மடித்தபடி ஒய்யாரமாய் சாய்ந்து நிற்கும் காமினி அக்காவை ஒருமுறைப் பார்த்து விட்டு கிறங்கிப் போனான் வெற்றி. கனநேரம் பார்த்துவிடக் கூடாது. "கத்தி கதிரையில் இருப்பவரின் கழுத்தைப் பதம் பார்த்து விடுமே" என்ற பயம் வேறு. இந்த கணநேர தரிசனம் இன்றிரவைக் கழிக்கப் போதுமானது என எண்ணிக் கொண்டே தன்னை சுதாகரித்துக் கொண்டான் வெற்றி. இன்னொரு தரம் அந்தப்பக்கம் திரும்பி பார்க்கக்கூடாது. என்று திடசங்கல்பம் செய்து கொண்டு அப்புவின் நிலமை எப்படி இருக்கிறது என்பதை பார்ப்பதற்காக அப்பு வேலை செய்யும் திசையைப் பார்த்த வெற்றி திகைத்துப் போனான். "அப்பு எப்போது வெளியே போனார்?" என்ற யோசனையுடன் காசுப்பேணியைப் பார்த்தான். காசுப் பேணி காலிப் பேணியாக காட்சியளித்தது. தொடர்ந்து காமினி அக்காவின் தகரப் படலையைப் பார்த்தான். அதுவும் சாத்துப்பட்டு மூடியிருந்தது. "சரி அப்பு நடுக்க மருந்து குடிக்கப் போய்விட்டார்" வெற்றிநாதனின் வேலை தொடர்ந்தது. வேலையுடன் அவன் சிந்தனையும் தொடர்ந்தது. " கண்டுங்காணாமலுந்தாங் கொண்டு போயிருக்கிறார்"

சும்மா சொல்லக்கூடாது நாலு பிள்ளைகள் பெற்று விட்டதாகச் சொல்லுகிறார்கள். என்றாலும் காமினி அக்கா இன்னமும் சும்மா திம்மென்றுதான் இருக்கிறாள். பெற்று விட்டிருக்கிற நாலு பிள்ளை களைக் கூட வெற்றி இதுவரை சரியாகப் பார்த்த தில்லை. அதற்கு அவனுக்கு நேரமுமில்லை. வருகிற வாடிக்கையாளர்களை மழித்து துடைத்து திருப்தியாக்கி திருப்பி அனுப்புவதற்கே அவனுக்கு நேரம் போதாது. காசுப் பேணியை எப்படியாவது நிறைக்க வேண்டிய கட்டாயம் அவனைக் கட்டிப் போட்டிருந்தது. "எனக்கு முன்னுக்கு இப்பவும் ரெண்டு குமர் குந்திக்கிட்டிருக்கே".

அப்புவிற்கு அதைப்பற்றிய சிரத்தை எதுவும் இல்லை. காலையில் கடைக்கு கடமைக்கு வரவேண்டியது பத்துமணி வரை கை தந்தியடித்துக் கொண்டிருக்க வேண்டியது. ஒரு "கால்" இறங்கு மட்டும் இந்த நிலைதான். நிலைமை சீரான பின் வருகிற வாடிக்கையாளர்களை பையனின் பக்கம் சாமர்த்திய மாக தள்ளிவிடுவார். கடமைக்காக ஒன்றிரண்டு முகமழிப்புக்களை மட்டுந்தான் இவர் கையேற்பார். ஆனால் கண் மட்டும் காசுப்பேணியையே எப்போதும் கண்காணித்துக் கொண்டிருக்கும். நான்கு "கால்களை" ஐந்து "கால்களாக" மாற்றும் அபாரத் திறமை கொண்ட காமினி அக்காவிடம் ஒரு நாளைக்கு ஒருதரமாவது போய்வராவிட்டால் ஆற்றாமையால் அவர் சோர்ந்து வாடி விடுவார். இதற்குள் "அவவிட்ட ஒரு சொட்டு குடிச்சாத்தாம்பாரு குடிச்ச மாதிரி இருக்கு" என்ற பெருமிதமான பேச்சு வேறு.

பொழுது உச்சியை நெருங்கிக் கொண்டிருந்தது. கடைக்குள் சனத்தொகை சற்று அதிகரித்துக் காணப்பட்டது. சட்டென்று வேலை முடித்து சனத்தை அனுப்ப வேண்டும் என்ற ஆதங்கம் மேலிட மனுவேலன் தமையன் வெற்றிநாதனின் காதைக்கடித்தான். "ஆக்கள் வந்து காத்துக்கிட்டல்லா இருக்குதுகள். அப்பு எங்க துலைஞ்சார்? ஆக்களும் சிரச்சுப் போட்டு குளத்தில ஒரு முக்கி முக்கி எளும்பினால்தான கள்ளுக்காரியங்கள பாக்குங்கள்"

வெற்றிநாதன் பதில் ஏதும் சொல்லாமல் மனுவேலனை வெறித்துப்பார்த்தான். தொடர்ந்து அவன் பார்வை ஒருமுறை காமினி அக்கா வீட்டுப் பக்கமாக சுழன்று திரும்பியது. அப்புவின் குடிச்சந் தோஷங்களில் அவர்கள் இரண்டு பேரும் எப்போதுமே தலையிடுவதில்லை. ஆனால் இப்போதோ சன நெருக்கடி பெரும் பிரச்சினையாகி முன்னுக்கு வந்து முட்டிக் கொண்டு நிற்கிறது. "கடலுக்குப் போய் வாறதுகள் கள்ளுக்குப் போறதுக்கு அந்தரப்பட்டுக் கொண்டு நிக்கும் தப்பித்தவறி கள்ளுக்கிடைக்கல யண்டா நமக்கும் நாலு கடி சேந்துதா விளும்" இதற்கும் மேலாக நம் குலத்தையும் குறை சொல்ல ஒரு வாய்ப்பு கொடுத்த மாதிரியும் ஆகிப் போம்"

" இந்த எளிய நாசுவம் பண்ணின மினக்கேட்டால இண்டய காலக்கள்ளில மண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விழுந்திட்டுது போ"

வந்திருந்த வாடிக்கையாளர்கள் வாயிலிருந்தும் புறுபுறுப்புக்கள் புறப்படத் தொடங்கின.

" என்ன வெத்தி நேரத்துக்கு வேல முடிச்சி அனுப்புவியா? புதுக் கள்ளு கிடைக்கலயண்டா இண்டைக்கு பொளுது விடியாது போ"

"ஓமண்ண ஓமண்ண இந்தா வந்திற்றன் முகமளிக்கிறது மட்டுந்தான" பாத்திருக்க முடிச்சிருவம் கள்ளுக்கிடைக்கும் கள்ளுக்கிடைக்கும்"

மனுவேலன் கத்தியை சாணை பிடிக்க கதிரையை கடந்து போனான் கடந்து போகும் போதே மறுபடியும் காதில் ஒரு கடி கடித்தான்.

"இந்தக் கண்டார ஒளி மகன் எங்க துலைஞ்சானண்டு ஒரு எட்டு எட்டிப்பாத்திட்டு வாவன் ஆக்கள் கள்ளுக்கொதியில நிக்கிறாங்கள்"

காமினி அக்கா வீட்டில்தான் தோமையர் "கால்" காலாய் இறக்கிக் கொண்டு நிற்பார். முதற்காலுக்கு கைவளங் கொடுத்துத்தான் குடிப்பார். கைநடுக்கத்துக்கு அது போதும். ஆனாலும் அடுத்த காலையும் கடனுக்கு இறக்கிப் போட்டு ஆடிப்பாடித்தான் அவர் வருவார். அதற்குப் பின்தான் அவர் முகம் செந்தளிப்பாய் துலங்கும். கதைகள் கலகலப்பாகும். ஆனால் இன்றைய நிலைப்பாடு அப்படியான நீண்ட நேரம் எடுத்துக்கொள்ள அவரை அனுமதிக்காது. காத்துக் கொண்டிருக்கும் சனம் குறை குற்றம் காண ஆரம்பித்தால் அது வேறு எங்கோ போய்த்தான் முடியும். இப்பொழுதும் கூட பரம்பரை பரம்பரையாய் சேவகம் செய்வதால் தான் தாய் பிள்ளையாய் புழங்கி நிலைத்து நின்று கடை வைத்து தொழிலும் செய்கிறோம். பொது சனத்துக்கு சுணக்கம் ஏற்படும் பட்சத்தில் கிராமத்தில் இன்னொரு போட்டிக் கடை புதியதாய் திறக்கப்படுவது தவிர்க்க முடியாததாகி விடக் கூடும்.

போட்டிக் கடை வைப்பதற்கும் ஆட்கள் நீ நான் என்று தயாராகத்தான் இருக்கிறார்கள். " இந்த அப்பு செய்யுங் கூத்துக்களால் அடுத்தவன் இங்கே இடம் பிடித்து விடலாம்" என்ற பதைபதைப்பு இப்போது வெற்றிநாதனிடம் குடிபுகுந்து கொண்டது. ஆட்கள் அழைத்தால் ஒழிய அடுத்தவன் வளவு வாசலுக்குள் காலடி எடுத்து வைக்காத குடிமகனான வெற்றிநாதன் ஆபத்துக்கு பாவமில்லை என்ற தோரணையில் திறந்த வீட்டிற்குள் நாய் நுழைகிற மாதிரி காமினி அக்கா வளவுக்குள் காலடி எடுத்து வைத்து விட்டான். எப்படியாவது அப்புவை இழுத்து வந்து வேலை செய்விக்க வேண்டுமே என்ற கட்டாயம் அவனுக்கு அந்தத் துணிவைக் கொடுத்திருந்தது. " கீழ்சாதிப் பயலே" என்று திட்டினாலும் சிரித்து சமாளித்துக் கொண்டு வெளியே வந்துவிட வேண்டியதுதா"

காமினியின் வளவுக்குள் வந்துவிட்ட வெற்றிநாதனுககு முதலில் இடம் வலம் புரியவில்லை. எல்லா வளவும் வேலி அடைத்துத்தான் இருக்கும் ஆனால் காமினி அக்கா வளவு மட்டும் வேலிக்கு மேலால் இரண்டு முன்று வரிக்கு கிடுகால் மறைத்து அடைத்திருக்கிறார்கள். இந்த விதமான வேலியடைப்பு வளவுக்குள் வரும் வெளிச்சத்தை குறைத்து பாதி இருட்டாய் வைத்திருந்தது. இந்த பாதி இருட்டு பழக்கப்படாதவர்களுக்கு ஒரு பயத்தை உண்டு பண்ணுவது போலிருந்தது. வெற்றிநாதனுக்கும் கூட ஆரம்பத்தில் ஒரு சிறு பயம் ஏற்பட்ட மாதிரித்தான் இருந்தது. வளவுக்குள் ஒருத்தரையும் காணவில்லை. வீடும் கூட ஏனோ தானோ என்ற மாதிரி திறந்து தான் கிடந்தது. எந்த அசுமாத்தமும் இல்லை. காமினி அக்கா நான்கு பிள்ளைகள் பெற்றவள் என்கிறார்கள் அந்தப்பிள்ளைகளில் ஒன்று கூட அவன் கண்ணில் படவில்லை. அங்கு அப்பு இருப்பதற்கான எந்த அத்தாட்சியும் இல்லை. இங்கே அப்பு மட்டுமல்ல எவருமே இல்லை என்ற தீர்மானத்துடன் திரும்பி வர எத்தனித்த போது தான் மிக மெல்லியதான ஒரு குசுகுசுப்பு குரல் காதில் விழுந்தது.

"கெதியா கெதியா" இந்த கெதியா கெதியாவைத் தொடர்ந்து சிறு சிரிப்பொலியும் மெதுவாய்.

விதிர் விதிர்த்துப் போய் நின்றுவிட்டான் வெற்றிநாதன். தான் நினைத்ததற்கும் மேலாய் இங்கே ஏதேதோ நடக்கிறது. இந்தக் கெதியா கெதியா என்ற குசுகுசுப்புக் குரலுக்குரியவர் ஆணா பெண்ணா என்பதை தீர்மானிக்க இயலாதவனாக வெற்றிநாதன் வெளியே வந்தான். வெளியில் வரும் போதே ஒரு கனவு கண்ணுக்குள் விரிந்தது பகல் கனவுதான்.

"தலையில் முள்முடியுடன் காமினி அக்கா சிலுவை சுமந்தபடி கோயிலை நோக்கி ஊர்வலம் போகிறாள். பின்னால் அப்புவை வெறும் மேனியாய் அரையில் கோவணத்துடன் சவுக்கால் அடித்து அடித்து இழுத்துக்கொண்டு போகிறார்கள் ஊர்ப் பெரியவர்கள். கோயில் வாசலடியில் கோயில் குருவானவர் குறுக்கால் வந்து இரண்டு பேரின் முகத்திலும் மாறி மாறி காறித்துப்புகிறார்" இதற்கு மேல் கனவை வளர விட விருப்பமின்றி திமிறித் திரும்பிக் கொண்டான் வெற்றிநாதன்....

வெயிலில் அலைந்து திரும்புபவனைப் போல் மேனியெல்லாம் வியர்வைப் பொங்கி வழிய கடைக்குள் வந்தவனைப் பார்த்து சலூனுக்கு வந்தவர்களில் ஒருவன் ஆத்திரத்துடன் சத்தமிட்டான்.

" வெற்றி விளையாடிக் கிண்டு திரியாம வேலய முடிச்சு எங்கள கெதியா அனுப்பப்பாரு கெதியா... கெதியா ". பயக்கெடுதி கலந்த குறுகுறுப்புடன் சத்தம் வைத்தவனை வெறித்துப் பார்த்தான் வெற்றி..

" இந்தாளும் கெதியா கெதியா எண்டு சொல்றாரே... ஒரு வேள எம்பின்னால வந்து அத "ஒட்டுக்கிட்டு" கேட்டிருப்பானோ"

மனதுக்குள் பெருஞ் சந்தேகம் மூள குறுகுறுப் புடன் சவரக்கத்தியை கையிலெடுத்தான் வெற்றி என்கிற வெற்றிநாதன். அவன் கைகள் கூட அப்புவின் கைகளைப் போல மெதுவாய் நடுநடுங்கி தந்தியடிக்க ஆரம்பித்திருந்தன...


மெதுவான நடுக்கத்துடன் உதறி நடுங்கும் வெற்றியின் கைகளையும், வேர்வை வழியும் வெற்றியின் முகத்தையும் மாறி மாறி குறுகுறுவென்று கேள்விக்குறியுடன் பார்த்துக் கொண்டு நின்றான் தம்பி மனுவேல்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குஞ்சரமூர்ந்தோர் : ஒரு மிகச்சிறந்த நாவல் மட்டுமல்ல; மக்களது வாழ்வியலின் பண்பாட்டு ஆவணமும் கூட !

■ எஸ்.கே.விக்னேஸ்வரன்



2020 பெப்ரவரியில் நான் மட்டக்களப்புக்குப் போயிருந்தபோது அங்கு அப்போது நடந்து கொண்டிருந்த "நூறுகோடி மக்களின் எழுச்சி" யை ஒட்டி நடந்த கலை நிகழ்ச்சிகளைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது. அந்த நிகழ்வில் எனக்கு அறிமுகமானவர் க. பத்திநாதன் என்ற எழுத்தாளர். சமூகம், பண்பாடு மரபுரிமை போன்ற விடயங்களில் கவனம் செலுத்தி வரும் அவரை நண்பன் கவியுவன் எனக்கு அறிமுகப் படுத்தி வைத்திருந்தான். அவரது எழுத்துக்கள் எவற்றையும் அப்போது நான் வாசித்திருந்ததாக ஞாபகம் இருக்கவில்லை. பாலத்தின் கீழாக காற்று வாங்கியபடி கலை இலக்கியம் அரசியல் சமூக வரலாறு என்று பல விடயங்கள் பற்றியும் நாம் பேசிக் கொண்டிருக்கும் போது அவர் மன்னார் சீமான் பத்திநாதனைத் தெரியுமா? மன்னார் கரையோர மக்களின் வாழ்வை மையமாகக் கொண்டு பல நாவல் களை எழுதி வருகிறார் என்றார். அப்போது எனக்குத் தெரிந்திருந்த ஒரே பத்திநாதன் காலச்சுவட்டில் எழுதிவந்த பத்திநாதன் என்பதால் அவரா என்று கேட்டேன். அவரல்ல இவர் சீமான் பத்திநாதன் பெர்னண்டோ. நீங்கள் கட்டாயம் வாசிக்க வேண்டிய ஒருவர் அவர் என்று கூறியிருந்தார்.




ஆயினும் அவர் குறிப்பிட்டுச் சொன்ன சீமான் பத்திநாதன் அவர்களது நூல்களை எங்காவது எடுக் கலாமோ என்று அங்கிருந்து யாழ் சென்ற போது புத்தகக் கடைகளில் தேடிய போதும் எனக்குக் கிடைக்கவில்லை. 2013 இல் நான் கனடாவுக்கு புலம்பெயரும் வரை அறிந்திராத பத்திநாதன் என்ற பெயரைக் கொண்ட முக்கியமானவரெனக் குறிப்பிடப்படும் ஒரு படைப் பாளியை நான் எப்படி அறிந்திராமல் இருந்திருக்கிறேன் என்று ஆச்சரியமாக இருந்தது. அவரது பெயரைப் போட்டு கூகிளில் தேடிய போதுதான் அவர்பற்றிய தகவல் களை அறிய முடிந்தது. நான் அவரை அறிந்து கொள்ளாமல் இருந்ததற்கான காரணமும் புரிந்தது. 2013 க்குப்பிறகுதான் தனது 65ஆ வது வயதுக்குப் பிறகுதான் அவர் படைப்பிலக்கியத் துறைக்குள் வருகிறார் என்பதை அப்போதுதான் அறிந்துகொண்டேன். 2022 தையில் மீண்டும் இலங்கைக்குப் போகும்போது நான் அவசியம் பார்த்து பேசவேண்டும், அவரது எழுத்துக்களைப் பெற்று வாசிக்க வேண்டும் என்பது எனது திட்டங்களில் ஒன்றாக இருந்தது.

யாழில் தை மாதம் நடந்த "எங்கடை புத்தகங்கள்" கண்காட்சியைப் பார்க்கச் சென்றபோது நான் எதிர்பாராத விதமாக அவரைச் சந்திக்கும் இன்ப அதிர்ச்சி எனது நண்பர் சத்தியதேவன் மூலமாகக் கிடைத்தது. அது மட்டுமல்லாமல், அவர் கைவசமிருந்த தனது அனைத்து நூல்களதும் பிரதிகளை அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குக் கையளித்து அந்த இன்ப அதிர்ச்சியை இன்னொரு மடங்காக்கி விட்டிருந்தார். மலர்ந்த புன்னகையுடன் பேசும் அவரது தோற்றமும் தான் ஒரு சிறந்த படைப்பாளி என்ற எந்த "எடுப்புச் சாய்ப்புமற்ற" விதத்தில் பழகும் அவரது இயல்பான பண்பும் நகைச்சுவை கலந்த உரையாடலும் என்னை மிகவும் ஆட்கொண்டன என்பதை முதலிலேயே குறிப்பிடாமல் அவர் நூல் பற்றிய எனது குறிப்புக்குள் போக முடியவில்லை. "கோழி ஒருமுட்டை இட்டுவிட்டு ஊரறியக் கொக்கரிக்கும். ஆமை ஆயிரம் முட்டைகளை இட்டபின்னும் அமைதியாக இருக்கும்"என்பார்கள். இந்த வரிகள் அவரது நூல்களை ஒவ்வொன்றாக வாசிக்க வாசிக்க என் மனதில் காட்சிபோல ஓடிக் கொண்டிருந்தன.

ஜீவநதி ஆசிரியர் பரணீதரன் அவர்கள் அவரது "குஞ்சரமூர்ந்தோர்" நாவல் பற்றி இந்த இதழில் என்னை எழுதும்படி கேட்டிருந்தார். அவரது நாவல்கள் எவையும் வெறும் கதைகள் அல்ல. அவை மன்னார்க் கரையோர குறிப்பாக (அவரது சொந்த இடமான வங்காலை) மக்களின் வாழ்க்கையின் வெவ்வேறு காலச் சூழலில் மாறிவந்த வாழ்வின் பல்பரிமாணத் தன்மையைக் கலாபூர்வமான ஒரு அசையும் சித்திர மாக எம் கண்முன்னே நிகழ்த்திக் காட்டும் ஓவியங்கள். அந்தக் கதைகள் எம்மை வெறுமனே வாசிக்க வைக்க வில்லை. அவை அந்த கடலோரக் கிராமத்து மக்களுடன் சேர்ந்து ஒன்றிப்போன உணர்வுடன் வாழ வைக்கின்றன. அவற்றில் வரும் பாத்திரங்கள் வெறும் பாத்திரங்கள் அல்ல; அவர்கள் வாசிக்கும் எங்களது சூழலிலே எம்மோடு சேர்ந்து வாழும் மனிதர்களாகி விடுகின்றனர். வாழ்நாள் முழுவதும் ஒரு கூத்துபிரதி களைத் தயாரிக்கும் கூத்துக் கலைஞனாக இயங்கிவந்த அவர், கூத்தில் மனிதர்களை பாத்திரங்களாக உயிர்ப்புடன் இயங்க வைப்பது போல தன் நாவல்களில் பாத்திரங்களை எமது கண்முன்நடமாடும் மனிதர் களாகப் படைத்துவிட்டிருக்கிறார். சிறு வயதிலேயே எழுதத் தொடங்கி மக்களிடையே பேராதரவைப்பெற்ற பல படைப்பாளிகள் தமது வயோதிபகால நோய்நிலை களால் தமது எழுத்துக்கு விடைகொடுக்கும் நிலைக்கு வந்திருக்கிறார்கள். ஆனால் நமது சீமான் பத்திநாதர் பாரிசவாத நோயில் வீழ்ந்து இயங்க முடியா நிலை வந்த தன் அறுபதுகளில் படுத்த படுக்கையில் இருந்தபடி எழுதத் தொடங்கியவர். அவரது எழுத்துப் பரவலான வரவேற்பையும் அங்கீகாரத்தைம் பெறுகையில் அவரது உடல் நிலையும் சத்திர சிகஜச்சைமூலம் சுகமாகிவிடுகிறது. கூத்துப் பிரதிகளை எழுதிவந்த அவர் ஒரு மாறுதலுக்காக எழுதிப்பார்க்கத் துணிந்த நாவல் எழுத்தில் தீவிரமாக இயங்கத் தொடங்குகிறார். அவர் படைப்புகளுக்கு பாராட்டுக்களும் பணப்பரிசுகளும் கிடைக்கின்றன. வாழ்க்கைய தனது அறுபதுகள் வரை ஒரு கூத்துக் கலைஞனாக வாழ்ந்த அவரை நாவல் இலக்கியத்துறையில் இறங்கவைத்த அவரது நோய் அவரைத் "தடுத்தாட் கொண்டு" நம்முன்னே ஒரு அற்புதமான கதை சொல்லியை, மன்னார் கரையோர மக்களின் வாழ்வைப் பேசும் அற்புதமான படைப்பு களைத் தரவைத்தது ஒரு ஆச்சரியம் கலந்த உண்மை நிகழ்வு. நாவுக்கரசருக்கு வந்த சூலை நோய் எமக்கு அரிய அழகொளிரும் தமிழ்ப் பாக்களை (அவை தேவாரமாக இருப்பினும் மதம் கடந்து அவற்றின் இலக்கியச் சிறப்பு தமிழுக்கு ஒரு பெரும் பங்களிப்பே) எமக்கு வழங்கியது போன்ற ஒரு "அற்புதம்" என்றே சொல்ல வேண்டும்!

000

இப்போது நாங்கள் அவரது "குஞ்சரமூர்ந்தோர்" நாவல் பற்றிப் பேசலாம்.

"குடை நிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர்
நடைமெலிந்தோரூர் நண்ணிலும் நண்ணுவர்"

என்ற வரிகள் வெற்றி வேட்கை அல்லது நறுந்தொகை என அழைக்கப்படும், அதிவீரராம பாண்டியர் பாடிய நூலில் வரும் ஒரு பாடலின் வரிகள். மன்னார் கரையோர மக்களிடையே வாழ்ந்த ஒரு மீனவக் குடும்பத்தின் உயர்ச்சியும் வீழ்ச்சியும் பற்றிய கதையை அடிநாதமாக வைத்து பின்னப்பட்ட இந்த நாவலின் மையக் கதையை அதற்கு வைக்கப்பட்ட தலைப்பே மிகக் கச்சிதமாகக் கூறிவிடுகிறது. ஆனால் நாவல் வெறும் கதையல்ல ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியில் அங்கு வாழ்ந்த மனிதர்களது வாழ்வின் அனைத்து அம்சங் களையும்- அவர்களது வாழ்க்கைமுறை,அவர்களிடம் நிலவிய பண்பாடு, அவற்றுள் நிலவிய முரண்பாடுகளும் உறவு களும், சமூக உற்பத்தியும் பரிவர்த்தனை முறைமையும், மத நம்பிக்கை அவர்களின் வாழ்க்கையில் ஏற்படுத்தும் தாக்கம் அவர்கள் பயன்படுத்தும் மொழி என்று அந்த ஒரு குடும்பத்தின் கதையை மையமாக வைத்து சொல்லப்பட்ட - ஒரு பிரதேசத்தின் வாழ்வி யலை வெளிப்படுத்தும் அருமையானதும் முக்கியமானது மான ஒருபடைப்பு இது.

நாவலின் தொடக்கப் பந்தி இப்படி ஆரம்பிக்கிறது.

"பொழுது புலரும் முன்னே பாடடித்து வலை கிளப்பி விட்டார்கள். சிக்காராக விடுவலையில் மீன் ஏறி விட்டது. வலை பிடித்துக்கொண்ட இருவரும் வலையைச் சுருக்கி பாடடித்தவனுடன் சேர்ந்து விடுவலையை உம்மாரித்து இழுத்துக் கரை சேர்ந்தார்கள். அம்பாரமாய் மீன் ஏறியிருந்தது. வெள்விரியோடு வலை பிடிக்க ஆரம்பித்திருந்ததால் நீர் வாட்டுக்கு சாய்ந்த மீன் என்ன வகையறா என்று அவர்களுக்குத் தெரிந்திருக்கவில்லை. விலங்கே வலை பிடித்துக் கொண்டு நின்ற ஆனாப் பிள்ளைக்கும் சாய்ந்து வரும் மீன் இனம் விளப்பமில்லா திருந்தது. பொரிகெளிறு என்று தெரிந்திருந்தால் காலுக் குள் இருந்த மடவலையைத் தூக்கிப் பிடித்திருப்பார். ஒரு மீன் குஞ்சும் வலைக்குள் ஏறாமல் கழிந்திருக்கும்".

இந்த முதலாவது பந்தியில் விரியும் காட்சிப் படுத்தலின் விவரணம் வாசகரை கடற்கரையில் கொண்டுவந்து நிறுத்திவிடுகிறது. பாடடித்து, வலை கிளப்பி, சிக்காராக, விடுவலை, உம்மாரித்து, அம்பார மாய், வெள்விரி, நீர் வாட்டுக்கு, மடவலை, விலங்கே வலை... என்று அந்தத் தொழிலுக்கேயுரிய சொற்கள் கடற்கரை மணலில் தனித்துவ அடையாளத்தைக் காட்டும் விதத்தில் சிதறிக் கிடக்கும் சிற்பிகள், சோகிகள், மட்டிகள், வெவ்வேறு அளவுகளிலான விதம் விதமான வடிவங்களைக் கொண்ட முருகைக் கற்கள். கோளாங் கற்கள், குறுமணிகள் போன்று பரவிக் கிடக்கின்றன. வாசகர் மனதில் ஒரு கடற்கரையில், மீனுடன் மீன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலையை கரைக்கு இழுத்துவரும் மூன்று மீனவர்கள், அவர்களது வலையில் பிடிபட்ட மீன், அந்த மீனின் இனம் குறித்த மெல்லிய கவலை, அப்படி நடந்ததற்கான காரணம் என்ற எல்லாவற்றையுமே ஒருசேரப் பதியவைக்கும் ஒரு காட்சிப்படுத்தலை பளிச்சென்று தொற்றவைத்துவிடுகிறது நாவலின் இந்த முதலாவது பந்தி. இந்த நாவலின் முதலாவதும் முக்கியமானது மானதும் அதன் வெற்றிக்கான அடிப்படையும் ஆக அமைவது ஆசிரியரின் வசீகரம் மிக்க காட்சிப்படுத்தும் மொழி. தேவைக்கதிகமான விபரணங்கள் எதுவும் அற்ற அதேவேளை, தேவையான எவையும் விடுபட்டு விடாத கவனக் குவிப்புடன் எழுதப்படுகின்ற மொழி அவரது.

மீனவர்கள், கடலின் நிறம், காற்றின் திசை, வானின் சமிக்ஞைகள் என்பவற்றை வைத்து இயங்குபவர்கள். இயற்கை அளிக்கும் சந்தர்ப்பங்களைத் தெளிவாகப் புரிந்துகொண்டு தம் வாழ்வை நடாத்துபவர்கள். தமது கையிலிருக்கும் வலை, வள்ளம் என்பவை கடலில் செல்வதற்காக அவர்களிடம் இருக்கும் சாதனங்களோடு தமது தொழிலை ஆற்றுவதற்கு அவர்களுக்கு இருக்கும் ஆளணி என்பவையே அவர்களது வாழ்வு முறையைத் தீர்மானிக்கும் அம்சங்கள். நாவலின் கதை நடக்கும்காலம் 1960களை ஒட்டிய காலமாக இருக்கலாம் என்று தோன்றுகிறது. இயற்கையைப் புரிந்துகொள்ளலுக்கான விஞ்ஞான அறிவு மக்கள் மத்தியில் அறிமுகமாகிக் கூட இருக்காத காலம். அவர்களுக்கு அதைப் புரிந்துகொள்ள இருந்த ஒரே சாதனம் அவர்களது மூத்தோரின் வழியாகக் கிடைத்த அனுபவங்ளை அடிப்படையாகக் கொண்ட பட்டறிவு மட்டுமே. அவர்களது அறிவுக்கும் அனுபவத்துக்கும் எட்டாத அனைத்து விடயங்களும் தமக்கு மேலிருக்கும் ஆண்டவரது சித்தத்தின் படியே நடக்கின்றன என்ற நம்பிக்கையுடன் வாழ்ந்துவரும் சமூகம் அவர்களது.

அந்தச் சமூகத்துடன் இரத்தமும் சதையுமாக வாழ்ந்த, வாழ்கிற ஒருவர் என்ற முறையில் ,அந்த மக்களின் வாழ்வை அதன் முக்கியமான எல்லா அம்சங்களையும் வெளிப்படுத்தும் வகையில் அந்தச் சமூகத்தின் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தின் வாழ்வை முழுமையாக வாசகர் முன் கொண்டுவந்துள்ளார் ஆசிரியர். மக்களின் வாழ்க்கையில் நிலவும் ஒழுங்கு முறை மிகவும் எளிமையானது. கடலின் கரையோரத் தோடமைந்த பகுதியில் ஒவ்வொருவதருக்கும் என அவர்கள் மீன் பிடிப்பதற்கான பகுதிகள் ஒதுக்கப்படுகின்றன. ஒருவரது எல்லைக்குள் இன்னொருவர் போவதில்லை. வள்ளமும் வலையும் வைத்திருப்பவர்கள் ஒப்பீட்டளவில் பணக்காரர். அவர்கள் ஒன்றில் தாமும் தமது பிள்ளைகளுமாக இணைந்து தொழில் செய்வர். அல்லது கூலிக்கு ஆட்களை வைத்து வேலை செய்விப்பர். அதற்கெனக் கூலியும் கள்ளும் வழங்கும் ஒழுங்கும் உண்டு. இந்த நடைமுறைகளில் ஒழுங்கீனம், சுரண்டல், ஏமாற்று என்பவை இருந்தபோதும் இந்த நடைமுறையே அங்கு நிலவிவருகிறது. கிறிஸ்தவ மத நம்பிக்கை அதிகமாக உள்ள அந்த மக்கள் மத்தியில் இயல்பாகவே நீதி,நேர்மை, போன்ற விழுமியங்கள் மீதான அப்பாவி மக்களது நம்பிக்கை இத்தகைய சுரண்டலுக்கு வாய்ப்பாக இருக்கின்ற போதும் அது பெரிதாக அவர்களை உறுத்துவதில்லை. ஆயினும், அவர்களை இழிவுபடுத்தும் போக்குகள் மேலெழுகையில் அவர்களிடமிருந்து அதற்கெதிரான குரல்களும் எழவே செய்கின்றன.

மாதோட்டப் பங்கு பெரிய கோவிலின் பங்கு சபையில் தமக்கு, தம் சாதிகாரணமாக அங்கத்துவம் மறுக்கப்படுகின்றது என்ற செய்தி அறிவிக்கப்பட்ட போது, அதை அவர்கள் எதிர் கொள்ளுவது நாவலில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் விதம் அபாரம். நாவலின் இயல்பான கதையோட்டத்தூடே அந்த மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வும், அதுபற்றிய அவர்களது புரிதலும் தெளிவும் வெளிப்படும் விதத்திலான சீமான் பத்திநாதன் அவர்களது கதைசொல்லும் ஆற்றலைக் காட்டும் ஒரு சிறு உதாரணம் இது:

"காலாகாலமா நாங்க குடுக்கிற குத்தகைப் பணத்தில் தான் பங்குக் கோயில் சிலவு ஓடுது. நூறு வருசத்துக்கு மேல் எங்கப்பன் பாட்டன் முப்பாட்டன் காலத்திலிருந்து இதுதான் நிலம... எங்கட ஊர் குத்தகைப் பனத்திலைதா திருநாள் பெருநாள் எல்லாம் கைத்தாங்கப் படுறது. மூசி மூசித் திண்டுபோட்டு இப்ப ஊரவனைக் குட்டித் தள்ளுதுகள்.

..............................................

"மிக்கெல் சாமியாரிட்ட பலமுறை நேரிலையும் எழுத்திலையும் தெரிவிச்சிருக்கு. நம்ம ஊர்ப் பிராது யாழ்ப்பாணத்து பெரிய சாமிகிட்ட போய் சேரவிடாம செய்யிறாங்கண்டு நினைக்கிறன்;

"ஆர் யாழ்ப்பாணத்திலை பெரிய சாமி"

"விக்ரர் பெற்றக்கினி"

"ஓ அவர்தானா? இந்தாவாறம் அந்தா வாறம் எண்டு ஒரு வருசமா ஏமாத்திக்கொண்டு இருக்கிறது இந்தாள் தானா?"

"ஏய்... குரு நிந்த குல நாசம்"

"ஓ ஓ ,இப்பிடிப் பயந்துக்கிண்டு தா எத்தனை நாளைக்கு கிடக்கிறது ஓய்?"

நாவல் போகிறபோக்கில் வெறும் கதையை மட்டும் சொல்லவில்லை. அந்தக் கதயுடன் சேர்ந்து அந்தக் கிராம மக்களின் அன்றாட வாழ்க்கை, பழக்க வழக்கங்கள், களவொழுக்கங்கள், அவர்கள் கடைப் பிடிக்கும் அன்பு நேர்மை சத்தியம், அறியாமை, கரவு, என்று எல்லாம் நிறைந்த இயல்பான மனிதர்களாக அவர்களை நம்முன் நிறுத்தியும் விடுகிறது.

இப்படிப் பல உதாரணங்களை நாவலில் இடம்பெறும் வெவ்வேறு மாறுதல்களை அவர் எழுதிச் செல்லும் விதத்தில் வெளிப்படுவதைக் காட்ட முடியும்.


சாதாரண வள்ளங்களில் கரைவலை மீன் பிடித்துக் கொழும்புக்கு அனுப்பிய சம்மாட்டிகள் ஓரிருவர் இருந்த கிராமத்தில் கொழும்பு முதலாளியின் அனுசரணையில் வத்தை அறிமுகமாகிறது. நைலோன் வலை அறிமுகமாகிறது. பாய்வைத்து ஆழக்கடல் மீன் பிடி என்ற அடுத்த கட்டத்துக்கும் தொழில் வளர்கிறது. அடுத்ததாக "எஞ்சின் பூட்டிய போட்" வருகையும் பெரிய மனிதர்களது உருவாக்கமும், செல்வமும் பெருகு கிறது. செல்வம் பெருகப் பெருக அவர்களிடையே இருக்கும் குணங்களும் இயல்பாகவே மாறுதலடை கின்றன. செல்வத்தின் மீதான ஆசை பெருகுகிறது. அதன் விளைவாக வெவ்வேறு நெருக்கடிகள் தோன்று கின்றன. அறம்,மறம் என்பவை பற்றிய ஆரம்பக் கால மத நம்பிக்கையோடு இணைந்த கருத்துக்கள் நாவலின் மையமான குடும்பத்தில் இரண்டாம் பட்சமாகின்றன. நாவல் அந்தக் குழும்பத்தின் முழுமையான சிதைவில் வந்து முடிகிறது. ஒருகாலகட்டத்தில் அந்தச் சமூ கத்தில் நடந்த முழுமையான வரலாற்று மாற்றத்தை ஒரு நாவலினூடாக எங்கள்முன் வைத்திருக்கிறார் அன்பர் சீ. பத்தினாதன் பர்ணாந்து.

000

நாவலில் வரும் மக்களது அன்றாட வாழ்க்கை முறையில் தவிர்க்க முடியாத இன்னொரு அம்சம் அவர்களது கலை மீதான ஈடுபாடு. கூத்துக்கலை அவர் களது வாழ்வில் இறைநம்பிக்கையோடு இரண்டறக் கலந்த ஒன்றாக நிலவுகிறது. அதை அவர்கள் தமது இறைப்பணியின் ஒரு அம்சமாக, முழுக்கிராமத்தினதும் அர்ப்பணிப்பான உழைப்பிலும் உதவியிலும் தங்கிநின்று ஒப்பேற்றுவர். கூத்துப் பிரதியின் தெரிவு, நடிகர்கள் தெரிவு, கூத்துப் படித்தலுக்கான நேர ஒதுக்கம், அதனோடு சம்பந்தப்பட்ட இன்ன பிறருடைய உணவு மற்றும் மதுபானம் என்பவற்றுக்கான செலவு, கூத்தை ஒப்பேற்றுவதற்கான செலவு என்று அனைத்தும் ஒருவகையான ஜனநாயகத்தன்மையுடன் அவர்களது கிராமத்தில் ஒழுங்குபடுத்தப்படுவதை நாவல் அழகாக வெளிப்படுத்துகிறது. அதற்குள்ளும் அவர்களிடையே எழும் சிற்சிறு வாக்குவாதங்கள் ஒளிப்பு மறைப்புக்கள் என்பவை எல்லாம் தகவல்களாகவோ எள்ளலாகவோ, பிற பாத்திரங்களின் மூலமாகவோ வெளிப்படுத்தப் படுகின்றன. கூத்துப் பாட்டுக்களும் அவைகள் தெரிவிக்கும் கருத்துக்கள் அறிவுறுத்தல்கள் என்பவை மக்களது அன்றாட வாழ்வுக்கான படிப்பினைகளாகவும் வெளிப்படுகின்றன. கூடவே அக்காலத் திருமணத்தின் போது நடக்கும் ஒருவகைச் சடங்கு நிகழ்வு வருகிறது. பெண்பிள்ளை வீட்டில் நடக்கும் திருமணச்சடங்கில் பச்சைவடம் சொல்லும் அண்ணாவியாரும் ஒத்துப்பாடி களுமாகச் சொல்லும் பட்சனவார்த்தைகள், பட்சனம் சாத்துபவரை பகிரங்கமாக அறிவித்தல் என்று ஆரவாரமாக நடக்கும் இந்தச்சடங்கு முறைகள் பொது வான ஈழத் தமிழ்ச் சூழலுக்குப் புதியவை மட்டுமல்ல சுவாரஸ்யமானவையும் கூட. இதைவிட தொழிலாலர் தினமான வைகாசி (மே) 1ம் திகதியை அந்தக் கிராம மக்கள் கொண்டாடும் புதுமையான கொண்டாட்டம் இன்னொரு முக்கியமும் தனித்துவமும் வாய்ந்த சடங்காக அமைகிறது. மேதினம் தொழிலாளர் தினம் என்பதால்,யேசுக்கிறிஸ்துவின் வளர்ப்புத் தந்தையான புனித சூசையப்பரது (இவர் ஒரு தச்சுத் தொழிலாளி என்ற அடிப்படையில என்பதாக பின்னர் நாவலில் உரை யாடப்படும் ஒரு பகுதி வருகிறது)சுரூபத்தை கடற் கரைக்கு ஊர்வலமாக எடுத்துச் சென்று ஒரு படகிலோ வள்ளத்திலோ ஏற்றி ஒரு சுற்றுச் சுற்றிவிட்டு திரும்பவும் கோவிலுக்குள் கொண்டுபோகும் சடங்கு நடைபெறும். இது கடலுக்கான சூசையப்பரது ஆசீர் வாதம் என்பது அவர்களது நம்பிக்கை. இந்தச் சடங்கில் சூசையப்பரது சுரூபத்தை கடலில் கொண்டுசெல்ல எவருடைய வள்ளத்தை அல்லது படகைப் பயன் படுத்துவது என்பதற் காகச் சீட்டுக் குலுக்கிப் போடும் வழக்கம் நடைமுறை யில் இருக்கிறது. நாவலில் புதிதாக பணக்காரர்களாகிய போட் காரர்கள் அந்த வழக்கத்தில் வள்ளக்காரர்களை ஒதுக்கிவிட்டு போட் காரர்களது பெயர்களை மட்டும் போட்டுச் சீட்டுக் குலுக்குவது என்று முடிவெடுப்பதற் கான அனுமதியை சுவாமியிடமிருந்து பெற்றுவிடு கின்றனர். பணம் படைத்தவர்கள் காலாதிகாலமாக இருந்த விடயங்களை எப்படியெல்லாம் தமக்கு வசதியாக மாற்றும் சக்தியைப் பெற்றுவிடுகிறார்கள் என்பதை நாசூக்காக வெளிப்படுத்துவதுடன் அதற்கு எதிராக எழும் வள்ளக்காரர் களது எதிர்ப்பையும் நாவல் பதிவுசெய்கிறது. கூடவே அந்த பணம்படைத்தவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



களிடையேயும் கெட்டித்தன மாக ஒருவரை மற்றவர் எப்படி ஏமாற்றி முறியடிக்கிறார் என்பதையும், ஒரு பிரிவினர் ஒதுக்கப்பட்டும், இன்னொரு பிரிவினர் ஏமாற்றப்பட்டும் எப்படி இந்த சீட்டுக்குலுக்கல் ஒரு கேலிக்கூத்தாக மாறுகின்றது என்பதையும் அதற்கு சுவாமியும் ஒத்துப் போவதையும் நாவல் தன் போக்கிலேயே இயல்பாக வெளிப்படுத்திவிடுகிறது. கூடவே இந்த அப்பாவி மக்கள் இருப்பதால் தான் நமது சீவியமும் போகிறது என்று தனக்குள் முணுமுணுக்கும் சுவாமியையும் நாவல் வெளிக்காட்ட மறக்கவில்லை.

நாவலில் இப்படிப் பலவிடயங்களைத் தொட்டுத் தொட்டு விரிவாகப் பேச முடியும். ஒவ்வொரு பாத்திரங் களையும் ஓரிரு கட்டங்களில் வந்துபோயினும் அவற்றை முழுமையான பாத்திரங்களாக வாசகரின் மனதில் பதிய வைக்க எழுத்தில் ஒரு கார்ட்டூன் கலைஞருக் குரிய கூர்மையான பார்வையும் இலக்கியச் செய்நேர்த்தியும் அவசியம். அது ஆசிரியருக்குக் கைவந்த கலையாக இருக்கிறது. ஒரு கூத்துக் கலைஞருக்குரிய சிறப்பும் அதுவே. கூத்தை எழுதும் ஒருவருக்கு, கூத்தை ஆடுபவர் எப்படி ஆடுவர்/ ஆடலாம்/ஆட வேண்டும் என்பன பற்றிய காட்சிப் புலனுணர்வு இருக்க வேண்டும். அப்போதுதான் கூத்து நிஜத்தின் பிரதிபலிப்பாக சிறப்படையும். அவர் ஒரு கூத்துக்காரர் என்ற வகையில் அவரிடம் இருக்கக் கூடிய இந்தத் தனித்துவம் அவரது பாத்திரப்படைப்புகளில் தெளிவாக வெளிப்படுகிறது.

ஒருபக்கத்தில் இந்த நாவலின் கரு ஆரம்பத்தில் சொன்னது போல மிகவும் எளியதுதான். மனித வாழ்க்கையைப்போல. பிறப்பதும் இறப்பதுமான கால இடைவெளிக்குள் நடக்கும் செயல்களை வைத்துத் தான் ஒரு மனிதரின் வாழ்க்கை மதிப்பிடப் படுகிறது. அது தான் அவர் பற்றிய சமூக மதிப்பீட்டை முன்வைக்கிறது. அவரது வாழ்க்கை, இன்னொரு வருக்கு, அல்லது ஒரு சமூகத்துக்கு அல்லது ஒரு நாட்டுக்கு அல்லது, ஏன் இந்த உலகத்துக்கே வாழ்வுக்கான வழிகாட்டியாக, படிப்பினைகளைத் தருவதாக இருந்ததா இல்லையா என்பதைப் பொறுத்தே மதிப்பிடப்படுகிறது. அதையே ஒரு நூலும் செய்கிறது; ஓர் இலக்கியப் படைப்புச் செய்கிறது; ஒரு நாவலும் செய்கிறது. "குஞ்சரமூர்ந்தோர்" நிச்சயமாக எமது நாட்டின் ஒரு பகுதி மக்களது ஒரு காலத்திய பாடுகளையும்,வாழ்வனுபவத்தையும், அவர்களது பண்பாட்டுச் சூழ்லையும் நம் கண்முன்னே நிறுத்துகிறது. அது அந்த மக்களது வாழ்வை அடிப்படையாகவைத்து ஆசிரியரின் அரசியல் சமூக சிந்தனைகளின் அடிப்படையான ஒரு முடிவை நோக்கிய பார்வையை முன்வைக்க முயலவில்லை. ஆனால் அத்தகைய ஒரு பார்வையை நோக்கிய பயணத்தை மேற்கொள்ள விரும்பும் மனிதர்கள் பயணிக்க வேண்டிய பாதையை அடையாளம் காட்டி யிருக்கிறது. அந்த வகையில் நமது மண்ணிலிருந்து வெளியான ஒரு முக்கியமான, கவனத்துக்குரிய நாவலாகத் தன்னையும் கவனத்துக் குரிய முக்கிய படைப்பாளியாக சீமான் பத்தினாதன் பர்ணாந்து அவர்களையும் எமக்கு தெளிவாக இனங்காட்டியுள்ளது. மண்வாசனை வீசும் படைப்பு என்பார்களே, அந்த மண்வாசனையை இந்த நூலை வாசிக்கும் போது ஒரு வாசகரால் நிச்சயமாக உணர முடியும். கூடவே கடலதும் காற்றதும் வாசனையையும் தான்!.

"குஞ்சரமூர்ந்தோர்" ஈழத்தின் கரையோர உழைக்கும் மக்களின் வாழ்வைப்பேசிய, ஈழத்து இலக்கியச் சூழலைப் பெருமிதம் கொள்ளவைக்கும் ஒரு மிகச்சிறந்த நாவல் மட்டுமல்ல; அது அம்மக்களது ஒரு காலத்து வாழ்வியலின் பண்பாட்டு ஆவணமும் கூட!

000



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களை எழுதிய கலைஞன் பத்திநாதன் பர்ணாந்து

■ சூசைதாசன்



**அறிமுகம்**

கலைஞர் உயர்திரு சீமான் பத்திநாதன் பர்ணாந்து பாடசாலையில் எனது சிரேஸ்ட மாணவர். இருவரும் ஒரே கிராமத்தை சேர்ந்தவர்கள். இதனால் ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக நான் அவரை நன்கு அறிவேன். இன்று வரை மிக நெருங்கிய நட்பும் அவரோடு எனக்கு உள்ளது. அசையாத தமிழ்ப் பற்றும் மண்பற்றும் நிறைந்த இவர் இளமைக் காலத்தில் கல்வியிலும் விளையாட்டிலும் ஒருங்கே சாதனை படைத்து பாடசாலைக்கும் கிராமத்திற்கும் கௌரவத்தையும் பெருமையையும் சேர்த்தவர்களில் ஒருவர் ஆவார்.

மிக முக்கியமாக 1965 முதல் இன்றுவரை கலைத்துறையில் அவர் சாதித்தவை ஏராளம். நாடகம், நாட்டுக்கூத்து, வில்லுப்பாட்டு போன்ற பல கலைப்படைப்புக்களையும் கவிதை மற்றும் நாவல் களையும் படைத்து பிரதேச, மாவட்ட, மாகாண மட்டத்திலும், தேசிய ரீதியிலும் பல பரிசில்களையும் விருதுகளையும் பெற்று தான் பிறந்த மண்ணுக்கும் தமிழ் உலகிற்கும் பெருமை சேர்த்த மகத்தான கலைஞர். கவிஞன், எழுத்தாளன், நடிகன், நாட்டுக் கூத்து விற்பன்னன், இயக்குநர் என கலைத்துறையில் பன்முக ஆளுமை கொண்டவராக விளங்கியவர். இவரின் கலைப்பயணம் குறித்து எனது அறிவுக்கு எட்டியவரையில் இவரது படைப்புக்கள் பற்றியும் சாதனைகள் பற்றியும் பதிவு செய்து கொள்ளலாமென எண்ணுகின்றேன்.

**வரலாற்றுப் பின்னணி**

வங்கம் தங்கும் காலையான வங்காலை என்ற கீர்த்திமிக்க நெய்தல் நிலக்கிராமத்தில் கண்ணியமிக்க சாதாரண குடும்பத்தில் அமரர்களான திருஇ திருமதி சீமான் பர்ணாந்து தம்பதியினரின் ஒரேயொரு செல்வப் புதல்வனாக 31.05.1950 இல் பிறந்தார்.

இவர் தமது ஆரம்ப கல்வியை தமது கிராமத்திலுள்ள புனித ஆனாள் ஆண்கள் பாடசாலை யில் கற்று சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்திருந்தார். உயர்தரத்தில் கற்க வேண்டுமானால் பத்து மைல்களுக்கு அப்பால் உள்ள எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரிக்கு செல்ல வேண்டும். போக்குவரத்து மற்றும் நிதிநெருக்கடிகளின் மத்தியில் அங்கு சென்று கல்வி கற்று உயர்தரத்திலும் சித்தியெய்தினார். ஆயினும் பல்கலைக்கழகம் செல்ல அவரால் முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆயினும் தமது மூன்று பிள்ளைகளை பட்டதாரிகளாக ஆக்கி உயர்பதவிகளில் அவர்களை அமர்த்தியமை அவருக்கு ஆத்ம திருப்திதான்.

கல்வியோடு தடகள விளையாட்டுக்களிலும் இவர் ஆற்றல்மிக்கவர். வட்டார, மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பல விருதுகளை வென்று பாடசாலைக்கும் பெருமை சேர்த்திருந்தார். பாடசாலை கல்வியை நிறைவு செய்தபின் வங்காலை புனித ஆனாள் விளையாட்டு கழகத்திலும் தன்னை இணைத்து பிரதேச மட்டத்தில் விளையாட்டு துறையில் தனது முத்திரையைப் பதித்தார். இவர் சிறந்த கால்பந்தாட்ட கரப்பந்தாட்ட வீரராகவும் ஜொலித்தவர்.

கல்வியிலும் விளையாட்டிலும் தடம்பதித்த அதேவேளை கலைத்துறையிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டு கலை உலகில் தனக்கென தனியான பாதை வகுத்து காலச்சூழலுக்கு ஏற்ப பல கலைப் படைப்புக் களை உருவாக்கி பல கலைவிருதுகளை வென்ற ஒரு மகத்தான கலைஞனாக திகழ்ந்தார்.

இவ்வாறு கல்வி, கலை, விளையாட்டு ஆகிய அனைத்து துறைகளிலும் ஆற்றல்மிக்கவராக விளங்கி யது இயற்கை இவருக்கு அளித்த அருங்கொடை களாகவே பார்க்கலாம்.

**கலைப்பிரவேசம்**

பாடசாலையில் கல்விபயிலும் காலப்பகுதியில் இலக்கிய சங்க நிகழ்வுகளில் அக்கால சூழலை கருத்தில் கொண்டு நகைச்சுவையாக குட்டி நாடகங் களையும் கதாப்பிரசங்கங்களையும் வில்லுப்பாட்டு களையும் தாமே எழுதி இயக்கி மேடையேற்றி நடித்து மாணவர்களை உற்சாகப்படுத்துவார்.

பொதுமேடைகளில் இவரது கலைப்பிரவேசம் 1965 இல் இக்கிராமத்தின் புகழ்பெற்ற கூத்துநாடகமான மரியசித்தாள் தென்மோடி நாட்டுக்கூத்தில் நடித்ததோடு தொடங்குகிறது. ஊர்மக்களால் சில ஆண்டுகளுக் கொரு தடவை ஆலய வளாகத்தில் அரங்கேற்றம் பெறும் வேத நாடகமான மரியசித்தாள் வாசகப்பா. அக்காலத்தில் வெள்ளைப்புலவர் என்ற ஒரு புலவரால் ஏட்டில் எழுதப்பட்டது. இன்றும் புனித நாடகமாக ஊர்மக்களால் இது கருதப்படுகின்றது. இன்னமும் அந்த நாடக ஏடுகள் ஆலயத்தின் பரிபாலிப்பில் உள்ளது. 1965 இல் தனது தந்தை ஏற்று நடித்த ராசகுமாரன் பாத்திரத்தை தனயனான இவர் ஏற்று நடித்திருந்தார். குதிரையில் ஏறி மின்னல் வேகத்தில் வாள் வீசி சண்டை செய்து அசத்திய காட்சி அனைவரினதும் பாராட்டைப் பெற்றிருந்தது. பின்னர் அமரர் பி.சவேரியான் லெம்பேட் ஆசிரியரின் கைவண்ணத்தில் உருவான "நீரோவின் கொடுமை" என்ற நாடகத்தில் உரோமானிய தளபதியாக முக்கிய பாத்திரமேற்று நடித்து மக்கள் மனதில் நீங்கா இடம்பிடித்தார். 1967 பிரதேச மாவட்ட கலைவிழாவில் இந்த நாடகம் நானாட்டான், மன்னார் ஆகிய இடங் களில் மேடையேற்றப்பட்டது. குதிரை சண்டைக் காட்சியும் உரோமானிய தளபதி சம்பந்தப்பட்ட காட்சிகளும் என் கண்முன் இன்னமும் நிழலாடு கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நாடகங்கள்**

வங்காலை கலைகலாசார மன்றத்தில் இணைந்து நடிகனாக வலம் வந்த காலப்பகுதியிலேயே பல சமய, வரலாற்று, சமூக நாடகங்களை எழுதியதோடு மட்டுமன்றி மன்றத்தின் கலைஞர்களை கொண்டு அந்த நாடகங்களையும் நாட்டுக்கூத்துக் களையும் இயக்கி மேடையேற்றவும் செய்தார். அந்தவகையில் "சவுலும் பவுலும்"(1975) "உதித்தது விண்மீன்" "செஞ்சோற்றுக் கடன்" "அரிச்சந்திரன் கதை" ஆகிய நாட்டுக்கூத்துக் களும் "காலதேவன் கட்டளை" (1976) "வேட்டை"(1975) "பொக்கிஷம்" "முப்பது வெள்ளிகள்" "விடுதலை" "குருதியில் நனைந்த கோயில்" "வெடிகுண்டு" ஆகிய நாடகங் களும் பல இடங்களில் மேடையேற்றப்பட்டு மக்களுக்கு கலை விருந்தாகின.

செஞ்சோற்றுக்கடன் நாட்டுக்கூத்து வடகிழக்கு மாகாண பண்பாட்டு கலாசார விழாவில் பரிசு பெற்றதுடன் பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவு தினம் போட்டியிலும் வென்று சாதனை படைத்தது. மேலும் காலதேவன் கட்டளை என்ற நாடகம் கலாசாரப் பேரவையினால் நடாத்தப்பட்ட தேசிய நாடக விழாவில் இறுதிசுற்றுக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தது. வேட்டை நாடகமானது 1975 ஆம் கொழும்பு ஜோன் டி சில்வா கலையரங்கில் நடைபெற்ற தேசிய நாடக விழாவில் பங்குபற்றியதுடன் இதில் நடித்திருந்த அமரர் மரியான் வாஸ் அவர்கள் அகில இலங்கையின் துணை நடிகருக்கான விருதினை வென்றிருந்தமை இவரது சிறந்த நெறியாள்கைக்கு சான்றாக விளங்கியது.

இவரது பிரமாண்டமான தயாரிப்பாக விளங்குவது ஏசுவின் திருப்பாடுகளின் காட்சி என்ற மாபெரும் படைப்பாகும். இப்படைப்பானது வங்காலை கோயில் முன்றலில் 150 அடி நீளமான பெரிய மேடையில் 5 ½ மணித்தியாலங்களில் நடித்து காண்பிக்கப்பட்டது. ஏறக்குறைய 500 கலைஞர்கள் இந்த நாடக அரங்கேற்ற நிகழ்வில் பங்கேற்று நடித்திருந்தனர். இப்பாரிய கலைப் படைப்பின் அரங்கேற்றத்திற்கு வண. தமிழ்நேசன் அடிகளாரின் வழிகாட்டல் உறுதுணையாக அமைந்திருந்தது என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டிய விடயமாகும்.

**நாவல்கள்**

பத்திநாதன் அவர்களது கலைப்பயணத்தில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்த காரணமாக அமைந்தது அண்மைக் காலங்களிலே அவரால் படைக்கப்பட்ட நாவல்கள் என்பது குறிப்பிடத்தக்கது. போரின் காரணமாக மக்களின் இயல்பான வாழ்க்கையில் பல மாற்றங்கள் பாதிப்புக்கள் ஏற்படலாயின. தொலைக் காட்சி பாவனை மக்களிடத்தில் பரவியமையால் நாடகங்களை பார்க்கும் ஆவல் குறைவடைந்து போனது. அத்துடன் போர்ச் சூழலும் முன்பு போல நாடகங்களையும் கூத்துக்களையும் மேடையேற்றம் செய்ய தடையாக அமைந்தது. இதனால் நாடகங்களை எழுதி மேடையேற்றும் செயற்பாடுகள் மங்கிப்போனது. அத்துடன் இவருக்கேற்பட்ட பாரிசவாத நோயும் நாவல்களை எழுத இவரைத் தூண்டியது. கிராமிய சூழலில் அக்காலத்தில் நிகழ்ந்த இயற்கை அனர்த்தங் கள் மக்கள் வாழ்வோடு இழையோடிப்போயிருந்த வழக்காறுகள் முரண்பாடுகள் ஒடுக்குமுறைகள் போன்ற வாழ்வியல் கோலங்களை பின்னணியாக கொண்டு கிராமத்து பேச்சு வழக்கிலே யதார்த்தமான நாவல்களைப் படைத்திருந்தார். இவரது நாவல்கள் மண்வாசனை மிக்கவை.

இந்தவகையில் 1964 இல் இக்கிராமத்தை தாக்கி பல உயிர்களை காவுகொண்ட சூறாவளியை மையப்படுத்தி "64 டிசெம்பர் 24" என்ற நாவலையும் ஊர் பெரிய நாடக ஏற்பாடுகளை பின்னணியாகக் கொண்டு "கூத்துப் படிச்ச கதை" என்ற நாவலையும் படைத்திருந்தார். அத்தோடு "குஞ்சரம் ஊர்ந்தோர்" என்ற நாவலும் "தோற்றுப் போனவர்கள்" "திசையறியா பயணங்கள்" ஆகிய நாவல்களும் யதார்த்தமான சமூக விழுமியங்களை எடுத்துக் காட்டுவனவாக அமைந் துள்ளன.

தாம் வாழ்ந்த சூழலை மையமாக வைத்து எழுதிய "குஞ்சரம் ஊர்ந்தோர்" என்ற வரலாற்று சமூக நாவல் 2020 ஆண்டிற்கான வடமாகாணத்தின் சிறந்த நாவல் விருதினையும் இதே நாவல் "ஞானம் சஞ்சிகை"யானது அகில இலங்கை ரீதியில் நடாத்திய இலக்கியப் போட்டியில் சிறந்த நாவலுக்கான முதலாமிடத்தினையும் பெற்று சாதனை படைத்தது மட்டுமன்றி அதே ஆண்டில் அவுஸ்திரேலியா தமிழ் இலக்கிய சங்கத்தின் சிறந்த நாவல் விருதினையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதற்கு முன்னர் 2018 இல் Fairway Holdings நிறுவனம் நடாத்திய தேசிய இலக்கியப் போட்டியில் திரு பத்திநாதன் அவர்கள் எழுதிய "தோற்றுப் போனவர்கள்" என்ற நாவல் தேசிய ரீதியில் முதலாமிடத் தினையும் பெற்று சாதனை படைத்திருந்தது.

**விருதுகள்**

இலக்கிய துறையில் இவர் ஆற்றிவரும் சேவைக்காக 2016 ஆம் ஆண்டில் நானாட்டான் பிரதேச செயலகத்தின் "செழுங்கலை வித்தகர்" என்ற விருதினையும் அதே ஆண்டில் மன்னார் மாவட்ட செயலகத்தின் "மன் கலை சுரபி" என்ற விருதினையும் பெற்றுக் கொண்டார்.

தொடர்ந்தும் 2017 இல் நாடகத்துறைக்கு இவர் ஆற்றிய சேவைக்காக நாடகத்துறைக்கான "வடமாகாண முதலமைச்சர்" விருதினையும் பெற்ற துடன் 2020 இல் அதி உச்ச விருதான கலாபூஷண விருதினையும் பெற்று வரலாற்று சாதனை படைத்திருந்தார்.

இவர் தமது வாழ்க்கைப் பயணத்தில் சந்தித்த சம்பவங்கள் அனுபவங்களை பாடம் என்ற கவிதை தொகுப்பு மூலம் கூறிச் செல்கின்றார். எல்லோருக்கும் அது ஒரு பாடம்தான். இன்றுவரை தமது முதுமை நிலையிலும் சளைக்காது நூல்களை வாங்கி வாசிப்பிலும் மாறிவரும் உலக ஒழுங்கை விளங்கி சமூகத்தில் புரையோடிப் போயிருக்கும் அவலங் களையும் அநியாயங்களையும் கத்திமுனையை விட கூரிய பேனா முனையினால் வெளிக்கொண்டுவரத் துடிக்கும் மக்கள் கலைஞன் பத்திநாதன் அவர்களை தமிழ்கூறும் நல் உலகம் சார்பில் வாழ்த்துகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீமான் பத்தினாதன் எழுதி வெளியிட்ட "64 டிசம்பர் 22"




எழுத்தாளர்கள் எழுத ஆரம்பிக்கும்போது அவர்களுக்கு ஊருக்குள்ளிருந்து எதிர்ப்பு வருகிற தென்பது புதிதில்லை. ஜோடி குரூஸ், பாமா மற்றும் வேறு சிலரும் இது போன்ற எதிர்வினைகளை எதிர் கொண்டிருக்கிறார்கள் பெருமாள் முருகன் போன்றவர் கள் உயிர் அச்சுறுத்தலுடன் நீதிமன்ற வழக்குகளையும் எதிர்கொண்ட வரலாறுகளும் நம் கண்முன்னே நடந்திருக்கிறது.

இவ்வாறு எழுதப்படுகிற பிரதிகள் சமரச மற்றவையாக இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகமிருக் கிறது. அதனால்தான் எழுத்தாளர்கள் உள் எதிர்வினை களை எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. முதிர்ச்சி யடையாத, யதார்த்தமான சமூக அசைவியக்கத்தை மூடி மறைக்க நினைக்கின்ற சமூத்திற்காகவே எழுத்து சமூகம் எதிர்வினைகளுக்கு மத்தியிலும் எழுதிக் கொண்டுதானிருக்கிறது. இப்படி கல்லெறி வாங்கிய துடன் இறுக்கமான மதவாதிகளிடமும் சிக்குப்பட்ட அனுபவங்கள் நிறையவே அனுபவித்தவர் சீமான் பத்தினாதன் பர்ணாந்து.

வெளிதோற்றத்திற்கு அழகாகத் தெரியும் நமது கிராமங்கள் வானதூதர்களாலும் புனிதர்களாலும் ஆசீர்வதிகப்பட்டு புனிதங்களால் நிறைந்திருக்க வில்லை. சமூக அசைவியக்கம் சரி தவறுகளாலும், சமூக பெருளாதார ஏற்றத்தாழ்வுகளாலும் நகர்ந்து கொண்டிருக்கிறது. இதையே மனிதன் சமூக விலங்கு என்பதை எழுத்துச்சமூகம் பிரதிபலித்துக் கொண்டி ருக்கிறது.

இந்த அடிப்படையில்தான் சீமான் பத்தினாதன் பர்ணாந்து அவர்களின் நாவல்களை புரிந்துகொள்ள வேண்டும். 64 டிசம்பர் 22 நாவலில் வெளிப்படுவதும் இதுவே.

ஆண்களால் ஆண்களுக்காக உருவாக்கப் பட்ட உலகத்தில் பெண்களின் நிலை என்ன என்ற விசா ரணைகள் ஆரம்பித்து பல பத்தாண்டுகள் கடந்து விட்டன அதன் தாக்கம் இன்று நகர்புறங்களில் சிறி தளவு வெளித்தோற்றத்தில் அவதானிக்க முடியும். ஆனால் பல பத்தாண்டுகளாக போருக்காக மினக்கட்ட நம் சமூ கத்தில் பெண்களின் நிலை ஒப்பீட்டளவில் கவலைக் குரியதே. பெண்தலைமைத்துவ குடும்பங்களின் நிலை?

சீமான் பத்தினாதன் எழுதி வெளியிட்ட 64 டிசம்பர் 22 என்ற நாவலின் கதை, மீனவ கிராமத்தில் 1964 ல் நடக்கிறது. அந்த கால கிராம கட்டமைப்பு வாழ்க்கை முறை, பெண்களின் நிலை என்ன என்பதை நாவலை படிப்பதன் மூலம் புரிந்துகொள்ள முடியும்.

மேரி என்கிற கல்யாணம் கட்டிய பெண்ணை அடைக்கலத்தார் வைத்திருக்கிறார் என்ற விடயம் ஊருக்கே தெரிந்திருந்தும் தம்பியும் அடைக்கலத்தார் மகனும் மேரியை உடலுறவு கொள்ள முறபடுவதே 64 டிசம்பர் 22 நாவலின் மைய கதை. இதுபோன்ற கதைகள் ஏற்கனவே இலக்கிய பரப்பில் பேசப்பட்டிருந்தாலும் 1964ல் நடந்த புயலை கதையின் பின்னணியாக இருப்பதிலிருந்து இக்கதை ஏனைய கதைகளிலிருந்து மாறுபடுகிறது.

இந்த நாவலில் உரையாடலை முக்கியமாக குறிப்பிடலாம். தேவையான இடத்தில் கூர்மையாக, நேர்த்தியாக அமைந்திருப்பது படிக்கும்போது தொய்வில்லாத வாசிப்பனுபவத்தை தருகிறது

இன்று வெகுஜன மனநிலையில் பேசப்படும் ஒழுக்க விதிகள் யாரால் யாருக்காக உருவாக்கப் பட்டவை என்பதெல்லாம் விவாதத்திற்குரியவை. வன் முறைதான் தவிர்க்கப்பட வேண்டுமே தவிர அனுமதிக் கப்பட்ட வாழ்க்கை முறைக்குள் ஆண் பெண் இணைவு என்பது இயற்கையானதாகவே புரிந்துகொள்ள வேண்டும்.

மதில்கள், கிழவனும் கடலும் போன்று குறு நாவல்கள் வரிசையில் வாசகரை சென்றடையக்கூடிய பிரதியாக இது இருந்தாலும், புத்தக கட்டுமானம் சர்வதேச அளவில் இல்லை என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டியிருக்கிறது.

தகுதியான உள்ளடக்கம் இருந்தும் இதுபோன்ற பிரதிகள் ஏன் தமிழக வாசகரை சென்றடைவதில் இருக்கும் விடயங்களை நாம் வெளிப்படையாக விரிவாக உரையாட வேண்டும்.

வட்டார மொழியை பயன்படுத்துவது கதைக்கு உயிர்ப்பையும் வாசகருக்கு நெருக்கத்தையும் உரு வாக்கும். வட்டார சொல்லகராதியை பிரதியின் பின் பக்கத்தில் தருவது வாசகருக்கு உதவியாக அமையும். அதற்கான முன்னுதாரணங்கள் இருக்கிறது


யதார்த்தமான மீனவ கிராமத்தை வட்டார பேச்சு மொழியை கையாண்டு நேர்கோட்டுத்தன்மையில் தொய் வில்லாமல் சுவாரஸ்யமாக வாசகருக்கு கையளித்ததில் சீமான் பத்தினாதன் வெற்றி பெற்றிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்பதுகளின் இனப் போர்ப் பின்னணியில் மன்னார் பிரதேச கடலோர மக்களின் அகப்புற வாழ்வியல் தரிசனமாய் விரியும் திசையறியாப் பயணங்கள்

## நாவல் குறித்த ஒரு பார்வை




■ புலோலியூர் வேல் நந்தகுமார்

ஈழத்துத் தமிழ் புனைகதை வரலாறு திடீர் திடீரென சில ஆற்றலாளர்களை எமக்கு இனங்காட்டிப் பெருமை கொள்கிறது என்ற வகையில் போரிற்கு பிந்திய காலப்பகுதியில் அதற்கு சாட்சியாய் பலரைச் சொல்ல லாம். அதேபோல மன்னார் மண் சார்ந்தும் எஸ்.ஏ. உதயன், மன்னார் அமுதன், வெற்றிச் செல்வி போன்ற பலரைக் குறிப்பிடலாம். இவ்வகையில் இவர்களை விடவெல்லாம் வயதில் மூத்தவராய் மிக அண்மைக் காலமாக தனது சிறுகதை, நாவல் படைப்புக்கள் வழி எம் கவனத்தை அதிகம் ஈர்த்திருக்கும் ஒருவராகவே சீமான் பத்திநாதன் பர்ணாந்து அவர்கள் விளங்குகிறார். பத்திநாதன் ஐயா என்பதே மனதில் நிற்கும் நாமம். அவரது கதை மொழியும் கடந்தகால வாழ்வியலை காய்தல் உவத்தலின்றி பக்கம் சாராமல் நடுநிலையோடு பதிவு செய்யும் தன்மையும் கடலோர தொழிற்கோல வாழ்வியல் சித்திரிப்புக்கள், குடும்ப உறவுகள் என்பவற்றை இனப் பிரச்சினை மையங்களில் வைத்துப் பேசும் தன்மையும் மன்னார் பிரதேச பேச்சு வழக்கு மொழியை கையாளும் திறனும் என பலவற்றைஅவரது புனைவுகளின் பலமாய் கொள்ளலாம். அதனால் தான் அவரது படைப்புக்களை படிக்கின்ற பலரும் இத்தனை காலமாய் எங்கே இருந்தாய் ஐயா என ஏங்க வைப்பதாய் அவரது படைப்புப் பிரதிகள் அமைந்து பலரையும் பிரமிக்க வைக்கின்றன. இவ்வகையில் வயதிலும் அனுபவத்திலும் மூத்தவரான அவருக்கு ஜீவநதி சிறப்பிதழ் அமைந்திருப்பது காலத்தின் தேவை.

திசையறியாப் பயணங்கள் என்பது இவரது ஐந்தாவது படைப்பு. இந்த நாவலை அவர்

இனக் கலவரத்தால் விளைந்த
இன்னல்களின் நிமித்தம்
இந்தியத் திருநாட்டுக்கு
இடம் பெயர்ந்த வேளை
இந்துமாக் கடலுக்கு
இரையாகிப்போன இலங்கைத் தமிழர்க்கு

சமர்ப்பணம் செய்துள்ளார். இந்த சமர்ப்பணமே இந் நாவலின் கதை மையத்தை கோடிட்டு காட்டுவதாகவே அமைகிறது.

இந் நாவலுக்கான அணிந்துரையை விசை கொண்ட எழுத்துப் பயணங்கள் என்ற தலைப்பில் இவரது நண்பர் மன்னார் பேசாலையை சேர்ந்த துறையூரான் சிவானந்தன் அவர்கள் வழங்கியுள்ளார். அதில் அவர் குறிப்பிடும் சில விடயங்கள் முக்கிய மானவை. உணர்வுகள் பரிமாறப்படுவதில் சமூகம் பெரியளவில் அக்கறை காட்டுவதில்லை ஆனால் உறவுகள் பரிமாறப்படுவதில் நிறையச் சிக்கல்கள் உள்ளன. நினைத்தபடி வாழ்ந்துவிட முடியாது. அதற்கு தனித்துணிவு வேண்டும் அது அநேகமாக சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு வாழ்வியலாக இராது என்கிறார். அவரது எல்லாப் படைப்புக்கள் போலவே இதுவும் தொடங்கிய வேகத்தில் தங்குதடையின்றி காட்டாற்று வெள்ளம் போல ஓடிக் கலந்துவிடுகிறது.

இனி இந்நாவலின் கதை களம் பாத்திரங்கள் பற்றி சிந்திப்போமாக இருந்தால் களம் அவரது சொந்தக் களமான மன்னார் பிரதேசத்தை கொண்ட மீனவர் கிராமமும் அதனோடு தொடர்புபட்ட எண்பதுகளுக்கு பிற்பட்ட சமூக, அரசியல், அகப்புற வாழ்வியல் சூழலாக அமைகிறது. "தலை குனிந்தபடி கருணாகரன் ஆச்சிமாமி வளவுக்குள் இருந்து வெளியேறிக் கொண்டிருந்தான்." என்றே இந்நாவல் தொடங்குகிறது. அவ்வகையில் இந் நாவலின் பிரதான கதாபாத்திரங்களாக திருமணமாகாத கருணாகரனும் திருமணமாகி கணவன் நோய், யுத்தக் கொடுமையால் காணாமற் போதல் என்பவற்றால் கணவனை இழந்து வாழும் துணிச்சல் மிக்க பெண்ணாகிய செல்லாச்சி மாமியும் விளங்குகின்றனர். ஏனைய பாத்திரங்களாக செல்லாச்சிமாமியின் பெறா மகள் சூசனும் கருணாகரனின் உடன் பிறந்த சகோதரர் களான பெஞ்சமின் கனிசியஸ், உள்ளிட்டோரும், செல்லாச்சி மாமியின் கணவன் மிக்கேல், அவரது நண்பன் அந்தோனி, கதையெங்கும் இடையிடையே வந்து செல்லும் பேராளிக்குழுக்கள், பாதிரியார்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பபியான், கூத்துக்கலைஞர்கள் இராணுவத்தினர், போராளிகளுக்கு உணவளிக்கும் ஊர்த் தலைவர், படகோட்டி அத்தாங்குட்டி எனப் பலரைக் குறிப்பிடலாம்.

கருணாகரனுக்கும் செல்லாச்சி மாமிக்கும் இடையிலான ஒரு தவறான பாலியல் நடத்தையுடன் கதை தொடங்குகிறது. சிறு வயது முதலே தாய், தந்தை பராமரிப்பின்றி ஒரு மூத்த அண்ணனாக தன் வாழ்வை தன் தம்பிகளுக்காய் தியாகம் செய்யும் ஒருவனாக கருணாகரன் உயர்ந்து நின்றாலும் பிற்பட்ட செல்லாச்சி மாமியுடனான அவனது "கள்ள உறவு" அவன் குறித்த விம்பங்களைத் தகர்த்து விடுகிறது. ஆரம்பத்தில் கருணாகரனுக்காக பரிதாபப்பட்டு அவனுக்கு ஒரு திருமணம் செய்விக்க வேண்டும் என்று தன் கணவனிடமே கூறி அதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு சொன்ன செல்லாச்சி மாமியே பின் காலச் சூழலால் வயதுக்கு வந்த ஒரு பெண் பிள்ளை இருக்கவும், நண்டுத் தொழிலிற்குப் போய் காணாமற் போன தன் கணவனின் நிலையால் வாழ்விழந்தாலும் அதன் பின்னரும் தன் தொழிலாகிய "சாராயம் விற்றலை" சாக்காக வைத்து கருணாகரனை தன் வீட்டுக்கு அழைத்து தன் மகளுக்கு பக்கத்திலேயே அவனுடன் கள்ள உறவு கொண்டு மகிழும் ஒருத்தியாக செல்லாச்சி மாமி என்ற பாத்திரமும் வல்லமை மிக்க பெண்ணாக இருந்தாலும் தன் நடத்தைகளால் தன் மகளே மதிக்காத தாயாகி விடுகிறாள். இறுதியில் மகளை கருணா கரனுக்கு கட்டி கொடுத்து இந்தியாவுக்கு அனுப்பிவிட்டு தான் இங்கே தனியே வாழ அவள் திட்டமிட மகள் சூசன் எழுதி வைத்துவிட்டு போகும் கடிதம் அவர்களின் திசையறியா பயண வாழ்வை மாற்றி அவர்கள் இருவருமே இந்தியாவுக்கு கள்ளத் தோணி யில் போக எண்ணுவதும் அந்தப் பயணமுமே திசை தெரியாப் பயணமாக மாறி படகோட்டியின் காமப் போதையால் பொறுப்பற்ற செயலாகி படகு வெடித்து அதில் பயணம் செய்த எல்லோரும் இறப்பதாகவும் இந்நாவலை முடித்துள்ளார்.

தொடக்கம் முதல் முடிவு வரை வாசிக்கத் தொடங்கினால் வைக்க மனமின்றி வாசிக்கத் தூண்டும் ஒரு விறுவிறுப்பு நடையும் திடீர்த் திருப்பங்களும் இந் நாவலின் பலம். ஒரு யுத்தம் எத்தனை பேரின் எத்தனை விதமான வாழ்வியல்களை சிதைத்து எல்லோரது வாழ்வையும் திசையறியா பயணங்களாக மாற்றியது என்பதை நாவலாசிரியர் மிகவும் உணர்வு பூர்வமாக இதில் பதிவு செய்துள்ளார்.

இயக்கங்களுக்கிடையிலான அகமுரண் பாடுகள், மக்களது காட்டிக் கொடுப்புக்கள், ஒவ்வொரு தலைமுறை மனிதர்களும் இந்தப் போராட்டம் குறித்து கொண்டிருந்த கருத்தியல்கள், இயக்கத்தை எதிர்த்துப் பேசமுடியாத நிலை, அவர்கள் வழங்கிய ஏற்றுக் கொள்ள முடியாத சில தண்டனைகள் என அந்தக் காலக் காட்சிகளை நேரடிச் சாட்சியாய் பதிவு செய்கிறார். மறுவளமாய் ராணுவ நெருக்குவாரங் கள், தாக்குதல்கள், ஒருவரை சுட்டுவிட்டு மற்றவரில் பழிபோடும் நிலைமைகள், பாதிரிமாரின் இழப்புக்கள் அடைக்கலம் கொடுத்தல், சாப்பாடு கொடுத்தலுக்காக பழிவாங்கப்படும் நிலை நாவலின் இறுதி வரியாக கடலோரத்தில் செத்து கிடந்தவர்களைப் பார்த்து கடற்படை அதிகாரி சொல்லும்

"இவர்களில் அவர்கள் ஒருவரும் இல்லை" என்ற வரி வரை மறுபக்க நெருக்கு வாரங்களையும் பதிவு செய்துள்ளார்.

அத்தியாயங்களாக கதையை நகர்த்தும் போது காதலும் காமமும், போரும் வாழும் என்ற வகையில் மாறி மாறி கதை சொல்லப்பட்டுக் கொண்டு சென்றாலும் எல்லாவற்றையும் யுத்தப் பின்புலத்தில் வைத்தும் குடும்ப உறவு மையத்தில் வைத்தும் திசையறியாப் பயணங்கள் என்பதை நோக்கி நகர்த்தியுள்ள பாங்கு சிறப்பாக அமைந்துள்ளது. ஒரு காலத்தின் வாழ்வியலுக்கும், வரலாற்றுக்கும் எங்களை அழைத்துச் செல்ல தேர்ந்த படைப்பாளிகளின் படைப்புக்களாலேயே முடிகிறது என்றால் அத்தகைய ஒருவராகத்தான் நாம் மன்னார் மண் தந்த பத்திநாதன் ஐயாவை பார்க்கிறோம்.

இந்நாவலில் பலருடைய திசையறியாப் பயணவாழ்வு சொல்லப்படுகிறது.

ஒரு காலகட்ட வாழ்வியலுக்குள் எம்மை அழைத்துச் சென்று வாழ வைக்கும் ஆற்றல் இந் நாவலுக்குண்டு. ஒரு திரைக் காவியமாகக் கூட விரியக்கூடிய சிறப்பு இந்நாவலுக்கு உண்டு. சம்பவங்கள் எப்படி ஒரு புனைவாகிறது என்பதற்கான அத்தனை சாத்தியங்களையும் இந்நாவல் கொண்டுள்ளது. அகம் சார்ந்த விடயங்களைப் பேச அதற்கேற்ற நளினமான மொழியையும் புறம்சார் விடயங்களைப் பேச அதற்கேற்ற மொழியையும் இதற்கப்பால் அந்த பிரதேசத்தின் பேச்சுவழக்கு மொழியையும் மிகவும் யதார்த்தமாக ஆசிரியர் கையாண்டிருப்பதும் இந்நாவலின் படைப்புத் தரத்துக்கு வளம் சேர்க்கிறது. நடந்த சில விடயங்களை உள்ளதை உள்ளவாறு சொல்லும் கதாசிரியரின் நேர்மை யும் பாராட்டுதற்குரியது. அவ்வகையில் நிறைவாக இந் நாவலில் ஆசிரியர் கையாண்டுள்ள சில பேச்சு வழக்கு சார் உரையாடல் உதாரணங்களை எடுத்துக் காட்டி இக் கட்டுரையை நிறைவு செய்யலாம் என எண்ணுகிறேன்.

"நல்லா குடுத்துக் கட்டிப்போட்டன் "எளிய பயலே" எண்டு மறுவா மனந்தாங்குமா... (செல்லாச்சி யின் கூற்று)

"நேற்று பெய்த மழைக்கு காலையில முளைச்ச காளான் மூப்பு இளமை தெரியாம கை நீட்டுறான்"

"இஞ்சேரும் கொஞ்சம் முன்னுக்கு எழும்பி வாரும்... மறுவா பிறகு பாப்பம் பிறகு பாப்பம் எண்டு பல முறை அதை விட்டுப் போட்டுக் கிட்டே வந்திற்றன்..."

"கவனம் அண்ணன் தீட அடுக்க விட்றாதைங்க வாங்கல் போட்ட தூக்கி வீசிப்போடும் காத்துங்கடுவலா நிக்குது...

போன்றவற்றைச் சுட்டலாம். இவரிடம் இருந்து இன்னும் அனுபவங்கள் கொண்ட படைப்புக்களாக எதிர்பார்க்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்காணல்



சீமான் பத்திநாதன் பர்ணாந்து அவர்கள் ஈழத்தின் தலைசிறந்த நாவலாசிரியர்களில் ஒருவராக விளங்கி வருவதோடு, சிறந்ததொரு மன்னார்ப்பிரதேச கூத்துக் கலைஞராகவும் அண்ணாவியாராகவும் திகழ்பவர். ஒரு குறுகிய காலத்தில் உச்சத்தை தொட்ட படைப்பாளியாகவும் தொடர் இலக்கிய செயற்பாட்டாளராகவும் விளங்கி வருகின்றார். மன்னார் பிரதேசத்தின் வளத்தினை தன் படைப்புகள் வாயிலாக வெளிக்கொணர்ந்து வருகின்றார்.

**பரணீ:**

**உங்களுடைய பெற்றோர், பிறந்த இடம், கல்வி பெற்ற இடங்கள் பற்றி கூறுங்கள்?**

**சீமான் பத்திநாதன்:**

மன்னார் மாவட்டத்தில் நானாட்டான் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள வங்காலை என்னும் கடலோரக் கிராமத்தில் பிறந்தேன்.

தந்தையார் பெயர்- ஆரோக்கியம் சீமான். பர்ணாந்து

தாயார் பெயர்- சுவக்கீன் சந்தாள்மிராண்டா

ஆரம்பக்கல்வியை வங்காலை புனித ஆனாள் றோ.க. பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை வங்காலை புனித ஆனாள் மகா வித்தியாலயத்திலும் க.பொ.த (உ/த) கல்வியை எருக்கலம்பிட்டி மத்திய கல்லூரியிலும் கற்றேன்.

**பரணீ:**

**இலக்கியத்தில் ஆர்வம் ஏற்பட காரணம்?**

**சீமான் பத்திநாதன்:**

எனக்கு தமிழ் கற்பித்த ஆசிரியர்களால்தான் இலக்கிய ஆர்வம் ஏற்பட்டது. அவர்களில் அமரர்கள் திரு. கிறிஸ்ரியான், அந்தோனி டலிமா, மர்ஹூம் வித்துவான் M.A. றஹ்மான் ஆகியவர்களை சிறப்பாக சுட்டிக் காட்டலாம். கூத்து பாரம்பரியத்தை கொண்டிருந்த என் தந்தையாரின் கூத்து பாடல்களால் இளமைப் பருவத்திலே ஈர்க்கப்பட்டிருந்தேன். பாடசாலைக் காலத்திலே வித்துவான் றஹ்மானின் நெறியாள்கையில் பாடசாலை நாடகங்களில் நடிக்க வைக்கப்பட்டிருந்தேன். இது போன்ற நிகழ்வுகள் என்னை நாடக இலக்கியத்தில் ஈடுபாடு கொள்ள வைத்திருந்தன.

**பரணீ:**

**நாவல் இலக்கியத்தில் அதிக கவனம் எடுக்க ஏன் விரும்பினீர்கள்?**

**சீமான் பத்திநாதன்:**

2010ம் ஆண்டு வரை நான் நாடக கூத்து இலக்கியப் படைப்புகளில்தான் கவனம் செலுத்தி வந்தேன். கூத்துக்களையோ நாடகங்களையோ அரங்கேற்றுவதென்பது ஒரு குழு முயற்சியின்றி சாத்தியப்படாது.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நாடகக் கலைஞர்களை அல்லது கூத்துக் கலைஞர்களை ஒன்று திரட்டி பயிற்சி கொடுப்பதும் அதை மேடை அரங்க அமைப்புக்களுடன் ஒப்பேற்றி முடிப்பதென்பதும் எனக்கு பாரிய சிரமத்தைக் கொடுத்தது. தவிர நான் ஒரு தொழில் முறை கலைஞனுமல்ல. ஏற்படும் செலவுகளை நிகழ்வில் பங்கேற்கும் கலைஞர்கள் தான் பொறுப்பேற்க வேண்டும். கலைஞர்களில் ஒரு சிலரைத் தவிர்த்து ஏனையவர்கள் அன்றாடக் கூலிகள். இது போன்ற பொருளாதார சிக்கல் களுடன் நாட்டின் அரசியல் நிலைமையும் கூட எனது கலையார்வத்தை கட்டுப்படுத்தியது. 1990ம் ஆண்டில் ஏற்பட்ட இடப்பெயர்வில் இரண்டு வருடங்களை தமிழகத்தில் கழிக்க வேண்டி இருந்தது.

2010ம் ஆண்டு நான் பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்டேன். மூளையில் ஏற்பட்ட கட்டி யொன்றினால் எனது இடப்பக்க அவயவங்கள் செயலிழந்து போய் நடமாட முடியாதவனாய் ஆனேன். பிள்ளைகளின் துணையின்றி இயற்கை உபாதைகளைக் கழிக்க கூட முடியாதவனாய் இருந்தேன். இயல்பாகவே நல்ல உடல் ஆரோக்கி யத்துடன் இருந்த எனக்கு இந்த மந்தமான நிலைமை மனச்சலிப்பையும் மன உளைச்சலையும் கொடுத்தது. எனக்கு ஏற்பட்டிருந்த உள ரீதியான பாதிப்புக்களை கண்ட என் பிள்ளைகள் என்னை உற்சாகமூட்டும் நோக்குடன் என்னிடம் வைத்த கோரிக்கைதான் "நாவல் எழுதிப்பாருங்களேன்" என்பது. வலதுகரம் எழுதக்கூடியதாய் இருந்த படியால் பிள்ளைகளின் கோரிக்கையை ஏற்றுக் கொண்டு ஒரு சிறு ஆக்கத்தை எழுதி முடித்தேன். அதுதான் எனது முதல் நாவல் "கூத்து படிச்ச கதை". ஒரு கிராமத்தில் கூத்து படிப்பதிலுள்ள சிரமங்களும் அதனால் ஏற்படும் பாதிப்புக்களும். அவ்வளவுதான் கதை. முன்னின்று மூக்குடை பவனின் கதை.

கிராம மட்டத்தில் அது ஓரளவு வரவேற்பை பெற்றிருந்தது. நாவலுக்கான செலவையும் அது ஈடு செய்திருந்தது. கலாசாரத் திணைக்களம் கொஞ்சம் புத்தகங்களை கொள்வனவு செய் திருந்தது. நூலகங்களுக்கு ஏற்ற நாவல் என்ற சிபாரிசு கூட அதற்கு கிடைத்திருந்தது. இவை யெல்லாவற்றிற்கும் மேலாக "ஜீவநதி"யில் ஒரு சிறிய விமர்சனம் கூட பிரசுரமாகியிருந்தது.

அன்றிலிருந்து ஒன்று எனக்கு தெளி வாகியது. வேதபுராணங்களையும் விவிலியத்தை யும் எழுதுவதைவிட நம்மை, நம்மண்ணை, மண்ணின் மாந்தரை எழுதினால் பேசப்படக்கூடிய இலக்கியமாக அது இருக்கும். அதை அந்த எண்ணத்தை உறுதிப்படுத்துவது போல முகமறி யாத நண்பர்கள், வீடு தேடி வந்து பாராட்டும் நண்பர்கள் என்று ஏராளம் நண்பர்கள் எனக்கேற் பட்டார்கள். இவைதான் நாவல் இலக்கியத்தின்பால் கவனம் ஈர்க்கப்பட்டதற்கான காரணங்கள். இத் தொடர்புகளால் இந்நண்பர்களிடமிருந்து இன்னும் பல விடயங்களை கற்றுக் கொண்டிருக்கிறேன்.

**பரணீ:**

**நீங்கள் எழுதிய நாவல்கள் பற்றி சுருக்கமாக கூறுங்கள்?**

**சீமான் பத்திநாதன்:**

முதல் நாவல்: கூத்து படிச்ச கதை

ஒரு மீனவ கிராமத்தில் கூத்து நிகழ் வொன்றை அரங்கேற்றி முடிப்பதில் உள்ள சிரமங்கள் அது பழக்கப்படும் முறைகள் அதிலுள்ள அரசியல்தனமான சூட்சுமங்கள். அதில் பங்கேற்க விரும்பும் சாதாரண ஒரு கிராமத்தான் பாதிப்புக்குள்ளாக்கப்படும் நிலைமைகள் பற்றி கூறும் நாவல்.

இரண்டாவது நாவல்: தோற்றுப் போனவர்கள்

சாதாரண மீனவத் தொழிலாளிகள் அதே சமூகத்தை சேர்ந்த மேல்தட்டு முதலாளிய வர்க்கத்தினரால் சுரண்டப்படும் முறைகள். அதை எதிர்த்து நிற்பவர்கள் எப்படி முறியடிக்கப்படு கிறார்கள் என்பதை சொல்லும் கதை.

மூன்றாவது நாவல்: 64 டிசெம்பர் 22

எனது கிராமத்தில் 1964 ம் ஆண்டு மார்கழியில் ஏற்பட்ட கடற்சீற்றத்தை அடிப்படை யாக வைத்து புனையப்பட்ட நாவல்.

நான்காவது நாவல்: குஞ்சரம் ஊர்ந்தோர்

ஒரு கிராமத்தில் பரதவர் சமூகத்தின் பொருளாதாரத்தில் ஏற்பட்ட பரிணாம வளர்ச்சி பற்றி யும் அதன் நிலையாமை பற்றியும் எடுத்துக்கூறும் கதை. நெய்தல் நில மக்களின் பொதுப்பண்பான கள்ளும் காமமும் பற்றிய கதையாடல்களை இதில் பரவலாக காணலாம்.

ஐந்தாவது நாவல்: திசையறியாப் பயணங்கள்

நம் நாட்டில் ஏற்பட்டிருந்த யுத்த சூழ்நிலை யில் ஒரு கடலோரக் கிராமத்தின் நிலைமை பற்றியும் அக்கிராமத்தின் இடப்பெயர்வுக்கான காரணிகளை யும் இடப்பெயர்வின் போது ஏற்பட்ட இன்னல் களையும் சொல்லும் கதை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆறாவது நாவல்: கூறியது கூறல்

போதைவஸ்து பாவனையால் சபல புத்தியுள்ள ஒரு கணவன் தன் சொந்த குடும்பத்தை சீரளித்த கதை.

**பரணீ:**

**சிறுகதை, கவிதை என்பவற்றையும் எழுதி வருகிறீர்கள். அவை நூலுரு பெற்றுள்ளனவா?**

**சீமான் பத்திநாதன்:**

எனது முதலாவது நாவலுடன் சேர்த்து "பாடம்"என்ற ஒரு சிறு கவிதைத் தொகுப்பை வெளியிட்டிருக்கிறேன். தற்போது சிறுகதை தொகுப்பொன்றை வெளியிடுவதற்கான எண்ணம் வந்திருக்கிறது. எனது சிறுகதைகள் இதுவரை எந்த பத்திரிகைகளிலும் வெளிவந்ததில்லை. அதற்காக நான் முயற்சி செய்யவுமில்லை. காலம் கைகூடினால் கைவசம் இருக்கும் சிறுகதைகள் ஒரு தொகுப்பாக வெளிவரும்.

**பரணீ:**

**உங்கள் முதல் படைப்பு?**

**சீமான் பத்திநாதன்:**

எனது முதற்படைப்பு "சவுலும் பவுலும்" என்ற நாட்டுக் கூத்துதான். நாடகத்துறையில் முதற்படைப்பு "காலதேவன் கட்டளை" என்ற நாடகம்.

**பரணீ:**

**நீங்கள் ஒரு சிறந்த கூத்து கலைஞர் எனவும் அறிகின்றோம். உங்களுடைய கூத்து பயணம் எவ்வாறு ஆரம்பமானது?**

**சீமான் பத்திநாதன்:**

எனது தந்தையார் ஆரோக்கியம் சீமான் பர்ணாந்து கூத்துக்கலைஞர் பரம்பரையில் வந்தவர். அத்துடன் சந்தொம்மையார் வாசகப்பா மரியிஸ்தாள் வாசகப்பா ஆகிய பெரிய பெரிய கூத்து நாடகங்களில் ஆடிப் புகழ் பெற்றவர். கூத்துபடி ஏட்டு ஓலைச்சுவடிகளை வாசிப்பதில் கைதேர்ந்தவர். என் பாலிய வயதுக் காலங்களில் இருந்து அவர் பாடி ஆடும் காட்சிகளை பார்த்து வந்ததால் எனக்கும் கூத்து துறையில் பிரகாசிக்க வேண்டும் என்ற எண்ணமும் ஆர்வமும் ஏற்பட்டு விட்டது. அவரது வயோதிப காலங்களில் முன்னர் அவர் ஏற்று நடித்து ஆடிய பாத்திரங்களில் நான் பாடி நடித்து ஆடியிருக்கிறேன். அப்போது என் வயது 20-22 ஆகத்தான் இருந்தது.

இம்மாதிரியான தாக்கங்களின் பயனால் தான் எனது கலையுலகப் பயணத்தின் போது என் முதற்படைப்பு ஒரு நாட்டுக்கூத்தாக அமைந்தது. பொதுவாக எமது மன்னார் மாதோட்ட பகுதிகளில் கிறித்தவ சமயம் சார்பான கூத்துக்களே ஆடப்படும். அதைப் பின்பற்றியே நானும் விவிலியத்தில் புதிய ஏற்பாட்டிலுள்ள ஒரு நிகழ்வை கூத்தாக்கி இருந்தேன்.

பேராசிரியர் சு.வித்தியானந்தனின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முயற்சிகளால் கூத்துருவாக்கத்தில் நவீனத்துவ முறைகள் புகுத்தப்பட்ட பிறகு நீண்ட நேரத்தை கொள்ளையடிக்கும் மரபு ஒழிந்து குறுங்கூத்துக்கள் ஆடும்முறை அறிமுகமாகியிருந்தது. பொதுவாக மன்னார் மாதோட்டமும் அவரைப் பின்பற்றி குறுங்கூத்துக்களை ஆக்கி நடிக்க தொடங்கியது. ஆனாலும் கிராமந்தோறும் ஆடப்பட்டு வந்த பெருங்கூத்துக்கள் இன்றும் நடைமுறையில் இருந்துகொண்டுதான் இருக்கிறது.

**பரணீ:**

**நீங்கள் நடித்த, அண்ணாவியம் செய்த கூத்துகள்?**

**சீமான் பத்திநாதன்:**

நான் எழுதி அண்ணாவியம் செய்து நடித்து மேடையேற்றப்பட்ட முதல் நாட்டுக்கூத்து "சவுலும் பவுலும்". அடுத்து கும்பகர்ணன் தன் தமையனான இராவணனுக்காய் போர் புரிந்து இறக்கும் கதையை "செஞ்சோற்றுக் கடன்" என்ற பெயரில் எழுதி அண்ணாவியம் செய்திருந்தேன். இந்த நாட்டுக் கூத்து வடகிழக்கு இணைந்த மாகாண சபையின் தலைநகரில் (திருகோணமலை) பண்பாட்டு கலாசார விழாவில் பங்குபற்றி பரிசிலையும் பெற்றுக் கொண்டது. பேராசிரியர் சு.வித்தியானந்தன் நினைவுதினப் போட்டியிலும் கொழும்பில் மேடையேறி வெற்றி பெற்றது. மேற்படி அரங்கேற்ற நிகழ்வுகளின் போது நான் பாரிசவாதத்தினால் பாதிக்கப்பட்டிருந்தபடியால் என்னால் கலந்து கொள்ள முடியவில்லை. எனது நண்பர் திருவாளர் சசேரியான் பற்றிக் லெம்பேட் அதைப் பொறுப் பெடுத்து வெற்றிகரமாக செய்து முடித்திருந்தார்.

இது தவிர "உதித்தது விண்மீன்" என்ற ஒரு கூத்தையும் எழுதி அண்ணாவியம் செய்திருக் கிறேன். கிறிஸ்துவை தேடி அலையும் மூன்று சாத்திரிகளைப் பற்றிய கூத்து இது.

**பரணீ:**

**இன்றைய நிலையில் மன்னாரில் கூத்துக்கள் நிலை எவ்வாறு உள்ளது?**

**சீமான் பத்திநாதன்:**

தொழிநுட்ப சாதனங்கள் காணொளிகள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் பெருகிப்போன இக்கால சூழ்நிலைகளில் நாட்டுக்கூத்துக்கள் மக்கள் மத்தியில் பொதுவாக இளையோர் மத்தியில் மதிப்பிழந்து வருகின்றன. மன்னார் மாதோட்டத்துப் பகுதிகளில் ஒவ்வொரு கிராமத் திற்கும் ஒவ்வொரு பெருங்கூத்துக்கள் உரித் துடையனவாக கொண்டாடப்பட்டு வருகின்றன. ஆண்டுக்கு ஒரு தடவையோ அல்லது இரண்டு ஆண்டுகளுக்கொரு தடவையோ அரங்கேறி வந்த அவை தற்போது அங்கொன்றும் இங்கொன்றுமாக மிகச் சிரமத்தின் மத்தியில் நடைபெற ஆரம்பித் திருக்கின்றன.

குறுங்கூத்துக்களை பொறுத்தவரையில் ஏதாவதொரு கலாசார விழாவில் நேரப் போதாமை யோடு அரைகுறையாக அரங்கேற்றப்படுவதோடு சரி. பொதுவாக பொருளாதாரச் சிக்கல்கள் நாட்டின் அரசியல் நிலைமைகள் போன்ற வற்றுடன் புதிதாக முளைத்த கொரோணாத் தொற்றும் இவற்றின் வளர்ச்சிக்கு பெருந்தடையாக அமைந்துள்ளன. காலகெதியில் ஈழப்பழந்தமிழர் மரபுக்கலையான நாட்டுக்கூத்து அழிந்துவிடும் ஆபத்தில்தான் இருக்கிறது.

**பரணீ:**

**தங்களது சமகால கூத்து நடிகர்கள் பற்றி?**

**சீமான் பத்திநாதன்:**

எனது சமகாலத்து கூத்துகலைஞர்கள் வரிசையில் எனது கிராமத்திலும் எனது அயற் கிராமங்களிலும் பலர் இருக்கிறார்கள். கூத்து கலைக்கு இன்னும் அவர்களது பங்களிப்பு இருந்துகொண்டுதான் இருக்கிறது. அவர்களில் மிகத்திறமையானவர்களை பெயர் குறிப்பிட்டு வாழ்த்துவது சிறப்பாக இருக்கும்.

1. கலாபூஷணம் லாசர் ஜேம்ஸ் பாக்கியராஜா லெம்பேட் (வங்காலை)- இவர் சிறந்த முறையில் அண்ணாவியம் செய்யக்கூடியவரும் மிருதங்க வாசிப்பாளரும்
2. கலாபூஷணம் செபஸ்தியான் மாசிலாமணி (ஆவணம்) - கூத்து எழுத்தாளரும் நடிகரும் அண்ணாவியும்
3. கலாபூஷணம் அந்தோனி கிறிஸ்ரியான் பீரிஸ் (வங்காலை)- கூத்து ஆட்டக்காரர்
4. திரு. சவேரியான் பற்றிக் லெம்பேட் (வங்காலை)- கூத்து எழுத்தாளரும் அண்ணாவியும் அத்தோடு சமூக, சரித்திர நாடக படைப்பாளியும் எனது செஞ்சோற்றுக்கடன் கூத்தை தேசிய மட்டத்திற்கு எடுத்து சென்ற கலைஞர். இன்னும் கூத்து துறையில் மிளிர்ந்து கொண்டுதான் இருக் கிறார். இவரது ஆனாள் கலைக்குழுவில் மோசேசு றெவ்வல்(செழுங்கலை வித்தகர்) சகாயநாதன் வாஸ் (செழுங்கலை வித்தகர்) போன்ற சிறந்த கூத்து ஆட்டக்காரர்கள் இவரோடு இணைந்து ஆடி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருகின்றார்கள். "வீர அபிமன்யு" இவர்களது மிகச் சிறந்த குறுங் கூத்தாகும்.

5. திரு. செபமாலை மரிய தாஸ் குருஸ் (முத்தரிப்பு)- இவரது தகப்பனும் ஒரு பேர்பெற்ற கூத்து கலைஞர். அவரது அடிகளைப் பின்பற்றி கூத்துக்கள் எழுதி நடிப்பதோடு தனது கலைச் சேவையில் இன்றும் இயங்கி வருகிறார்.



**பரணீ:**

**உங்களது முதல் நாவலான கூத்து படிச்ச கதை சாதிய முரண்பாடுகளையும் சுட்டுகிறது. இன்றும் அவ்வாறான நிலைமைகள் உள்ளனவா?**

**சீமான் பத்திநாதன்:**

இல்லை என்று சொல்ல முடியாது. சாதியம் இலைமறை காயாய் இருக்கிறது. கல்வி வளர்ச்சியினால் பகிரங்கமாக சாதி சுட்டும் பண்பு குறைந் துள்ளது. அடிமை குடிமைத் தொழில்களில் கட்டாயப்படுத்தல்கள் இப்போது செல்லுபடியாகாது. திருமண காரியங்களில் சாதி பார்க்கும் பண்பு இன்னமும் தொடர்ந்தாலும் அதையும் மீறி கலப்பு திருமணங்களும் நடந்து கொண்டுதான் இருக்கின்றன.

**பரணீ:**

**உங்களுடைய நாவல்கள் மண் வாசனை நிறைந்தவை என்று கருதப்படுகிறது. இது பற்றி உங்கள் கருத்து?**

**சீமான் பத்திநாதன்:**

உங்கள் கருத்தை ஒத்துக் கொள்ளுகிறேன். நெய்தல் நிலத்திற்கான சிறப்பு பண்புகள் கள்ளும் காமமும். திணைசார் நாவல்களில் இது தவிர்க்கப் பட முடியாதது என்று கருதுகிறேன். நான் வாழும் சூழலைச் சுற்றியே எனது எழுத்துக்கள் சுழன்று கொண்டிருப்பதால் இம்மண்ணின் மொழியும் கதைமாந்தர்களின் மன உணர்வும் இந்த மண்ணின்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணத்தோடு வெளிப்படுகின்றன என நினைக் கின்றேன்.

**பரணீ:**

**ஒரு கூத்து கலைஞன் எழுத்தாளனாக இருக்கும் போது அவனிடம் இருந்து வெளிப்படும் படைப்புகளின் அதன் தாக்கம் வெளிப்படும் என்கிறார்கள். உங்கள் படைப்பு களிலும் அவ்வாறான தாக்கங்கள் உண்டா?**

**சீமான் பத்திநாதன்:**

உண்மைதான். முதல் நான்கு நாவல் களிலும் கூத்து பற்றிய குறிப்புக்கள் அல்லது பாடல்கள் அல்லது அதைப்பற்றியதான உரை யாடல்கள் எப்படியோ இடைப்புகுந்து விட்டிருக் கிறது. எந்தவித திட்டமிடலுமின்றி இயல்பாகவே அது கதை மாந்தரின் போக்கோடு சேர்ந்து வெளிப்பட்டுவிடுகிறது.

**பரணீ:**

**உங்களுடைய கூத்து, எழுத்து எதிஉகால செயல்பாடுகள் பற்றி கூறுங்கள்?**

**சீமான் பத்திநாதன்:**

கூத்து கலையில் உண்மையாகவே எனக்கு ஆர்வம் குறைந்துவிட்டது. அதற்கான ஒத்துழைப் பும் ஆதரவும் கிராமத்து இளைஞர் மத்தியில் இப்போது இல்லை என்றுதான் கூற வேண்டும். சினிமா போன்ற தொழிநுட்ப சாதனங்கள் பெருகிவிட்டதால் இளைஞர்கள் அதன்பால் ஈர்க்கப்பட்டுள்ளனர். ஒரு கூத்தை எழுதி என்ன செய்வது என்ற நிலை எனக்கு. ஆதலால் நான் எனது ஓய்வு நேரத்தை நாவல்கள் எழுதுவதிலேயே செலவு செய்கிறேன். வருடத்துக்கு ஒரு நாவல் என்ற திட்டமிடலுடன் இயங்கி வருகிறேன்.

**பரணீ:**

**நீங்கள் பெற்ற விருதுகள்?**

**சீமான் பத்திநாதன்:**

பெற்ற விருதுகள்

1. செழுங்கலை வித்தகர் – 2015
2. மன் கலைச்சுரபி –2017
3. முதலமைச்சர் விருது –2017
4. பெயார்வே தேசிய இலக்கிய விருது –2018 (தோற்று போனவர்கள்)
5. பெயார்வே சிறந்த நூல் வெளியீட்டாளர் விருது –2018 (தோற்று போனவர்கள்)
6. அரச இலக்கிய விருதுக்காக பரிந் துரைக்கப்பட்ட நூலிற்கான பாராட்டு சான்றிதழ் –2019 (64 டிசெம்பர் 22)
7. வடமாகாண சிறந்த நூற்பரிசு –2020 (குஞ்சரம் ஊர்ந்தோர்)
8. அரச இலக்கிய விருதுக்காக பரிந்துரைக் கப்பட்ட நூலிற்கான பாராட்டு சான்றிதழ் – 2020 (குஞ்சரம் ஊர்ந்தோர்)
9. அரச இலக்கிய விருதுக்காக பரிந்துரைக் கப்பட்ட நூலிற்கான பாராட்டு சான்றிதழ் – 2021 (திசையறியா பயணங்கள்)
10. கலாபூஷணம் விருது 2020
11. அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய சங்க வெற்றி விருது –2021 (குஞ்சரம் ஊர்ந்தோர்)
12. “ஞானம்” சஞ்சிகை நடாத்திய மாபெரும் இலக்கியப் போட்டி 2021–முதலிடம் (குஞ்சரம் ஊர்ந்தோர்)

**பரணீ:**

**நல்ல நாவலாசிரியராக வர விரும்பும் இளம் எழுத்தாளர் களுக்கு என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?**

**சீமான் பத்திநாதன்:**

வளர்ந்து வரும் எழுத்தாளர்களுக்கு நான் கூறக்கூடியது ஒன்றுதான். இது அறிவுரை அல்ல. அறிவுரை கூறுமளவுக்கு எனக்கு அனுபவமோ ஆற்றலோ இல்லை. என் சொந்தக் கருத்தாக மட்டும் இது இருக்கட்டும். “நாம் நாமாக இருப்போம். கதைகளுக்காக அலைய வேண்டாம் நம்மைச் சுற்றியே நல்ல கதைகள் இருக்கிறதே”

இறுதியாக ஜீவநதி ஆசிரியர் பரணீ தரனுக்கு நன்றியுடனான ஒரு வேண்டுகோள்:

முன்பின் அறிமுகமில்லாத ஒரு மனிதனுக்கு சிறப்பிதழ் வெயிடும் துணிச்சல் பரணீதரனைத் தவிர இங்கே யாருக்கும் வராது என்று நினைக்கிறேன். ஈழத்தில் இலைமறைகாயாய் இருக்கும் எழுத்தாளர்கள் கலைஞர்களை சிறப்பிதழ்கள் மூலம் வெளிக்கொணரும் இம்முயற்சி இன்னும் நீடிக்க வேண்டும் என விரும்புகிறேன். எத்தனையோ பழுத்த அனுபவம் கொண்ட எழுத்துலக சிற்பிகள் தங்களை இனங்காட்டி வெளிப்படுத்த முடியாத ஏக்கங் களுடன் இன்னும் இருக்கிறார்கள். அவர்கள் மீதும் கலாமணி பரணீதரனின் கடைக்கண் பார்வை விழ வேண்டுமென இத்தருணத்தில் விண்ணப்பித்து கொள்கிறேன். உங்கள் கலைப்பணி சிறக்க இதயபூர்வமான வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்ளுகிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேன்முறையீடு

ஆயிரமாயிரமாண்டுகளாய்
ஆனந்தமாய் வாழ்ந்து வந்தோம்
பாயிரங்கள் பலபாடி
பண்பாடு வளர்த்து வந்தோம்
ஈச்சரங்கள் தோறும் எம்
ஈசன் புகழ் பாடி வந்தோம்
முத்துசலாபங்களில்
மூழ்கித் திளைத்தெழுந்து
சொத்துக்கள் மிக சேர்த்து
சுகதுக்கம் கண்டு வந்தோம்
பச்சை பயிர்விளைக்க
பாங்காக மண் திருத்தி
இச்சையுறு மா கனிகள்
எழிலாக விளைத்திருந்தோம்
எத்துணையும் இன்னலின்றி
இனிதாக வாழுங்காலை
கத்துகடல் சூழுமிந்த
கனகமணித் தீவதனை
எத்தர்கள் கூட்டமொன்று
இருளாக்கிப் போட்டதம்மா!
பித்துப் பிடித்த அந்த
பைசாசப் பரம்பரைகள்
மெத்தப் படித்தவராய்
மேலாண்மை செய்ய எண்ணி
செந்தமிழும் சிங்களமும்
சேர்ந்திலங்கும் லங்கையதை
சிந்தைநிறை சூழ்ச்சியினால்
சீர்குலைத்துப் போட்டனரே
நித்தம் உளைத்த எங்கள்
சொத்துக்கள் அத்தனையும்
பற்றி எரிய வைத்து
பாழாக்கிப் விட்டனரே
பச்சைப் பாலகர்கள் பரிதவித்து
மாண்டனரே
உத்தமர் போல் ஓடிவந்து
சத்தியங்கள் பேசுகின்ற
பக்கத்து நாட்டவரும்
இச்சகங்கள் பேசி
ஏமாற்றி விட்டடனரே
சொந்தங்கள் என்று சொன்னோர்
சூதாட்டம் ஆடினரே
இத்தனை பழிபாவம்
மொத்தமாய் செய்துவிட்டு
அத்தனையும் உங்களது
மீட்புக்காய் செய்ததன்றோ
ஒத்துழைத்து எம்மோடு
ஒருமித்து வாழுமென்று
தத்துவங்கள் மிகப் பேசி
தந்திரமாய் இயம்புகின்றார்
எங்கு முறையிடினும்
ஆங்கவர்கள் இடைப்புகுந்து
பங்கங்கள் செய்து
பாசாங்கு பண்ணுகிறார்
அங்கிங்கெனாதபடி
எங்குமுறை எம்மிறைவா
எம்மவரைக் காக்க
ஏதும் வழி இயம்பிடுமே

## மனச்சாட்சி

நகரப் பகுதியிலே
நடைபாதை ஓரத்திலே
ஒரு கை அற்ற அவன்
தன் மறுகரம் நீட்டையிலே
கவனமாய் கை தவிர்த்து
கவலையில்லா மனிதன் போல்
கடந்து நீ செல்லும் போது
கவனித்துக் கொண்டேதான்
இருக்கிறேன் நான்..


பெட்டிக்கடையருகில்
வட்டவடிவான தட்டை
தட்டி தட்டி தாளம் போட்டு
துட்டுக்காய் காத்திருக்கும்
பொட்டைக்கண்ணியை நீ
மட்டமாய் பார்த்து விட்டு
பட்டும் படாமல்
பதவிசாய் ஒதுங்குவதை
பார்த்துக் கொண்டே
இருக்கிறேன் நான்

## போராளிகள்

அதிகாலைப் பொழுதில்
கொசுக்களுக்காய் விசிறிக் கொண்டு
குனிந்த தலையுடன்
குந்தியிருக்கிறான் அவன்...

அரண்டு புரண்டு குழந்தைகள்
எழுந்தன
ஒன்றை ஒன்று குத்தியது
மற்றது பலமாய் கத்தியது
கத்தாதே அப்பு என்று
கட்டியணைக்க முயன்ற கையில்
பாதி காணாமல் போயிருந்தது

கந்தை துணிக்குள் இருந்து
அதட்டி எழுந்தாள் அன்னை
அதட்டிய அவள் முகத்தை
அருகில் சென்று பார்த்தால்
ஒரு கண்ணுக்குப் பதிலாய்
ஒரு ஓட்டை குழி மட்டும்



ஓம் காதலுக்கு
கண்ணில்லையென்பது
மெய்தான்...

அடுப்பெல்லாம் மூட்டுகிற
அலங்கோலம் இங்கில்லை
கணக்கான கடைத் தேனீர்
பார்சல் பலகாரங்கள்
ஆளுக்கு அரைச் சாப்பாடு

அது போதும் அவர்களுக்கு
அவளுக்கு கண்ணில்லையென்றோ
அவனுக்கு கையில்லையென்றோ
அவர்களுக்கு கவலையில்லை
அவர்கள் போராளிகள்...

கண்ணில்லா மனைவியை
காதலுடன் பார்த்து விட்டு
காசையும் எண்ணி
கையில் கொடுத்து விட்டு
அடுத்த நாள் பாட்டுக்காய்
அவசரமாய் புறப்பட்டான்
அவன் போராளி...

அவன் வாழ்க்கை
அப்பொழுதும் போராட்டம்
இப்பொழுதும் போராட்டம்!!

**சீமான் பத்திநாதன் பர்ணாந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் போர்த்துக்கேயர் காலம் முதல், மன்னார் மாவட்டம் பங்களிப்பை வழங்கிவருகின்றது. மன்னார் மாவட்ட மானது நாடகத்துறைக்குக் குறிப்பாக கூத்துத்துறைக்கு ஆற்றிவரும் பங்களிப்புக் கணிசமானது. அத்துறை சார்ந்தவர்களின் இலக்கியப் பங்களிப்பு அண்மைக் காலமாக ஈழத்து இலக்கியப் பரப்பை ஆக்கிரமித்து வருகின்றது. எஸ்.ஏ.உதயனின் நாவல்கள் தொடர் விருதுகள் வாயிலாக பலராலும் தொடர்ந்து வாசித்து பாராட்டப்படுவது போலவே மிக அண்மைக்காலமாக பேசப்படும் நாவலாசிரியராக சீ.பத்திநாதன் பர்ணாந்து அவர்கள் விளங்குகின்றார். சர்வதேச, தேசிய, மாகாண ரீதியாக அவரது நாவல்கள் பெற்ற விருதுகள் பரிசுகள் வாயிலாகவே நான் அவரை அறிந்தேன். 1970 ஆம் ஆண்டு நாடகத்துறைக்கு வந்தபோதிலும் 2016 ஆம் ஆண்டு முதல் நாவல் துறையில் கால் பதித்துள்ள இவர் தொடர்ந்து பல நல்ல நாவல்களை எழுதி கணிசமான கவனிப்பைப் பெறத்தொடங்கியுள்ளார். பத்திநாதன் பர்ணாந்து அவர்களின் முதல்நாவலாக விளங்கும் "கூத்து படிச்ச கதை" என்ற நாவலின் ஊடாக இவரது ஆளுமையை மதிப்பிடுவதே இச்சிறு கட்டுரையின் நோக்கம் ஆகும்.

கடற்றொழிலாளியாகவும் கூத்துக் கலைஞராகவும் நாடக ஆசிரியராகவும் தனக்குள்ள அனுபவங்களைக்கொண்டு நாவல்துறைக்குள் கால்பதித்த பத்திநாதன் அவர்கள் தனது வாழ்வனுபவங் களில் இருந்து இந்த நாவலைப் படைத்துள்ளார். 1950 1960 ஆண்டு காலப்பகுதியை மையமாகக்கொண்டு மீனவர்களின் வாழ்வியலையும் அவர்களோடு பிணைந்த கூத்துவாழ்வையும் – கிறிஸ்தவச் சூழலையும் தத்ரூபமான படைப்புவழி வெளிக்கொணர்ந்துள்ளார். கடற்றொழி லாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் உள்ள உறவையும் காலநிலையோடு போராடும் அவர்கள் வாழ்வையும் அவர்களுக்குள் இருக்கும் உள்முரண்களையும் அன்பினையும் இந்தநாவல் பேசுகின்றது.

சவிரியான் என்ற மீனவனின் வாழ்வில் பொறாமைப்படும் வேதநாயகம்பிள்ளை என்ற விவசாயி அவனது வாழ்வை எப்படி அலைக்கழிக்கலாம்

# வாழ்க்கையென்னும் கூத்தினை எழுதிய கதை: பத்திநாதன் பர்ணாந்துவின் "கூத்து படிச்ச கதை"

தருமராசா அஜந்தகுமார்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்குக் கண்டுபிடித்ததுதான் - கூத்து ஆடச் சொல்வது. ஒரு கூத்தினை அரங்கேற்றுவதற்கு செய்யும் முயற்சிகளையும் - பாடுகளையும் - அதற்குள் இருக்கும் அரசியலையும் இறுதியில் அடையும் தோல்வியையும் காணமுடிகின்றது. கூத்து என்பது கிறிஸ்தவச்சமயச் சூழலுடன் எவ்வாறு பிணைந்தது என்பதையும் மீனவர்களின் வாழ்வோடும் நம்பிக்கையோடும் புகழோடும் எவ்வாறு நெருங்கியது என்பதையும் இந்நாவல் பேசுகின்றது. அதே நேரத்தில் மனிதர்களைச் சுரண்டும் ஏமாற்றும் ஒரு வகைக் கூத்தாக வாழ்க்கை விளங்கும் அபத்தத்தையும் எடுத்துரைக்கிறது. சமய சமூக நம்பிக்கைகள் மீதான அடங்கிய விமர்சனக்குரலை இங்கு கேட்கின்றோம்.

குடி மீதான விமர்சனத்தை இந்தநாவலில் காணலாம். குடித்துக் குடித்து அறுபது ஏக்கரை அரைவாசியாக்கிய வேதநாயகம்பிள்ளை, கட்டளைக்காரர் ஆகும் ஆசையில் குடிக்க காசு செலவழிக்கும் சவிரியான், கரைவலை இழுப்பவர்களும் கூத்து ஆடுபவர்களும் பாடுபவர்களும் எப்படி மதுவுக்கு அடிமையாகியிருந்தார்கள் என்பதையும் குடியை மையப்படுத்திய சுரண்டல்களையும் வெளிப்படுத்தியுள்ளார்.

தொழில் ரீதியாகவும் சமூக ரீதியாகவும் உள்ள வேறுபாடுகளை விவசாயிகள் - மீனவர்கள் வாழ்வை வைத்து இந்தநாவலில் பேசியுள்ளார். அதுமட்டுமல்ல மீனவ சமூகத்தினர் கடன்கொடுப்பது முதல் மனிதாபிமானம் வரை எவ்வாறு வேளாண்மை செய்பவர்கள் மீது அன்புபாராட்டினார்கள் என்பதையும் காட்டுகின்றார். மீனவர்களுடன் தமது வாழ்வை ஒப்பிட்டு அங்கலாய்க்கும் குரலை வேதநாயகம்பிள்ளை வாயிலாக வெளிப்படுத்துகின்றார். ஆனால் அவர்களிடம் தேத்தண்ணி குடிக்காமல் சாதிவேறுபாட்டைக் காட்டவும் செய்தார்கள்.

"இந்தமீன்பிடிக்காரங்களுக்கு உள்ள வாழ்வு நமக்கில்லையே.. காணியில்லை.. பூமியில்லை.. ஒழுங்கான கல்வீடுமில்லை" என்ற ஏக்கமும் "இவங்கள் ஒருத்தரையும் மதிக்கமாட்டாங்கள். ஆருக்கும் அடிமைப்பட்டும் நிக்கமாட்டாங்கள்" என்ற வியப்பும் மீனவர் தொடர்பில் வெளிப்பட்டு நிற்பதையும் எடுத்துக்காட்டியுள்ளார். அவர்களிடம் உதவிக்கரம் நீட்டிக்கொண்டே "இவங்களின்ட காசைக்கரைக்க என்ன வழி?" என்று வஞ்சகம் நினைக்கும் கொடு எண்ணத்தையும் கொண்டிருந்தார்கள். அதற்கு வேதநாயகம்பிள்ளை கண்டுபிடித்த வழிதான் கூத்துப்படிக்கச் செய்வது. இங்கு கலை ஒரு சமூகத்தின் பணத்தை அழிக்கும் ஆயுதமாக ஒரு சமூகத்திற்குத் தோற்றமளிக்கின்றது.

ஆனால் கிறிஸ்தவ சமயப் பின்னணிகொண்ட மீனவர்களின் வாழ்வில் கூத்திற்கு மிகப்பெரிய அந்தஸ்தும் அதனோடு தொடர்புடையவர்களுக்குப் பெரும்புகழும் சமூகமட்டத்தில் காணப்பட்டிருக்கிறது. பரம்பரையான தொடர்ச்சியும் பாத்திர ஏற்புத்தொடர்பில் நிகழும் சர்ச்சைகளும் அதனை நிரூபித்துநிற்கின்றன. "ஏடவுக்கிறதெண்டா விளையாட்டுக்காரியம் இல்ல" என்று நாவலில் வரும் கூற்று இதனை வெளிப்படுத்துகின்றது. சமய, சமூக, பொருளாதார, நம்பிக்கை களோடு ஒன்று சேர்ந்த இக்கலையாக்கத்தின் சமூக உயர்வு விதந்தோதப்படுகின்றது. வளர்பிறைக்கு ஏடு அவிழ்க்கத் தொடங்கி மூன்று ஏசார் பழகி எத்தனையோ நடைமுறைகளின் பின்னர் பயிற்சியின் பின்னரே கூத்து அரங்கேறும். அக்கூத்து பல பின்னணிகளில் இருந்தே உருவாக்கம் பெறுகின்றது. அவர்களின் தொழில் வாழ்க்கை அதன் பின்னர் பிரகாசமாகும் என்ற நம்பிக்கை மூத்தோர் மனங்களில் எப்பொழுதோ விதைக்கப் பட்டிருந்தது.

கலை என்ற பெயரில் உருவாகும் சமய, சமூக, நம்பிக்கைகளின் மதிப்பு, அவற்றுக்குள்ளே இருக்கின்ற தந்திரங்கள், நுட்பங்கள் என்பவற்றையும் கூறினாலும் நம்பிக்கைகளின் மீது பல கேள்விகளையும் சிந்தனைகளையும் உருவாக்கத்தவறவில்லை.

மததுவேசத்தையும் பெண்வெறுப்பையும் சமூகம் இன்னும் எவ்வாறு சுமந்துகொண்டிருக்கிறது என்பதை வேதநாயகத்தின் மூலம் வெளிப்படுத்துகின்றார். சாதி, பால் வேறுபாடுகள் இல்லாது கல்வியைச் சகலருக்கும் வழங்கியவர்கள் மீதான குரூரசிந்தனை வெளிப்பாட்டைக்காணமுடிகின்றது.

"அவரது மனதில் இரண்டு தீர்மானங்கள் எழுந்தன. ஒன்று வெள்ளைக்காற சுவாமியை வெட்டிக் கொல்லணும். இரண்டு அவங்க கட்டின பள்ளிகளையெல்லாம் டைனமைட் வைத்தாவது வெடிக்கணும்"

அதே நேரத்தில் கிறிஸ்தவர்களிடம் எவ்வாறான இறுக்கம் காணப்பட்டது என்பதையும் வெளிப்படுத்தத் தவறவில்லை. வேறுசபைக்குச் சபைக்கு சென்ற குற்றத்திற்காக மாக்குவிற்கு வேதராசா வரவு படிக்காது விலக்கப்பட்டதுடன் ஊரைவிட்டே விலத்தவேண்டும் என்று கூறி வீட்டை அடித்துநொருக்கிய தன்மையையும் எடுத்துக்காட்டிய நடுநிலைமை போற்றப்படவேண்டியது ஆகும்.

கூத்தினை மூத்தவர்கள் போற்றினாலும் இளைய தலைமுறையினரிடம் அது தொடர்பான விமர்சனங்கள் இருந்ததையும் சவிரியானின் பிள்ளைகள் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். "நாடகத்துக்கு ஏடு அவிழ்த்ததில் இருந்து இந்தக் கூத்தாத்தான் இருக்கு" "மறுவா என்ன ஏடு அவிழ்த்ததில் இருந்து மீன்பாடு குறைஞ்சுகொண்டு போகுது" முதலிய விமர்சனங்கள் "மங்களம் கட்ட விட்டுப்பார் எப்பிடி பட்டுக்குவியுமெண்டு" என்ற கிராமத்தவர்களின் நம்பிக்கையின் சாட்டைச் சுழற்றலாகவே இளையவர்களின் பார்வைகள் அமைந்ததைக் காணமுடிகின்றது.

தொடங்கிய கூத்தை ஒழுங்காக முடிக்காவிட்டால் ஊர் அழிந்துபோகும் என்ற நம்பிக்கை அடிப்படையிலான பயமுறுத்தலுக்கும் தொழில் மேம்படும் என்ற நம்பிக்கைக்கு இடையிலும் கட்டளைக்காரர் ஆக்குவோம் சால்வை போர்த்தவைப்போம் என்ற ஆசை வார்த்தைகளுக்கு இரையாகி சுரண்டலுக்கு உள்ளாகும் நிலையிலும் பலவித தருணங்களை இந்நாவல் சமநேரத்தில் வெளிப்படுத்துகின்றது.

"ஊர் பஞ்சப்பட்டுப்போயிற்று. இந்தநேரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம் நமக்குத் தேவையா? படிக்கிறவன் செலவழிக்க எங்க போவான்? கடலும் கரையும் ஒத்து ஏமாத்திப் போட்டுது” என்ற சூழலே இறுதியில் வெற்றிபெற்று விடுகின்றது. அதே மழைக்கும் வெள்ளத்திற்கும் இரையாகி வேதநாயகத்தின் வேளாண்மையும் பட்டுவிடுகின்றது. திடீரென்று வேதநாயகம் மிக நல்லவராகிவிடுவது செயற்கைத்தனம் போலத் தோன்றினாலும் அது நாவலில் தவிர்க்கமுடியாதது என்பதையும் ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்.

சவிரியானின் கூத்து மோகத்திற்கும் பிள்ளைகளின் எதிர்ப்புக் குரல்களுக்கும் இடையில் நின்ற சவிரியானின் மனைவி, தற்காத்துத் தற் கொண்டான் பேணும் ஆளுமையுள்ள ஒரு பெண்ணாக இந்த நாவலில் சித்திரிக்கப்படுகின்றாள்.

“சரி குடுப்பம் என்ன செய்யிறது. இண்டைக்கு இல்லாட்டி நாளைக்குப் பட்டிட்டுப் போகுது. இந்தா என்ர காப்பு. இத வச்சுப் போட்டு எடு... ஒரு கிழமைக் குத் தொழிலைப் காப்புக் காசால சமாளிக்க எனக்கு ஏலும்“

குடிப்பதற்காக சுரண்டுபவர்களும் குடிப்பவர்களிடம் சுரண்டுபவர்களும் என்று சுரண்டலால் ஆன உலகத்தையும் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் குடியால் சூழப்பட்ட ஒரு சமூகத்தின் அபத்த முகத்தையும் பேசிய இந்தநாவல் ஏமாற்றப்பட்ட ஒருவன் பைத்தியமாகிப் போன அவலத்துடன் நிறைவுக்கு வருகின்றது.




“என்ரை பெண்டில் பிள்ளையெல்லாம் என்னை ஏமாத்துறாங்க. கடன் வாங்கி காரியம் பார்க்கிற வேதநாயகமும் ஏமாத்திப்போட்டான். கள்ளையும் சாராயத்தையும் கலந்து ஏமாத்தி குடிக்கவைச்சு கவிண்டு விழ வைச்சான். கட்டளைக்காறன், மூப்பன், கண்டவன் நிண்டவன் எல்லாம் கூடிக்குடிச்சுப் போட்டு காசுதராம ஏமாத்திப்போட்டான். சுத்தி இருந்த எல்லாரும் கோமசும் கூட என்ன ஏமாத்தி இருக்கிறான். ..எல்லாப் பயலும் என்ன ஏமாத்திப் போட்டான். இப்பொழுதும் சவிரியானுக்குக் கோபம் வரவில்லை. சிரிப்புத்தான் வந்தது. சிரித்தான்.”

இந்த நாவல் குடிப்பழக்கம், கூத்து, சமூக மதிப்பீடு கள், சுரண்டல்கள், கலையின் இடம், ஆண் - பெண் உறவுகளின் சமத்துவம், ஆளிடை வேறுபாடுகள் என்று பல விடயங்களை அழுத்தமாகப் பேசியிருக்கின்றது. மிக அழுத்தமான பாத்திரங்களின் வழி வாசிக்கத் தூண்டும் மொழியில் இந்தநாவல் நகர்ந்துள்ளது.

- அப்பா குணங்கிக்கொண்டு நிக்கிறார்
- ஊர்ப்பட்ட காசு போகப் போகுது
-விட்டுத்தள்ளுங்க சவத்த. இதெல்லாம் ஒரு செலவு எண்டு.
- கடன் காசிலயாடா சோக்கடிக்கிறா கள்ளா

கூத்தினை அரங்கேற்றுவதற்கு முன்னுள்ள ஏற்பாடுகள் - நடைமுறைகள், ஊரில் செய்தியைச் சொல்வதற்கு மணியுடன் ஒருவர் வருதல் முதலான பிரதேச உப பண்பாட்டுத் தனித்துவக் கூறுகள், தொழில் சார் நம்பிக்கைகள், சமய வாழ்வு, மனிதர்களின் குணாதிசயங்கள் எனப் பல்வற்றையும் கச்சிதமாகக் கண் முன் கொண்டு வந்துள்ளார். பல்வேறு உணர்ச்சிகளின் மோதுதலால் நாவலைச் சுவாரசியமாக்கியுள்ளார்.

96 பக்கங்களில் ஒரு பிரதேச மக்களின் வாழ்க்கை, போராட்டம், முரண்பாடு, பண்பாடு என்பவற்றையும் ஒட்டுமொத்தமான சில கேள்விகளையும் வாசகருக்குத் தூண்டியுள்ளார். அவரது பிற்கால நாவல்களுக்கான அத்திபாரத்தைத் தெளிவாக இந்நாவலில் காண முடிகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரு.சீமான்.பத்திநாதன் பர்ணாந்து பற்றிய சிறு தகவற் குறிப்பு

தந்தை:-ஆரோக்கியம் சீமான்.பர்ணாந்து.

தாய்:-சந்தாள்.மிராண்டா.

பிறந்ததிகதி:-1950-05-31

கல்வி:-
புனிதஆனாள்மகா வித்தியாலயம், வங்காலை
(.க.பொ.த.(சா/த)
மன்/எருக்கலம்பிட்டி.மத்தியகல்லூரி(க .பொ.த(உயர்தரம்.)

தொழில்:-
கடற்றொழில்
பிறப்புஇறப்புவிவாகப்பதிவுகாரர்(நானாட்டான்)

மனைவி :-
தாவீது.அமலஉற்பவம்லெம்பேர்ட்

பிள்ளைகள்:
1.டொன்பரதவல்லி
2.கோதைபரதலோசினி.
3.மீனாம்பிகை
4.இந்திரஜித் அன்ரனி
5.றொணிபரதவர்மன்.
6.ருத்ராபாண்டிமாதேவி.
7.யாஹீன் போல்.

திருமணம்:-1972.06.26

கலைத்துறைப்பிரவேசம் :
நாடகத்துறை 1970.

நாடக நாட்டுக்கூத்துப்படைப்பாளர்:
கூத்துநடிகர்.நாடகத்தயாரிப்பாளர்.

எழுத்துலகப்பிரவேசம்-2016.

படைப்புகள்:
1.கூத்துப்படிச்சகதை.
2தோற்றுப்போனவர்கள்
3.64டிசம்பர்22
4.குஞ்சரம்ஊர்ந்தோர்.
5திசையறியாப்பயணங்கள்
6.கூறியதுகூறல்.

கவிதைத்தொகுப்பு :
பாடம்.

நாடகங்கள் -
காலதேவன்கட்டளை.
வேட்டை பொக்கிஷம்.
விடுதலை
முப்பதுவெள்ளிகள்.
குருதியில்நனைந்தகோயில்
கள்வர் நடுவே கடவுள்(திருப்பாடுகளின்காட்சி)
வெடிகுண்டு
அரிச்சந்திரன்கதை:ஒருநாள்கூத்து.

நாட்டுக்கூத்துக்கள் -
சவுலும்பவுலும்
உதித்ததுவிண்மீன்.
செஞ்சோற்றுக்கடன்.

வானொலிநாடகம் -
கல்வாரிமலை(வன்னிசேவை)

பெற்றுக்கொண்டவிருதுகள் -
செழுங்கலைவித்தகர்.

மன்கலை.

சுரபிவிருது.

வடகிழக்குமாகாணகலைஇலக்கியவிழா.
திருகோணலை.

சிறந்தநாட்டுக்கூத்து(மன்னார்ப்பாங்கு செஞ்சோற்றுக்கடன்.)

பேராசிரியர் வித்தியானந்தன் நினைவுதின கூத்துப்போட்டி
(கொழும்பு செஞ்சோற்றுக்கடன்)

வடமாகாணமுதலமைச்சர்விருது

தேசியஇலக்கியவிருது.(FairwayHoldingsதோற்றுப்
போனவர்கள்-நாவல்)

சிறந்தநூல்பரிசு-வடமாகாணம்-குஞ்சரம்ஊர்ந்தோர்.

அவுஸ்திரேலியதமிழ்சங்க வெற்றிவிருது-
குஞ்சரம்ஊர்ந்தோர்(முதலிடம்)

ஞானம்சஞ்சிகைமாபெரும்இலக்கியப்போட்டிவெற்றிவிருது
குஞ்சரம்ஊர்ந்தோர் முதலிடம்

கலாபூஷணம்விருது.2020.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை நாட்டின் வட பகுதியில் பிரமாண்ட காட்சியறையுடன் அச்சுப்பதித்தல்
சார்ந்த அனைத்து விதமான வேலைகளுக்குமான ஓர் அச்சுக்கூடம்

# மதி கலர்ஸ் பிறைவேட் லிமிடட்

BEST QUALITY | BEST PLACE | BEST PRICE & YOUR BEST CHOICE

# MATHI COLOURS (PVT) LTD.

## PRINTERS & WEDDING CARDS

## OFFSET - DIGITAL - SCREEN PRINTING

உங்களுக்குத் தேவையான அனைத்து விதமான பிரின்டிங் தேவைகளையும் உடனுக்குடன் தரமாகவும், நேர்த்தியாகவும் பெற்றுக் கொள்ள நாடுங்கள்




- ஒவ்செட் பிறின்டிங்
- ஸ்கிறின் பிறின்டிங்
- டிஜிட்டல் பிறின்டிங்
- கலர் பிறின்டிங்
- கிராபிக் டிசைனிங்
- டைப் செற்றிங்
- வைண்டிங்

மற்றும் பல உங்களுக்குத் தேவையான பிறின்டிங் சேவைகளைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்...



MATHI COLOURS

NO. 10, MURUGESAR LANE, NALLUR, JAFFNA.

021 222 9285

mathicolours@gmail.com

CUSTOMER CARE

077 722 2259



இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org